விலை : 20.00
பக்கங்கள் : இருபது
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
## Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com
சங்கு 14 வள்ளுவர் ஆண்டு 2044 ஆனி 15 சனிக்கிழமை (29.06.2013) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 192

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
54 ஆண்டுகள் தரத்தில் முதன்மையான சீமெந்து

# 13 ஐ மாற்ற காய் நகர்த்துகிறது அரசு

**4 மாகாணங்கள் ஆதரவு**

(கொழும்பு)

13ஆவது திருத்த சட்ட மூலத்தில் திருத்தங்களை மேற்கொள்வதற்கு அரசாங்கம் மேற்கொண்டுள்ள நடவடிக்கைகளுக்கு ஆதரவாக இதுவரை நான்கு மாகாண சபைகள் தீர்மானங்களை நிறைவேற்றியுள்ளன. ஏனைய மாகாண சபைகளிலும் ஆதரவாகவே தீர்மானம் நிறைவேற்றப்படலாம். (19ஆம் பக்கம் பார்க்க)

**தமிழக எதிர்ப்பின் எதிரொலி**

## சீனா, ரஷ்யா, பாகிஸ்தானுக்கு படையினரை அனுப்ப உத்தேசம்

(கொழும்பு)

இந்தியாவுக்கு தமது படையினரை பயிற்சிக்காக அனுப்புவது தொர்டர்பான விடயத்தை மீள்பரிசீலனை செய்வதற்கு இலங்கை அரசாங்கம் தீர்மானித்துள்ளதாக அறிய முடிகின்றது.

இந்தியாவுக்கு பயிற்சிகளுக்காகச் செல்லும் இலங்கை படைத்தரப்பினருக்கு அங்கு எதிர்ப்புத் தெரிவிக்கப்பட்டுவரும் அதே சமயம், பயிற்சிகளுக்குச் செல்லும் அதிகாரிகளுக்குப் பாதுகாப்புத் தொடர்பில் அச்சுறுத்தல்களும், உளவியல் ரீதியான பாதிப்புகளும் ஏற்படுவதாக இலங்கை அரசாங்கம் கருதுவதாகத் தெரிகிறது.

(20ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கையை விமர்சிக்காதீர்

(கொழும்பு)

இலங்கையின் தற்போதைய நிலை குறித்து தூரத்தில் இருந்து விமர்சிப்பதை தவிர்த்து, நடைமுறைக்குச் சாத்தியமான மாற்றத்தை ஏற்படுத்த பொதுநலவாய நாடுகள் முயற்சிப்பதாக பொதுநலவாய நாடுகள் அமைப்பின் செயலாளர் நாயகம் கமலேஷ் சர்மா தெரிவித்துள்ளார்.

வெளிநாட்டு ஊடகமொன்று எழுப்பிய கேள்விக்கு பதில் அளிக்கும்

(19ஆம் பக்கம் பார்க்க)

## சூழ்நிலை கைதியாக ஜனாதிபதி மகிந்த!

### மங்கள எம். பி. தெரிவிப்பு

(கொழும்பு)

கடும்போக்குடைய மனவளர்ச்சி குன்றிய சிலரினால் நாட்டை முன்நோக்கி நகர்த்த முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் மங்கள சமரவீர தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் குறிப்பிடுகையில், நாட்டின் அனைத்து இன மக்களினாலும் ஏற்றுக்கொள்ளக் கூடிய ஓர் தீர்வுத்திட்டத்தை முன்வைக்காது, நாட்டை முன்னேற்றமடையச் செய்ய முடியாது.

இன சமூகங்களுக்கு இடையில

(19ஆம் பக்கம் பார்க்க)

## 19-வது திருத்தம் அடுத்த வாரம்

(கொழும்பு)

19-வது அரசியல் அமைப்புத் திருத்தத்தை அடுத்த வாரம் கொணடுவர எண்ணியுள்ளதாக அமைச்சரவை பேச்சாளர் அமைச்சர் ஹெகலிய ரம்புக்வெல்ல தெரிவித்துள்ளார்.

கண்டியில் நேற்று முன்தினம் நடைபெற்ற வைபமொன்றில் உரையாற்றியபோதே அமைச்சர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

அமைச்சர் ஹெகலிய ரம்புவெல்ல மேலும் தெரிவிக்கையில்,

(19ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கை - ஆபிரிக்க நல்லுறவுக்கு மகிந்தவின் விஜயம் மகத்தானது



### தன்சானிய ஜனாதிபதி பெருமிதம்

(கொழும்பு)

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் தன்சானியா விஜயம் இலங்கைக்கும் ஆபிரிக்க கண்டத்திற்கும் இடையில் அனைத்து துறைகளிலும் ஒத்துழைப்பை வளர்ப்பதற்கு நிலையானதொரு அடிப்படையையிட்டுள்ளதென தன்சானியா ஜனாதிபதி ஜக்காய மிரிசோ கிக்வெத்தே பெருமிதம் தெரிவித்துள்ளார்.

தற்பொழுது தன்சானியாவில் உத்தியோகபூர்வ விஜயத்தை

(19ஆம் பக்கம் பார்க்க)

## மேர்வின் ஆதரவாளர்கள் முன்னேஸ்வரத்தில் வழிபாடு

(கொழும்பு)

அமைச்சர் மேர்வின் சில்வா மற்றும் அவருடைய மகன் மாலக சில்வாவுக்காக அவர்களுடைய ஆதரவாளர்கள் முன்னேஸ்வரம் பத்திரகாளியம்மன் கோவிலில் விசேட பூஜை வழிபாடுகளில் ஈடுபட்டனர்.

அமைச்சருக்கும் அவருடைய மகனுக்கும் எதிராக சூழ்ச்சி செய்ததாக கூறப்படுகின்றவர்களை தண்டிக்குமாறு அவர்களுடைய

(19ஆம் பக்கம் பார்க்க)

## தமிழ் விழா 2013 இல் 'நோ பயர் சோன்'

(றொறன்ரோ)

வட அமெரிக்கத் தமிழ்ச் சங்கப் பேரவையும் கனடியத் தமிழர் பேரவையும் இணைந்து வழங்கும் 26-வது தமிழ் விழா எதிர்வரும் யூலை 5-ம் நாள் முதல் 7-ம் நாள் வரை றொறன்ரோ சொனி நடுவத்தில் நடைபெற ஏற்பாடாகியுள்ளது.

பெரும் எதிர்பார்ப்பை ஏற்படுத்தியுள்ள இந்நிகழ்வில் சனல்- 4 தொலைக்காட்சியின் "நோ பயர் சோன்" ஆவணத்திரைப்படம் காண்பிக்கப்படுவதோடு, இயக்குநர் கலம் மக்ரேயும் நேரடியாகப் பங்கேற்று உரையாற்றவுள்ளார்.

இலங்கை அரசினால் 2009 இல் வன்னியில் மேற்கொள்ளப்பட்ட இனப்படுகொலைகளை ஆவணப்படுத்துவதோடு, அதை உலகுக்கு ஆதாரங்களோடு எடுத்துரைக்கும் ஆவணப்படமாக நோ பயர்

(19ஆம் பக்கம் பார்க்க)

## 22 இலங்கையர்கள் திருப்பி அனுப்பி வைப்பு

(சிட்னி)

சட்டவிரோதமாக படகு மூலம் அவுஸ்திரேலியாவில் புகலிடம் கோரிச் சென்ற மேலும் 22 இலங்கையர்கள் திருப்பி அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக அவுஸ்திரேலிய குடிவரவு அமைச்சர் பிரன்டன் ஒகொன்னர் தெரிவித்துள்ளார்.

இவர்கள் கிறிஸ்மஸ் தீவில் இருந்து விமானம் மூலம் நேற்று முன்தினம் இலங்கைக்கு திருப்பி அனுப்பப்பட்டதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

(19ஆம் பக்கம் பார்க்க)

## இராணுவ நிர்வாகம் வடக்கில் அதிகம்!

### - ஜே. வி. பி.

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் அதிகளவு இராணுவ முகாம்கள் அமைக்கப்பட்டு வருவதாக ஜே.வி.பி ஆதரவு அமைப்பான பீ.டபிள்யூ.சீ. என்ற அமைப்பு குற்றம் சுமத்தியுள்ளது.

வடக்கில் ஜனநாயகத்தை நிலைநாட்டுவதனை விடுத்து அரசாங்கம் இராணுவ முகாம்களை அமைத்து வருவதாக ஜே.வி.பி நாடாளுமன்ற உறுப்பினர் சுனில் ஹந்துநெத்தி தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில், வடக்கின் 6000 ஏக்கர் காணிகள் இராணுவ முகாம்களை அமைப்பதற்காக சுவீகரிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாண காணிகளை அரச ஆதரவாளர்கள் பயன்படுத்திக் கொள்

(19ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

**நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்**

# இத்தாலி அனுப்புவதாக கூறி 20 லட்சம் ரூபா பண மோசடி

(யாழ்ப்பாணம்)

இத்தாலி நாட்டிற்கு அனுப்புவதாக கூறி 20 இலட்சம் பணமோசடி செய்த நபர் ஒரு வருடகாலமாக தலைமறைவாகியுள்ளார்.

இச்சம்பவம் அச்சுவேலி பொலிஸ் நிலைய பிரிவிற்குட்பட்ட பகுதியில் இடம்பெற்று உள்ளது.

கடந்த வருடம் சித்திரை மாதம் 09 ஆம் திகதி அச்சுவேலி பகுதியில் அதேயிடத்தைச் சேர்ந்த ஒருவரிடம் 20 இலட்சம் ரூபாயினை இத்தாலி நாட்டிற்கு அனுப்புவதாக கூறி பெற்றுள்ளார்.

பணத்தை பெற்ற நபர், பணம் வாங்கிய நபரிடம் தொடர்பு கொள்ளாததோடு பணத்தை கொண்டு தலைமறைவாகியுள்ளார்.

தான் ஏமாற்றப்பட்டதனை உணர்ந்த இத்தாலி நாட்டிற்கு செல்ல இருந்த நபர், சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் கடந்த 26 ஆம் திகதி முறையிட்டு உள்ளார்.

பொலிஸார் குறித்த ஏமாற்றுகாரரை கைதுசெய்ய முயன்ற போதிலும் தற்போது அவர் தலைமறைவாகியிருப்பதனால் தாம் புல னாய்வு விசாரணையினை மேற்கொண்டு வருகின்றோம் என யாழ். மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் தெரிவித்தார். (செ-4)

# மதுபோதையில் வாகனச் சாரதி; பணியிலிருந்து இடைநிறுத்தப்பட்டார்

(யாழ்ப்பாணம்)

இலங்கை போக்குவரத்து சபைக்கு சொந்தமான பேருந்து சாரதியொருவர் மதுபோதையில் வாகனத்தை செலுத்திய வேளை பொலிஸரால் கைது செய்யப்பட்டு நீதிமன்றினால் அபராதம் விதிக்கப்பட்டுள்ளார்.

சாரதி செலுத்திச் சென்ற பேருந்தில் இருந்த பயணிகள் வேறொரு பேருந்தில் ஏற்றப்பட்டு சாரதியினை கைது செய்ததோடு பேருந்தினையும் பொலிஸார், பொலிஸ் நிலையம் கொண்டு சென்றதாகவும் யாழ். மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் எம்.எம்.ஜெப்றி தெரிவித்தார்.

கடந்த 21 ஆம் திகதியன்று சாவகச்சேரி பொலிஸ் நிலைய பிரிவிற்குள் ஏ9 ஊடாக பயணித்து கொண்டிருந்த யாழ்-கொழும்பு அரச பேருந்தினை சாவகச்சேரி போக்குவரத்து பொலிஸார் வீதி ஒழுங்குமுறை தொடர்பில் சோதனை செய்துள்ளனர்.

இச்சோதனை நடவடிக்கையின் போது குறித்த அரச பேருந்தின் சாரதி மது போதையில் இருப்பது பொலிஸாரால் அவதானிக்கப்பட்டது.

சாரதியினை உடனடியாக கைது செய்த சாவகச்சேரி போக்குவரத்து பொலிஸார் அப்பேருந்தில் பயணித்த பயணிகளிற்கு மாற்று பேருந்தொன்றும் ஏற்பாடு செய்து கொடுத்து பேருந்தினையும் பொலிஸ் நிலையம் கொண்டு சென்றுள்ளனர்.

பின்னர் 25 ஆம் திகதியன்று சாரதியினை சாவகச்சேரி நீதிமன்றில் ஆஜர்ப்படுத்தியுள்ளனர்.

இதன் போது வழக்கினை விசாரணை செய்த நீதிவான் குறித்த சாரதிக்கு தண்டப்பணம் அறவிட்டதோடு 6 மாதத்திற்கு சாரதி பணியிலிருந்து இடை நிறுத்தப்பட்டுள்ளார் என பொலிஸார் தெரிவித்தனர். (செ-4)

# பரிசளிப்பு விழா

(யாழ்ப்பாணம்)

கைதடி நவீல்ட் பாடசாலையின் பரிசளிப்பு விழா இன்று சனிக்கிழமை முற்பகல் 9.30 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழக வர்த்தகத்துறை பீடாதிபதி லயன் கந்தையா தேவராஜா, திருமதி லக்ஷ்மிதேவி தேவராஜா, சிறப்பு விருந்தினராக லண்டனில் இருந்து வருகை தந்துள்ள ஒக்லோக் பாடசாலை பிரதி அதிபர் ஆன் ஈஸ்ற், கௌரவ விருந்தினராக ஜெயந்த் ஜெயவீரசிங்கம் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (செ)

# இன்னிசைப் பொழுது

(யாழ்ப்பாணம்)

வட மாகாணக் கல்வித் திணைக்களத்தால் நடத்தப்படும் **இன்னிசைப் பொழுது** நிகழ்வு இன்று சனிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு யாழ்.இந்து மகளிர் கல்லூரியின் பிரதான மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இவ்விழாவில் இசைக்கலைஞர்கள், இசை ஆர்வலர்கள், இசையிலும் மாணவர்கள் அனைவரும் கலந்து கொள்ளுமாறு வடமாகாண மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் கு. பிரேமகாந்தன் அறிவித்துள்ளார். (அ-5)

# கொள்ளைச் சந்தேக நபர்கள் நேற்று நீதிமன்றில் ஆஜர்

(கரவெட்டி)

வடமராட்சி நெல்லியடிப் பகுதியில் கையடக்கத் தொலைபேசி கடையொன்றை உடைத்து அங்கிருந்த பெறுமதியான பொருட்களை கொள்ளையடித்த சந்தேக நபர்கள் ஐவரும் நேற்று வெள்ளிக்கிழமை மன்றில் ஆஜராகினர்.

நெல்லியடி மத்திய மகா வித்தியாலய வீதியில் அமைந்துள்ள கையடக்கத் தொலைபேசி கடையொன்றை 2009-ம் ஆண்டு 10-ம் மாதம் 24-ம் திகதி இரவு அல்வாயைச் சேர்ந்த 5 நபர்கள் உடைத்து அங்கிருந்த பொருட்களை கொள்ளையடித்தனர்.

இவ்வழக்கின் முறைப்பாட்டாளரான நெல்லியடி வடக்கைச் சேர்ந்த கோபால் தவராஜா மன்றில் சாட்சியமளித்தார்.

சம்பவ தினம் கடையை உடைத்து அங்கிருந்த கையடக்கத் தொலைபேசிகள், தொலைபேசியின் உறைகள், பற்றரிகள், சார்ஜர், ரோச் லைற், 5 ஆயிரம் ரூபாய் பணம், 50 மீள் நிரப்பு அட்டைகள் என்பவை கொள்ளையடிக்கப்பட்டிருந்தது.

பின்னர் நான் கொள்ளைச் சம்பவம் தொடர்பாக நெல்லியடிப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்திருந்தேன்.

பொலிஸார் ஐந்து நபர்களைக் கைது செய்து அவர்களிடமிருந்து மேற்குறித்த பொருட்களை மீட்டனர்.

இதில் ஐந்தாவது சந்தேகநபரை மட்டும் எனக்குத் தெரியும் எனவும் அவர் அடிக்கடி கடைக்கு வந்து போவார் என்றும்

ஏனைய நான்கு சந்தேக நபர்களையும் தனக்குத் தெரியாதெனவும் மன்றில் சாட்சியமளித்தார்.

பொலிஸாரால் மீட்கப்பட்டு மன்றில் பாரப்படுத்தப்பட்ட பொருட்களைத் தனது கடையில் கொள்ளையடிக்கப்பட்ட பொருட்கள் தான் என இனங்காட்டினார்.

இவ்வழக்கை பருத்தித்துறை நீதவான் திருமதி ஸ்ரீநிதி நந்தசேகரம் எதிர்வரும் 9-ம் மாதம் 27-ம் திகதி மீண்டும் விளக்கத்திற்கு எடுத்துக் கொள்ளப்படும் என உத்தரவிட்டு வழக்கை ஒத்திவைத்தார். (செ-24)

# உதவி வழங்கல்

(யாழ்ப்பாணம்)

சுவிஸ்லாந்து வாழ் இலங்கையர்களான எஸ். பாலச்சந்திரன் மற்றும் புலம்பெயர் உறவுகளினால் சேகரிக்கப்பட்ட நிதி உதவியூடாக 100 பெண் வறிய புற்றுநோயாளருக்கான உடுபுடைவைகளும், 1300 ரூபா பெறுமதியான உலர் உணவு பொதிகளும் இன்று சனிக்கிழமை வட மாகாண புற்று நோய் தடுப்பு சங்க பணிமனையில் வழங்கப்படவுள்ளது. (செ-5)

# மண்டைதீவில் இன்று முகப்புவயல் கொடியேற்றம்

(மண்டைதீவு)

மண்டைதீவு முகப்புவயல் ஸ்ரீசிவசுப்பிரமணிய சுவாமி கோவில் வருடாந்த மகோற்சவம் இன்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது.

இன்று காலை 9 மணிக்கு வசந்த மண்டபப் பூசை இடம்பெற்று முற்பகல் 11 மணிக்கு கொடியேற்றம் இடம்பெறும். (ந)


## பிள்ளையார் இன்

*12 மணி முதல் 3 மணிவரை மிகச் சிறந்த சைவ அசைவ உணவு வகைகள் வழங்கப்படுகின்றன. வியாழன், வெள்ளி, சனி, ஞாயிறு தினங்களில் புஃவே (Buffet) முறையில் இந்திய சமையற்கலை வல்லுநர்களால் தயாரிக்கப்பட்ட உணவு வகைகள் வழங்கப்படும்.*

**சைவ உணவு: 150/-** **அசைவ உணவு 175/-**

தொடர்புகளுக்கு: இல.31, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம். 021 222 2829


(சு-3762)


# பன்னிரண்டு வருடங்களுக்குப் பின்பு நடைபெற்ற புசல்லாவை இந்து தேசிய கல்லூரியின் பரிசளிப்பு விழா





புசல்லாவை இந்து தேசிய கல்லூரியின் பரிசளிப்புவிழாவும் விஞ்ஞானகூடத்திற்கான அடிக்கல் நாட்டும் வைபவமும் 24.06.2013, திங்கட்கிழமை கல்லூரி அதிபர் திருமதி C.ரதிசந்திரிகா தலைமையில் சிறப்பாக நடைபெற்றது. ஏறத்தாழ மூன்றரைக்கோடி ரூபா செலவில் நிர்மாணிக்கப்படவுள்ள நவீன விஞ்ஞானகூடத்திற்கான அடிக்கல்லை பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட கல்வியமைச்சர் கௌரவ பந்துல குணவர்த்தனா, காலை 08.40 மணிக்கு நாட்டி வைத்தார். 09.00 மணியளவில் நடைபெற்ற வருடாந்த பரிசளிப்பு விழாவிற்கு பிரதம விருந்தினராக கல்வியமைச்சரும், கௌரவ விருந்தினராக தேசமானிய M.T.S.இராமச்சந்திரனும், சிறப்பு விருந்தினராக மத்தியமாகாண கல்வியமைச்சர் திருமதி அனுஷ்யா சிவராஜாவும் கலந்து கொண்டனர். அதிபர் தலைமையில் நடைபெற்ற பரிசளிப்பு



விழாவில் உரையாற்றிய கல்வியமைச்சர், இந்து பௌத்த கலாசாரப் பேரவையின் செயலாளர் தேசமானிய இராமச்சந்திரன் வட மாகாணத்தில் ஆற்றிவரும் சமூகசேவையை கேள்விப்பட்டு மகிழ்வடைந்தேன். மத்திய மாகாணத்திலும் இவ் இலவச இரண்டாம் மொழிக் கற்கைநெறி ஆரம்பிக்கப்படவேண்டும் எனவும் எதிர்காலத்தில் இலங்கை கல்வியமைச்சால் உருவாக்கப்படவுள்ள புதிய பட்டப்படிப்பான (B.Tec) தொழில்நுட்பப் பட்டதாரி என்ற பட்டநெறிக்காக தமிழ் பகுதிகளில் உள்ள மாணவர்களுக்கு இந்து பௌத்த கலாசாரப் பேரவையினூடாக கருத்தரங்குகளை நடாத்தி அதிகளவு மாணவர்களை இக்கற்கை நெறிக்கு உள்வாங்குவதற்கான செயற்பாடுகளை மேற்கொள்ளவேண்டுமெனவும் கேட்டுக்கொண்டார். தொடர்ந்து உரையாற்றுகையில், இக்கல்லூரிக்கு புதிய கட்டடம் மட்டுமல்ல, நவீனவசதி கொண்ட பார்வையாளர் அரங்கையும் அமைத்துத் தருவதாக உறுதியளித்தார்.



(சு-3806)


எந்தத் தொழில் தேர்ச்சியும் இல்லாமல் வெளிநாடு சென்று கூலித் தொழில் செய்வதைவிட வருமானத்துடன் தொழில் பயிற்சியையும் பெற்று, கூடுதல் வருமானத்துடனான தொழில் வாய்ப்புக்களைப் பெறுங்கள்

மாதம் 50,000/- வருமானம் & பிரித்தானிய, அவுஸ்ரேலிய சான்றிதழ்களுடன் SEGi பல்கலைக்கழகத்தில் தொழிற்பயிற்சியைப் பெற்று விரும்பிய நாட்டுக்குச் சென்று

**இலட்சக்கணக்கில் சம்பாதியுங்கள்**

- IELTS, தூதரக நேர்முகத் தேர்வு, விசா அலுவலகங்களுக்கு அலையாமல் எம்மிடமே நேரடியாக விசாவைப் பெற்றுக்கொள்ளலாம்.
- மாத வருமானத்தை உறுதிப்படுத்தும் எழுத்து மூலமான உத்தியோகபூர்வ தொழில் ஒப்பந்தம் (Job Contract) மற்றும் Work Permit
- ஃபிறிட்ஜ், வொஷிங் மெஷின், வீட்டுத் தளபாடங்கள், WiFi Internet வசதிகளுடன் நவீன சொகுசுமாடிக் கட்டடத்தில் இலவச தங்குமிட வசதி
- வெளிநாடு சென்ற பின்னரும், உங்கள் பாதுகாப்பு, வருமானம் ஆகியவற்றை உறுதிப்படுத்தும் உத்தரவாதமான தொடர் சேவை

மேலதிக விபரங்களுக்கு 0773 616 798

சிகரம் — 153, பலாலி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம். (DAMROவுக்கு முன்னால்) தொ.பே.: 021 222 00 11 மின். edusikaram@gmail.com web: www.sikaram.lk

(சு-3807)






(சு-3797)



## வீடு விற்பனைக்கு

இராசவீதி ஆவரங்கால் மேற்கில் (தொழிற்பேட்டை சந்தி அருகில்) சகல வசதியும் கொண்ட இரண்டு பரப்புக் காணியுடன் வீடு விற்பனைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு:- 0776231509

(3143)



## செல்லா சினிமா யாழ்ப்பாணம்




காட்சிகள் 10.30, 2.30, 6.30, 9.30

ஒரே தின வெளியீடு


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# இன்று ஒரு தகவல்

## வாதத்துக்கு மருந்து

ஒரு ஊரிலே பெரியவர் இருந்தார். அவர் பார்வையிழுந்தவர். வாதாடுவதிலே சாலச் சிறந்தவர். தர்க்கத்திலே மேதை.

அவரிடம் சிலர் பேசிக் கொண்டிருந்தார்கள். அப்போது அவர் சொன்னார்;

"சூரியன் வெளிச்சத்தைக் கொடுக்கிறது. சந்திரன் ஒளியைக் கொடுக்கிறது. விண்மீன்கள் மின்னி மின்னி பிரகாசிக்கிறது. வெளிச்சம் இருப்பதால்தான் நமக்கு எவ்வளவோ உபயோக மாக இருக்கிறது" என்றார்.

உடனே பார்வை இழந்த அந்தப் பெரியவர்; வெளிச்சம் என்ற ஒன்று உண்மையிலேயே இருக்கிறதா?" என்றார்.

"உண்மையிலேயே ஒளி இருக்கிறது!" என்றார்.

"நான் அதை நம்பமாட்டேன்" என்று கூறினார்.

"சூரியன்... சந்திரன்... நட்சத்திரம்... இவையெல்லாம் இருக் கிறதாகச் சொன்னார்கள்"

அதையெல்லாம் ஒப்புக் கொள்கிறேன். ஆனால்... அதையெ ல்லாம் என்னை சற்றுத் தொட்டுப் பார்க்க விடுங்கள்" என்றார்.

"அவற்றினை தொட்டு அறிய முடியாது" என்றார்.

"அப்படியென்றால்... முகர்ந்து அறிகிறேன். முகர்ந்து பார்க்க விடுங்கள்... ஏதாவது வாசனை வருகிறதா... என்று பார்க்கி றேன்" என்று சொன்னார்.

"அதுவும் முடியாது" என்றார்.

"சரி... அதுவும் முடியவில்லையென்றால், அந்த வெளிச்சத் திலே சிறிதளவு எடுத்து என் கையிலே கொடுங்கள். வாயிலே போட்டு விழுங்கி ருசித்துக் கொள்கிறேன்" என்றார்.

அவரை எந்த வகையிலேயும் ஒப்புக்கொள்ள வைக்க முடிய வில்லை.

அவரைச் சுற்றியிருந்தவர்கள் எல்லோரும் குழப்பமடைந் தார்கள்.

"என்ன... நாங்கள் சொல்வதை நீங்கள் நம்பவில்லையா?" என்றார்.

என்னுடைய நான்கு புலன்களுக்கும் புலப்படாத ஒன்றை நான் "மாயை" என்கிறேன். நீங்கள் என்னை அவமானப்படுத் துவதற்காக இப்படிச் சொல்கிறீர்கள் என்று நினைக் கிறேன்.

ஏதோ உங்களுக்கெல்லாம் "பார்வை" இருப்பதாகவும்... அது எனக்கு இல்லை என்று சொல்லி நீங்கள் அவமதிக்கிறீர்கள்" அப்படியென்றார் தர்க்க சாஸ்திரத்திலே மேதையான அந்தப் பெரியவர்.

சுற்றியிருந்தவர்கள் பார்த்தார்கள்... "வெளிச்சம் இருக் கிறதை இவர் நம்ப வேண்டும்... இவரை நம்ப வைக்க வேண்டு மென்றால்... அது புத்தராலேதான் முடியும்" என்று கூறி னார்கள்.

"சரி அவரிடம் போவோம்" என்று எல்லோரும் முடிவெடுத்து போய்ச் சேர்ந்தார்கள்.

புத்தரிடம் விபரத்தை எடுத்துரைத்தார்கள்.

புத்தர் சிரித்தார். உண்மை எப்படிப்பட்டது என்று நான் நினைக் கிறேனோ அப்படித்தான் அவரும் நினைக்கிறார். எதையும் அனுபவபூர்வமாக உணர்ந்தால்தான் நம்பமுடியும்.

"ஒளியை அனுபவித்து அறியாத வரையில் அது இருக்கிறதா இல்லையா என்ற கேள்விக்கே இடமில்லை. அதனாலே இவர் அதை நம்பாததும் சரிதான்" என்று கூறினார்.

அதன்பின் சொன்னார்; "உங்களைக் குணப்படுத்தி விட லாம்... உங்களுக்குத் தேவை ஞானி அல்ல... மருத்துவர்தான்" என்றார்.

ஒரு வைத்தியரிடம் அழைத்துக்கொண்டு சென்றார்கள். பார்வை கிடைக்கப் பெற்றது... வெளிச்சத்தைக் கண்டதும் அவர் மகிழ்ச்சி அடைந்தார். புத்தரை வணங்கினார்.

"நான் வாதம் செய்தேன்... நீங்கள் எதிர்வாதம் செய்ய வில்லை. என்னுடைய பிரச்சினை மருத்துவரால்தான் தீரும் என்று சொல்லி எனக்குப் பார்வை கிடைக்கச் செய்தீர்கள்" என்றார்.

மனித குலத்தின் மிகப் பெரும்பாலானவர்கள் நிலைமை இதுதான் அப்படியென்கிறார் ஓஷோ!

இந்தக் காலத்திலே சில பேர் கண்களைத் திறந்து கொண்டு சில காரியங்கள் செய்வார்கள். அது பிழையென்பது அவர்களுக் குப் பின்புதான் புரியும்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# யாழில் கடந்த வாரத்தில் 214 பேர் கைதாகினர்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் கடந்த வாரம் 214 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என யாழ். மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் எம்.எம். ஜெப்றி தெரிவித் தார்.

யாழ்ப்பாணம் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் பிரிவிற்குள் பொருட் களை அடித்து உடைத்து நட்டம் ஏற் படுத்திய ஒருவரும் பிறருக்கு அடி த்து காயமேற்படுத்திய 37 பேரும் சந்தேகத்தின் பேரில் 7 பேரும் திரு ட்டுப் பொருட்களை தன்வசம் வைத் திருந்திருந்த ஒருவரும், பிடியாணை பிறப்பிக்கப்பட்ட 27 பேரும் மது போதையில் வாகனம் செலுத்திய 17 வாகன சாரதிகளும் வீதி விபத்தினை ஏற்படுத்திய ஒருவரும் அனுமதியி ன்றி சாரயம் விற்பனை செய்த 14 பேரும் திருட்டில் ஈடுபட்ட 2 பேரும் பொது இடத்தில் மது அருந்திய 9 பேரும் அத்துமீறி பிறர் வீட்டிற்குள் நுழைந்த 4 பேருமாக மொத்தம் 120 பேர் கைது செய்யப்பட்டுள்ள னர்.

காங்கேசன்துறை பொலிஸ் அத்தியட்சகர் பிரி வுக்குள் பிடியாணை பிறப் பிக்கப்பட்ட 15 பேரும் சந் தேகத்தின் பேரில் 18 பேரும் மது போதையில் வாகனம் செலுத்திய 6 பேரும் ஏனைய குற்றங்களுக்காக 55 பேரும் மொத் தமாக 94 பேரும் கைது செய்யப்ப ட்டுள்ளனர். யாழ்ப்பாணம் மற்றும் காங்கேசன் துறை ஆகிய பொலிஸ் அத்தியட்சகர் பிரிவுகளிலிருந்தும் மொத்தம் 214 பேர் கைது செய்யப் பட்டுள்ளனர் என அத்தியட்சகர் மேலும் தெரிவித்தார். (அ-4)

# எல்லைகளை மீள் வரையறுக்கின்ற தீர்மானம் தொடர்பில் ஆராய்வு

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்திலுள்ள உள்ளூராட்சி எல்லைகளை மீள் வரைய றுக்கின்ற தீர்மானம் தொடர்பிலான கலந்துரையாடல் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தலைமையில் நடைபெற்றது.

அரசாங்க அதிபர் அலுவலகத்தில் மேற்படி விடயம் தொடர்பி லான கலந்துரையாடல் நேற்று முன்தினம் இடம்பெற்றது.

இதன்போது மாவட்டத்தின் ஒவ்வொரு பிரதேச செயலாளர்கள் ஊடாகவும் பிரதேச செயலர்கள் ஊடாகவும் நிர்ணயிக்கப்பட்ட எல்லைகள் தொடர்பில் அமைச்சர் அந்தந்த பிரதேச செயலாளர்க ளிடம் கேட்டறிந்து கொண் டார்.

அதன்பிரகாரம் 15 யாழ். மாவட்டத்திலுள்ள பிரதேச செயலர் பிரிவுகளின் வரையறுக்கப்பட்ட எல்லைகள் குறித்து இதன்போது விரிவாக கலந்துரையாடப்பட்டது.

இதில் கருத்துத் தெரிவித்த அமைச்சர், ஏனைய அரசுகளை விடவும் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச தலைமையிலான அரசு வட மாகாணத்தில் பாரிய அபிவிருத்தி செயற்றிட்டங்களை முன்னெடுத்து வருகின்றது.

இந்நிலையில் இவ்வாறான அபிவிருத்தி திட்டங்களை ஊக்கு விக்கும் முகமாகவும் மேம்படுத்தக் கூடிய வகையிலும் அனை வரும் ஒன்றிணைந்து உழைக்க வேண்டும் எனவும் கேட்டுக்கொண் டார்.

இதன்போது யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் சுந்தரம் அருமை நாயகம், ஈ.பி.டி.பியின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் தவராசா, யாழ். மாநகர முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குண ராசா, பிரதேச செயலாளர்கள் ஆகியோர் உடனிருந்தனர். (அ-6)

# சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 30 | 30 | 30 | 30 |
| உருளைக்கிழங்கு | 100 | 100-160 | 100 | 90 |
| பச்சைமிளகாய் | 100 | 80 | 100 | 120 |
| தக்காளி | 100 | 120 | 160 | 140 |
| மரவள்ளிக்கிழங்கு | 80 | 50 | 60 | 40 |
| கோவா | 100 | 100 | 120 | 120 |
| கரட் | 120 | 100 | 160 | 160 |
| பூசணி | 40 | 40 | 50 | 50 |
| புடோல் | 40 | 60 | 60 | 60 |
| வாழைக்காய் | 40 | 50 | 60 | 50 |
| சின்ன வெங்காயம் | 200 | 120-130 | 160-180 | 140-200 |
| பெரிய வெங்காயம் | 100 | 80 | 90 | 80 |
| பாகற்காய் | 100 | 100 | 120 | 100 |
| வெண்டிக்காய் | 100 | 70 | 80 | 60 |
| கருணைக் கிழங்கு | 100 | 100 | -- | 100 |
| பயற்றங்காய் | 60 | 40-80 | 60 | 60 |
| லீக்ஸ் | 100 | 160 | 160 | 160 |
| பீற்றூட் | 100 | 60 | 100 | 120 |
| கறிமிளகாய் | 100 | 120 | 140 | 160 |
| முருங்கைக்காய் | 100-120 | 200 | 400 | 200 |
| போஞ்சி | 120 | 160 | 120 | 160 |
| கத்தரிதம்புள்ள | 15 | 20 | 20 | -- |
| கீரை - 1 பிடி | 10 | 10 | 30 | 20 |
| தேசிக்காய் | 70-100 | 80 | 120 | 100 |
| தேங்காய் (ஒன்று) | 25-50 | 40 | 35 | 35-40 |
| இராசவள்ளி | 100 | 100 | 120 | 120 |

# இராசி பலன்

29.06.2013

(ஆனி 15, சனிக்கிழமை)

சூரிய உதயம் காலை 5.58 மணிக்கு
சப்தமி பின்னிரவு 4.38 மணிவரை
பூரட்டாதி முன்னிரவு 8.07 மணிவரை
இராகுகாலம் 8.56-10.26 மணிவரை
சுபநேரம் 2.56.-4.26 மணிவரை

**மேடம்** தொழில் நலன்கருதி புதிய முடிவுகள் எடுப்பீர்கள், ஆதாய மில்லாத அலைச்சல்கள் ஏற்பட லாம், கொடுக்கல்-வாங்கல்களில் அதிக அக்கறை காட்டுவீர்கள், சயன சுகக் குறைவான நாள்.

**இடபம்** இல்லத்தில் இனிய சம்பவங்கள் நடைபெறுவதற்கான வாய்ப்புண்டு, ஆச்சரியமான தகவல்கள் வந்து சேரலாம், கௌரவமான நாள், பொருளாதார நிலையில் முன்னே ற்றமுண்டு.

**மிதுனம்** தொட்ட காரியங்களில் வெற்றி பெறுவீர்கள், புதிய சொத்துக்கள் வாங்கும் எண்ணம் மேலோங்கும், நண்பர்கள் உதவி செய்ய முன்வரு வர், விருந்துகளில் கலந்து மகிழும் நாள்.

**கடகம்** பயணங்களால் பலனுண்டு, உடல் நலம் சீராகும், பூர்வீகச் சொத்துக் களால் நன்மையுண்டு, ஆன்றோர் சந்திப்புண்டு, உடல் உழைப்பில் அதிக ஈடுபாடு காட்டுவீர்கள், தேவையற்ற பயமுண்டாகும்.

**சிங்கம்** வீண் தொல்லைகள் ஏற்படலாம், போசன சுகமுண்டு, எடுத்த காரி யத்தை முடிக்க அதிக பிரயாசை காட்ட வேண்டிய நாள், உடல் நல னில் அதிக அக்கறை காட்டுவீர்கள்.

**கன்னி** எடுத்த காரியங்களில் எளிதில் வெற்றி கிடைக்கும், நண்பர்கள் மூலம் சுப தகவல்கள் வந்து சேர லாம், தன்னம்பிக்கையோடு செயற் படுவீர்கள், பயணங்களால் பலனு ண்டு, போசன நன்மையுண்டு.

**துலாம்** தொழில், வியாபாரத்தை விரிவு படுத்தும் எண்ணம் உருவாகும், ஆரோக்கியமான நாள், திடீர் பயண ங்கள் நன்மைதரும், சுவாரஸ்யமான சம்பவங்கள் ஏற்படலாம், காரிய அனுகூலமுண்டு.

**விருச்சிகம்** தாழ்ந்த சுபாவமுண்டு, கல்வியில் ஆர்வம் காட்டுவீர்கள், பிள்ளை களால் பெருமைகள் வந்துசேர லாம், புண்ணிய காரியங்களில் ஆர் வம் காட்டுவீர்கள், சொந்தங்களால் நன்மையுண்டு.

**தனுசு** பெற்றோர் மீது பிரியம் கூடும், மனதில் இனம்புரியாத சிந்தனைகள் குடிகொள்ளும், வாகன சுகமு ண்டு, திட்டமிட்ட காரியங்கள் எதிர் பார்த்தபடி கைகூடும், சுப செல வுகள் கூடும்.

**மகரம்** பிரபலமானவர்களின் சந்திப்பால் பெருமையடைவீர்கள், குடும்ப மகிழ்ச்சி அதிகரிக்கும், வாக்கு மேன்மையுண்டு, பணவரவு திருப்தி தரும், காரிய சித்தியுண்டு.

**கும்பம்** குடும்பத்தினர் பெருமைப்படும் வகையில் சில சம்பவங்கள் நடை பெறலாம், மாதர் நட்பு, பொருள் விரயம் கூடும், நல்லவர்களின் தொடர்பும் அறிவுரையும் கிடைக் கும் வாய்ப்புண்டு.

**மீனம்** எப்படி நடக்குமோ என நினை த்த காரியம் நல்லபடியாக நடை பெறலாம், சயன சுகமுண்டு, பெரியோர் சந்திப்புண்டு, கற்பனை மிகுதியான நாள், போசன நன்மையுண்டு.

வளவன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பழுதடைந்த மின்குமிழ்களை மாற்ற நடவடிக்கை எடுக்கப்படும்


(மானிப்பாய்)

யாழ்.மானிப்பாய் நகரத்தில் பொருத்தப்பட்டுள்ள மின்விளக்குகள் இரவு நேரத்தில் ஒளிராமல் உள்ளதாகவும் இது தொடர்பில் வலி. தென்மேற்கு பிரதேச சபை எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்று பொதுமக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

சுதுமலைச் சந்தியில் இருந்து மருதடிப் பிள்ளையார் கோயில் சந்திவரையான 1.5 கிலோ மீற்றர் நீளமான வீதியில் 25 இற்கும் மேற்பட்ட மின்விளக்குகள் பொருத்தப்பட்டுள்ளன. ஒரு சில மின்விள்க்குகளைத் தவிர ஏனையவை ஒளிர்வதில்லை.

நகரத்தில் உள்ள வர்த்தக நிலையங்கள் மூடும் வரை நகரம் வெளிச்சத்துடன் காணப்படுவதாகவும் வர்த்தக நிலையங்கள் மூடப்பட்ட பின்னர் இருளில் மூழ்குவதாகவும் அப்பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பில் வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபைத் தலைவர் ஜெபநேசனிடம் கேட்டபோது, கடந்த பெருமழை காரணமாக பெருமளவான மின்குமிழ்கள் பழுதடைந்துள்ளதாகவும் அவ்வாறு பழுதடைந்துள்ள மின்குமிழ்களுக்கு பதிலாக புதிய மின்குமிழ்கள் பொருத்துவதற்கு மின்சார சபையிடம் கோரியுள்ளதாகவும் விரைவில் அதற்குரிய ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (அ-ம-23)




நன்றி :ஜலன்ட்

# சந்தேக நபர்களுக்கு விளக்கமறியல்

(கரவெட்டி)

வடமராட்சி துன்னாலை வேம்படி பகுதியில் இருதரப்புக்கு இடையில் ஏற்பட்ட கைகலப்பில் இருதரப்பை சேர்ந்த நபர்களை காயப்படுத்திய நான்கு சந்தேக நபர்களையும் எதிர்வரும் ஜூலை மாதம் 12 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு பருத்தித்துறை நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டுள்ளது.

துன்னாலை வேம்படி பகுதியில் சம்பவ தினம் இருதரப்பிற்கு இடையே ஏற்பட்ட கைகலப்பில் இருதரப்பைச் சேர்ந்த நபர்களும் காயங்களுக்குள்ளாகியுள்ளனர்.

அத்துடன் இவர்களால் நெல்லியடி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டது.

குறித்த நான்கு நபர்களையும் நேற்றையதினம் பருத்தித்துறை நீதவான் நீதிமன்ற நீதவான் திருமதி ஸ்ரீநிதி நந்தசேகரம் முன்னிலையில் மன்றில் பொலிஸார் ஆஜர்படுத்தினர்.

வழக்கை விசாரித்த நீதவான் இருதரப்பை சேர்ந்த நான்கு சந்தேக நபர்களையும் எதிர்வரும் 14 நாட்கள் விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார். (அ-ம-24)

# மோ.சைக்கிளில் ஆவணமின்றி பயணித்த இருவருக்கு அபராதம்

(கரவெட்டி)

நெல்லியடி பிரதேசத்தில் மோட்டார் சைக்களில் ஆவணம் இன்றி பயணித்த இருநபர்களுக்கு 22 ஆயிரத்து 500 ரூபா அபராதம் விதித்து பருத்தித்துறை நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டுள்ளது.




நெல்லியடி பிரதேசத்தில் வெவ்வேறு இடங்களில் மோட்டார் சைக்களில் இரு நபர்கள், மது போதையுடனும் சாரதி அனுமதி பத்திரம், காப்புறுதிப் பத்திரம், வருமானவரி பத்திரம் ஆகியவற்றை தம்சவம் வைத்திருக்கவில்லை என்ற நான்கு குற்றச்சாட்டுக்களை முன்வைத்தும் பொலிஸாரால் வழக்கு பதிவு செய்யப்பட்டு, நேற்றையதினம் பருத்தித்துறை நீதவான் நீதிமன்ற நீதவான் திருமதி ஸ்ரீநிதி நந்த சேகரம் முன்னிலையில் மன்றில் ஆஜர்படுத்தப்பட்டனர்.

இவ் வழக்கை விசாரித்த நீதவான் இரு நபர்களுக்கும் மேற்படி அபராதத்தை செலுத்த உத்தரவிட்டார். இதில் ஒரு நபருக்கு மூன்று குற்றச்சாட்டுகளுக்கு 13 ஆயிரத்து 500 ரூபாவும் மற்றைய நபருக்கு மூன்று குற்றச்சாட்டுகளுக்கு 9 ஆயிரம் ரூபாவும் அபராதமாக செலுத்துமாறு உத்தரவிட்டார். (அ-ம-24)

# வேலணை பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட ஏழு கிராம சேவகர்கள் பணிப் புறக்கணிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.வேலணை பிரதேச செயலகத்திற்குட்பட்ட 7 கிராம சேவையாளர்களும் தமது அலுவலகப் பணிகளை நேற்றுமுன்தினம் புறக்கணித்ததோடு பிரதேச செயலகத்திலிருந்தபடியே கடமையாற்றியுள்ளனர்.

இதனால் பொதுமக்கள் பெரும் அசௌகரியங்களை எதிர்கொண்டனர். புங்குடுதீவு முதலாம் வட்டாரத்திலுள்ள ஜே/26 கிராம சேவையாளரின் அலுவலகத்தினுள் கடந்த 24 ஆம் திகதி பிற்பகல் 1.30 மணியளவில் மது போதையில் அத்துமீறி நுழைந்த இருவர் கிராம சேவையாளருடன் அநாகரிகமான முறையில் நடந்து கொண்டதோடு, அலு வலகத்திலிருந்த கிராம சேவையாளரின் பதவி முத்திரையையும் எடுத்துச் சென்றதோடு அங்கிருந்த ஆவணங்களையும் சேதப்படுத்தியிருந்தனர்.

இந்தச் சம்பவத்தையடுத்து நேற்று முன்தினம் வேலணை பிரதேச செயலகத்திற்குட்பட்ட 7 கிராம சேவையாளர்களும் தமது அலுவலகப் பணிகளை புறக்கணித்ததோடு குறித்த நபர்களைக் கைது செய்து உரிய சட்ட நடவடிக்கை எடுக்கும் வரை தமது அலுவலகப் பணிகளை தொடரமாட்டோம் எனவும் வேலணை பிரதேச செயலகத்திலிருந்தே பணியினை மேற்கொள்வோம் எனவும் பிரதேச செயலாளருக்கு கடிதம் மூலம் அறிவித்துள்ளனர்.

இதனை யாழ்.மாவட்ட செயலகத்தில் அரசாங்க அதிபர் சுந்தரம் அருமைநாயகம் தலைமையில் நேற்றுமுன்தினம் இடம் பெற்ற யாழ். சிவில் பாதுகாப்பு குழுக்கூட்டத்தில் பிரதேச செயலாளர் தெரிவித்திருந்தார். இதில் பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே.என். டக்ளஸ் தேவானந்தா, யாழ். மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் முஹமட் ஜெப்றி, யாழ்.மாநகர சபை முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராஜா உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

மேற்படி சம்பவம் தொடர்பாக ஊர்காவற்றுறைப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. இருப்பினும் குறித்த சம்பவத்துடன் தொடர்புடைய நபர்கள் தலைமறைவாகிவிட்டதனால் நேற்றுமுன்திம் வரை எவரும் கைது செய்யப்படவில்லை.

நீதிமன்றத்தினால் பிடியாணை பிறப்பிக்கப்பட்ட குறித்த சம்பவத்துடன் நேரடியாக தொடர்புபட்ட நபரை கிராம சேவையாளர் தன்னை வந்து சந்திக்குமாறு கூறியதையடுத்து இவ்வாறு தனது நண்பருடன் மது போதையில் சென்ற நபர் அநாகரிகமான முறையில் நடந்து கொண்டுள்ளார். (அ-6)

# சௌந்தரராஜனின் நினைவுநாள் நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

ஸ்ரீமுருகன் ஒலி,ஒளி அமைப்பாளர்களினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள ரீ.எம்.சௌந்தரராஜனின் நினைவு நாள் நிகழ்வு நாளை ஞாயிற்றுக்கிழமை மாலை 6 மணிக்கு யாழ்.வண்ணார்பண்ணை வள்ளுவன் சன சமூக நிலையத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்விற்கான சிறப்புரைகளை இரா. செல்வவடிவேல், சி.இளங்கோ ஆகியோர் வழங்கவுள்ளனர். (அ-5)








யாழ்.இந்து ஆரம்பப் பாடசாலையின் வருடாந்த இல்லமெய்வல்லுநர் போட்டி அண்மையில் பாடசாலை மைதானத்தில் நடைபெற்றது. இவ் விளையாட்டு போட்டியில் பாடசாலையின் அதிபர் சு.தியாகலிங்கம் பாடசாலை கொடியை ஏற்றி வைப்பதையும், பாடசாலையின் மேலைத்தேய வாத்திய அணியினருடன் மாணவர்கள் அணிவகுத்து நிற்பதையும், வெற்றிபெற்ற இல்லத்திற்கு விளையாட்டு போட்டியில் பிரதம விருந்தினராக கலந்து கொண்ட யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியின் பீடாதிபதி ச. அமிர்தலிங்கம் வெற்றிக் கேடயம் வழங்குவதையும் படங்களில் காணலாம்.

(படங்கள்:-எஸ்.ஆர்.கரன்,உ.சாளீன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 13 ஆவது திருத்தம் தொடர்பில் பாராளுமன்றம் தீர்மானிக்கும்

## ஜனாதிபதி கூறினாராம்

(கொழும்பு)

13 ஆவது திருத்தச் சட்டம் இலங்கையின் மீது பலவந்தமாக திணிக்கப்பட்டது என இலங்கை அரசாங்கம் தெரிவித்துள்ளது.

1987 ஆம் ஆண்டு இலங்கை- இந்திய உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்ட போதிலும் உடன்படிக்கையில் இலங்கை சுய விருப்பின் அடிப்படையில் கைச்சாத்திடப்படவில்லை என அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா தெரிவித்துள்ளார்.

இவ்விடயம் தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கை அரசாங்கத்தின் மீது கடுமையான அழுத்தங்களை பிரயோகித்தே இந்திய- இலங்கை உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டது.

13 ஆவது திருத்தச் சட்டத்தில் நல்ல விடயங்களும் தீய விடயங்களும் காணப்படுகின்றன.

எனவே இந்த விடயத்தில் மாற்றம் செய்யப்பட வேண்டிய அவசியம் எழுந்துள்ளது.

சமாதானத்தை பெற்றுக் கொள்வதற்காக அனைத்து விடயங்களையும் மேற்கொள்ள மக்கள் தயாராக இருக்கின்றனர்.

இந்திய -இலங்கை உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்ட காலத்திலேயே ஜே.வி.பியும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும் 13 ஆவது திருத்தச்சட்டத்தை எதிர்த்தன.

தற்போது மீண்டும் 13 ஆம் திருத்தச் சட்டம் தொடர்பில் கேள்விகள், விவாதங்கள் எழுந்துள்ளன. சிலர் அதனை எதிர்க்கின்றனர். சிலர் அதனை ஆதரிக்கின்றனர்.

எனவே இந்த விடயம் குறித்து பாராளுமன்றம் தீர்மானிக்கட்டும் என ஜனாதிபதி அறிவுறுத்தல் விடுத்துள்ளதாக அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா மேலும் தெரிவித்துள்ளார்.

(அ-2)


வலம்புரி விளம்பரத் தொடர்புகளுக்கு:
T.P : 021 321 0815, 021 567 1540
E-mail : valampuriijaffna@gmail.com



இவர்களுக்கு மணமகள் தேவை — கல்யாண மாலை — இவர்களுக்கு மணமகன் தேவை

| மணமகள் தேவை | மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1978 இந்து(V)<br>நட்சத்திரம்: ஆயிலியம் 4<br>கி.பா : 74.25 செவ் 7<br>உயரம்: 5'8"<br>தகைமை/தொழில்: A/L , மலேசியா<br>தொ.இ:B607 | பிறப்பு: 1982 இந்து(V)<br>நட்சத்திரம்: மகம் 1<br>கி.பா :10.25<br>உயரம்: 5'<br>தகைமை/தொழில்: A/L<br>தொ.இ:G832 |
| பிறப்பு: 1981 இந்து(V)<br>நட்சத்திரம: திருவோணம்<br>1கி.பா : 97.25, செவ் 8<br>உயரம்: 5'9"<br>தகைமை/தொழில்:BSc, MSc அரச நில அளவையியலாளர்<br>தொ.இ:B609 | பிறப்பு: 1973 இந்து(V)<br>நட்சத்திரம்: புனர்பூசம் 4<br>கி.பா: 2உயரம்: 5'<br>தகைமை/தொழில்: A/L , ஆசிரியைவிவாகரத்து பெற்றவர்<br>தொ.இ:G838 |
| பிறப்பு: 1980 இந்து(V)<br>நட்சத்திரம்: பூசம் 2<br>கி.பா :36<br>உயரம்: 5'5"<br>தகைமை/தொழில்:A/L கனடா PR<br>தொ.இ:B613 | பிறப்பு: 1982 இந்து(KO)<br>நட்சத்திரம்: பரணி 2<br>கி.பா : 16.25, செவ் 2<br>உயரம்: 5'<br>தகைமை/தொழில்: A/Lகணனி இயக்குநர்<br>தொ.இ:G841 |
| பிறப்பு: 1975 இந்து(V)<br>நட்சத்திரம்: ரேவதி<br>கி.பா: 3.75<br>உயரம்: 5'7"<br>தகைமை/தொழில்:வைத்தியர்<br>தொ.இ:B619 | பிறப்பு: 1982 இந்து (V)<br>நட்சத்திரம்: அனுசம் 2<br>கி.பா : 17.75, செவ் 4<br>உயரம்: 5'7"<br>தகைமை/தொழில்:O/Lபிரான்ஸ்<br>தொ.இ:G 1840 |

சகல தொடர்புகளுக்கும்:-
கல்யாண மாலை
(சர்வதேச இலவச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.
( ஒவ்வொரு செவ்வாய்க்கிழமையும் கல்யாணமாலை விடுமுறை தினம் என்பதனையும் அறியத்தருகின்றோம் )
ஊடக அனுசரணை வலம்புரி



## கல்வி நிர்வாக சேவை வழிகாட்டல் செயலமர்வு , சுற்று - 02

- யாழ்ப்பாணத்தில் 06.07.2013 சனிக்கிழமை 8.30 மணி
- மட்டக்களப்பில் 29.06.2013 சனி காலை 8.30 மணி (இன்று)

ஏற்கனவே பதிவு செய்தவர்களை விட புதிதாகக் கலந்துகொள்ள விரும்புபவர்கள் பின்வரும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொண்டு பதிவுகளை மேற்கொள்ளவும்.

தொ.பே: 0779360607

பா.தனபாலன் (பணிப்பாளர்)
ஆசிரிய வாண்மை விருத்தி நிறுவகம்
528, பலாலி வீதி, திருநெல்வேலி. (3142)


## மஹோற்சவம்

(யாழ்ப்பாணம்)

நல்லூர் மூத்தவிநாயகர் தேவஸ்தான வருடாந்த மஹோற்சவம் எதிர்வரும் ஜூலை மாதம் 5 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 10 தினங்கள் திருவிழா இடம் பெறவுள்ளது.

எதிர்வரும் ஜூலை 13ஆம் திகதி சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு தேர்த் திரு விழாவும் மறுநாள் ஞாயிற்றுக்கிழமை 10 மணிக்கு தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறவுள்ளது.

(அ)


## பாராட்டி வாழ்த்துகின்றோம்



தேசமான்ய
து.கு.ஜெகதீஸ்வரக் குருக்கள்
J.P

புன்னாலைக் கட்டுவன் ஆயாக் கடவை ஸ்ரீ சித்தி விநாயகர் தேவஸ்தான மகோற்சவ குருவாக விளங்கும் கலாநிதி து.கு.ஜெகதீஸ்வரக் குருக்கள் (JP) அவர்களின் சமய, சமூக பணிகளை பாராட்டி அகில இன நல்லுறவு ஒன்றியத்தினால் சாமஸ்ரீ தேவமான்ய விருது வழங்கிக் கௌரவிக்கப்படுவதையிட்டு பாராட்டி வாழ்த்துகின்றோம்.

ஈவினை மதுரையம்பதி மீனாட்சியம்பாள் ஆலய அறங்காவலராகவும் நல்லை ஆதீன சிவாச்சாரியாராகவும் தெய்வீகப் பணியாற்றி வரும் குருக்களின் சேவைகள் மேலும் மிளிர வாழ்த்துகின்றோம்.

ஆயாக்கடவை சித்திவிநாயகர் தேவஸ்தானம்,
புன்னாலைக் கட்டுவன். (3141)

பிரம்மஸ்ரீ பா.சுந்தரராஜசர்மா,
ஸ்தானிககுரு.



## தொடர்ந்தும் உங்கள் சேவையில்....

உலகெங்குமுள்ள உறவுகளுக்கு உடனுக்குடன்
- கடிதங்கள்
- அன்பளிப்பு பொருட்கள்
- உடுபுடவைகள்
- CD, VCD க்கள் அனுப்பவும் உலகெங்குமுள்ள உறவுகளிடமி ருந்து Western Union மூலம் அனுப்பிய பணத்தை ஒரு சில நிமிடங்களில் பெற்றுக் கொள்ளவும். தொலைபேசி அட்டைகளைப் பெற்றுக்கொள்ளவும்.

ஸ்ரீமுருகன் தொலைத் தொடர்பகம்
303, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்.
T.P. No :-0212225392
WESTERN UNION MONEY TRANSFER
(C-3199)



## சமாதானப் பெருந்தொனி

"உங்கள் துக்கம் சந்தோஷமாய் மாறும்..." (யோவான் 16:20)

கவலையா, கண்ணீரா,
தீராத வியாதியா,
பிசாசின் பிடியா,
வியாபாரத் தோல்விகளா,
பில்லி – சூனியக்கட்டுக்களா,
பாவங்களா,
பரம்பரை சாபங்களா,
அடிமைத்தனங்களா,
ஆகியவற்றிலிருந்து...

இயேசு விடுதலை கொடுக்கிறார்...

காலம் : ஆனி மாதம் 28,29,30ம் திகதிகளில்
நேரம் : தினமும் மாலை 4.00 மணிக்கு
இடம் : பிரதேச சபை மைதானம் , பரந்தன் வீதி , புதுக்குடியிருப்பு.
(பெற்றோல் செற் முன்பாக)

இலங்கை [illegible] சபை,
1ம் வட்டாரம்,வேணாவில்,புதுக்குடியிருப்பு.

இயேசு செய்த அற்புதங்களில் சில...

❋ குருதிப்புற்று நோயிலிருந்து விடுதலை (லூக்கோமியா)



எனக்கு மூன்று வருடங்களாக இருந்த குருதிப்புற்று நோயால் பாதிக்கப்பட்டு அவதிப்பட்டேன் ஜெப வேளையில் பரிபூரண விடுதலையை பெற்றுக்கொண்டேன்.
(ச.பரணிதரன் – புத்தூர்)

❋ மார்பக புற்று நோயிலிருந்து அற்புத விடுதலை



எனக்கு மார்பகத்தில் இருந்த புற்றுநோயால் அவதிப்பட்டுக்கொண்டிருந்த வேளையில் வைத்தியங்கள் பலனளிக்காத நிலையில் ஜெபத்தின் மூலம் அற்புத சுகத்தை பெற்றுக்கொண்டேன்.
(இ.யசோதா – நெடுந்தீவு)

❋ மூளையில் இருந்த கட்டி மறைந்தது



எனது மூளையில் நரம்புச்சுருக்கத்தால் ஏற்பட்ட கட்டியினால் அடிக்கடி ஏற்படும் வலிப்பு நோயினால் அவதிப்பட்டு இருந்தேன். ஜெபத்தின் மூலம் அற்புத சுகத்தை பெற்றுக்கொண்டேன்.
(த.தனுஷன் – நாவற்குழி)

கடந்த மாதம் முல்லைத்தீவில் நடந்த சமாதானப் பெருந்தொனி சுவிசேஷக் கூட்டத்தில் அநேகர் பல அற்புத சுகத்தை பெற்றுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

❋

(குருடர்கள் பார்வையடைந்தார்கள், செவிடர்கள் கேட்டார்கள், முடவர்கள் நடந்தார்கள். இது போன்ற பல அற்புத கள் நடைபெற்றன...)

(3127)


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# பயணிக்க முடியாத நிலையிலுள்ள உருத்திரபுர கிராம வீதிகள்

(சிவநகர்)

**கிளிநொச்சி மாவட்ட உருத்திரபுர கிராமத்திலுள்ள அனைத்து வீதிகளும் சேதமடைந்துள்ளதால் போக்குவரத்தை மேற்கொள்வதில் பல அசௌகரியங்களை எதிர்நோக்கி வருவதாக அப்பகுதி மக்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.**

உருத்திரபுர கிராமம் 1948 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டதிலிருந்து இதுவரை வீதிகள் ஒழுங்காக புனரமைப்புச் செய்யப்படவில்லை என மக்களால் சுட்டிக்காட்டப்படுகின்ற வேளைகளில் மாத்திரம் சம்பந்தப்பட்டவர்களால் கிரவல்களும் மண்ணும் போட்டு மூடப்படுகின்றது.



மேற்படி கிராமத்தின் பிரதான வீதி, வீதி அபிவிருத்தித் திணைக்களத்திற்குச் சொந்தமானதாகக் காணப்படுகின்றது. இவ்வீதியின் மொத்த தூரம் 12 கிலோமீற்றர் ஆகும். இதில் 3 கிலோமீற்றர் தூரம் மட்டுமே தற்போது புனரமைக்கப்பட்டு அரைகுறையாக உள்ளது.

மேற்படி வீதியினால் பயணிக்கும் வாகனங்கள் பழுதடைவதால் தற்போது உருத்திரபுரத்தின் ஜெயந்தி நகர் வீதி ஊடாக திருநகர் வீதியை பயன்படுத்தி ஏ-9 பிரதான வீதியை அடைகின்றன.

ஜெயந்தி நகர் தொடக்கம் திருநகர் வரையான வீதி கரைச்சி பிரதேச சபையினருக்கு சொந்தமானதாகும். இவ்வீதியும் குன்றும் குழியுமாகவேதான் காணப்படுகின்றது.

ஆயினும் உருத்திரபுரத்தின் பிரதான வீதியை விட ஜெயந்தி நகர் வீதி ஓரளவு பயன்படுத்த கூடியதாக உள்ளது.

எனவே, இப்பிரதேசத்திலுள்ள பிரதான வீதியையும் உள்வீதிகளையும் சம்பந்தப்பட்டவர்களை புனரமைத்து தருமாறு அப்பகுதி மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

(ம-254)

## பயிற்சி முகாம்

(பூநகரி)

வடமாகாண தேசிய மாணவர் படையணியின் பயிற்சி முகாம் கடந்த 6 ஆம் திகதி தொடக்கம் 13 ஆம் திகதி வரை கண்டியிலுள்ள றண்டர்பே கிராமத்தில் இடம்பெற்றது.

இதில் யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்நத 24 அணிகள் பங்குபற்றின.

இப்பயிற்சி நெறியில் தலைமைத்துவப் பயிற்சி, முதலுதவி, ஆளுமை விருத்தி, வெளிக்களச் சுற்றுலா, வரைபடம் வரைதல் போன்றன வழங்கப்பட்டன.

பின்னர் கோட்டம், மாவட்டம், மாகாணம் என்ற ரீதியில் போட்டிகள் இடம்பெற்றன. இதில் பூநகரி மகாவித்தியாலயத்தை சேர்ந்த 23 குழுக்களை கொண்ட அணி பூநகரி கோட்டத்தில் முதலாம் இடத்தையும் மாவட்ட ரீதியில் இரண்டாம் இடத்தையும் மாகாண ரீதியில் ஆறாமிடத்தையும் பெற்று இதற்கான சின்னங்களையும் சான்றிதழ்களையும் பெற்றுக் கொண்டமை குறிப்பிடத்தக்கது.

(ம-84)

### முள்ளிவாய்க்கால் மேற்கு மக்களுக்கு

## வாழ்வாதார உதவிகள் வழங்கப்பட்டன

(பூந்தோட்டம்)

முல்லைத்தீவு முள்ளிவாய்க்கால் மேற்கு பகுதியில் வாழும் 100 குடும்பங்களுக்கு அமெரிக்காவின் நிதியுதவியுடன் சோபா நிறுவனத்தினால் வாழ்வாதார உதவிகள் நேற்று வழங்கப்பட்டன.

மக்களின் தேவைக்கு ஏற்றவாறு கடற்றொழில், விவசாயம், சிறு வர்த்தகம், தையல் போன்ற சுயதொழில்களுக்காக ஒரு குடும்பத்திற்கு 50 ஆயிரம் ரூபா பெறுமதியான வாழ்வாதார உதவிகள் வழங்கப்பட்டன.

முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபர் நா. வேதநாயகத்தினால் கிராம மக்களுக்கு இவ் உதவித்திட்டம் வழங்கி வைக்கப்பட்டிருந்தது. (ம-266)

## வட்டக்கச்சி பகுதியில் யானைகளின் அட்டகாசம்

(சிவநகர்)

கிளிநொச்சி இரணைமடு குளத்தை அண்டிய வட்டக்கச்சி பகுதியில் யானைகளின் அட்டகாசம் அதிகரித்துள்ளதாக அப்பகுதி மக்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். இப்பகுதியிலுள்ள பயன்தரும் தென்னை மரங்கள், பயிர் வகைகளை இரவில் வரும் யானைகள் அழிவுக்குட்படுத்தி வருகின்றன.

யானைகளின் இவ் அடாவடி கடந்த சில வாரங்களுக்கு முன்னர் ஆரம்பித்து தொடர்ச்சியாக இடம்பெற்று வருகின்றதாக மக்கள் கவலை தெரிவித்துள்ளனர். இதனால் பயன்தரு மரங்களும் பயிர்களும் அழிவடைவதோடு மக்களும் அச்சத்தில் வாழும் நிலைக்குட்பட்டுள்ளனர். எனவே, சம்பந்தப்பட்டவர்கள் உடனே இதற்குத் தீர்வு பெற்றுத் தருமாறு மக்களால் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

(ம-254)




## வீட்டுத்திட்ட உதவிகளை பாரபட்சமின்றி வழங்குங்கள்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்தின் கரைதுறைப்பற்று பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட முள்ளிவாய்க்கால் மேற்கு கிராமத்திற்கு வழங்கப்படுகின்ற வீட்டுத்திட்ட உதவிகளை மக்கள் அனைவரும் பெறக்கூடிய வகையில் நடவடிக்கை எடுக்குமாறு பாதிக்கப்பட்டவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

மேற்படி கிராம மக்கள் யுத்தத்தினால் இடம்பெயர்ந்து கடந்த 2012 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 14 ஆம் திகதி மீள்குடியேற்றப்பட்டு தற்போது 318 குடும்பங்கள் வாழ்ந்து வருகின்றன.

இங்குள்ள மக்களுக்கு வீட்டுத் திட்டங்களையும் பகுதிச் சேதங்களுக்கான உதவிகளையும் வழங்கும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இந்நிலையில் இந்திய வீட்டுத் திட்டத்தின் கீழ் 67 குடும்பங்களுக்கு நிரந்தர வீடுகளும் கரிதாஸ் கியூடெக் நிறுவனத்தின் வன்னி கிளையினூடாக 14 குடும்பங்களுக்கு நிரந்தர வீடுகளும் முல்லைத்தீவு இராணுவத்தினரால் 6 நிரந்தர வீடுகளும் வழங்கும் திட்டங்கள் கடந்த மார்ச் மாதம் முதல் ஆரம்பமாகி இன்னும் ஒரு மாத காலப் பகுதியில் நிறைவடையவுள்ளது.

இவற்றுடன் 37 குடும்பங்களுக்கு மட்டுமே பகுதிச் சேதங்களுக்கான தொகையும் வழங்கப்படவுள்ளது. ஆயினும் இவ் உதவிகள் அனைத்து மக்களுக்கும் கிடைக்கவில்லை.

எனவே, இவ் உதவிகளை பெற்றுத் தருமாறு முள்ளிவாய்க்கால் மேற்குப் பகுதி மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (ம-267)

## சிவன்சோலை கிராமத்தில் தபாற்சேவை இடம்பெறுவதில்லை

(சிவநகர்)

கிளிநொச்சி மாவட்ட சிவநகர் கிராம அலுவலர் பிரிவில் உள்ள சிவன்சோலை கிராமத்திற்கு தபால் விநியோகம் நடைபெறுவதில்லை என அப்பகுதி மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

பரந்தன் தபால் நிலையத்தின் ஊடாகவே உருத்திரபுரம் மேற்கு, உருத்திரபுரம் கிழக்கு, உருத்திரபுரம் வடக்கு, சிவநகர் ஆகிய பகுதிகளுக்கு தபால் விநியோகம் செய்யப்பட்டு வருகின்றது.

எனினும் சிவநகர் கிராமத்தோடு சேர்ந்த சிவன்சோலைக் கிராமத்திற்கு தபால் விநியோகம் நடைபெறுவதில்லை.

இப்பகுதிக்கான கடிதங்கள் சிவநகருடன் மட்டுப்படுத்தப்பட்டு இங்கே உள்ளவர்களிடமே கடித விநியோகங்கள் நடைபெறுவதால் உரிய கடிதங்களை பெற்றுக் கொள்வோர் மிகவும் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர்.

இந்த பகுதிக்கான தபால் விநியோகத்திற்குரிய பதிவுகள் தபாலகத்திற்கு இல்லை என்பதாலேயே இவ்வாறு நடைபெறுவதாக அறிய முடிகிறது.

இது சம்பந்தமாக அண்மையில் இப்பகுதிக்கு விஜயம் செய்த பாராளுமன்ற உறுப்பினர் மு.சந்திரகுமார், கரைச்சி பிரதேச செயலர், கிராம அலுவலர் ஆகியோருக்கு பொதுமக்களால் முறைப்பாடு செய்யப்பட்டது.

எனவே, இப்பகுதி மக்களின் நலன்கருதி இக்கிராமத்திற்கான தபால் விநியோகம் நடைபெறுவதற்கு இத்துறை சார்ந்தவர்களால் ஒழுங்குகள் செய்யப்பட வேண்டும் என்று அப்பகுதி மக்களால் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

(ம-254)

## விளையாட்டுப் போட்டி

(சிவநகர்)

கிளிநொச்சி கனகபுரம் சிறிகாந்தா முன்பள்ளி விளையாட்டுப் போட்டி நாளை மறுதினம் திங்கட்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு கனகபுரம் முன்பள்ளி விளையாட்டு திடலில் நடைபெறவுள்ளது.

கனகபுரம் கிராம அபிவிருத்தி சங்கத் தலைவர் செ.பாலேந்திரன் தலைமையில் நடைபெறும் இவ் விளையாட்டு நிகழ்வில் பிரதம விருந்தினராக கிளிநொச்சி அரசினர் வைத்தியசாலை வைத்தியர் செ.சுகந்தன் கலந்துகொள்ளவுள்ளார்.

சிறப்பு விருந்தினர்களாக கிளி/கனகபுரம் ம.வி ஓய்வுநிலை அதிபர் சி.சந்திரராசா, முன்பள்ளிகளின் மேல்நிலை ஆய்வாளர் எஸ்.இளங்கோ, கனகபுரம் கிராம அலுவலர் க.பற்குணசிங்கம், கரைச்சி பிரதேச முன்பள்ளிகளின் இணைப்பாளர் ர.சுதர்சன், கிளிநொச்சி நகர முன்பள்ளிகளின் இணைப்பாளர் திருமதி எஸ்.ரஜனி, கனகபுரம் முன்னாள் கிராம அபிவிருத்தி சங்கத் தலைவர் அ.கனகரத்தினம் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். (ம-254)

## கசிப்பு உற்பத்தி அதிகரிப்பு; கட்டுப்படுத்த கோரிக்கை

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்ட கரைதுறைப்பற்று பிரதேச செயலர் பிரிவில் உள்ள கொக்கிளாய் கிழக்கு, கொக்கிளாய் மேற்கு ஆகிய கிராமங்களில் கசிப்பு உற்பத்தி அதிகரித்து வருவதாக அப்பகுதி மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

மேற்குறித்த கிராமங்களில் 350 இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் வாழ்ந்து வரும் நிலையில் கசிப்பு உற்பத்தி நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றது. இதனால் அங்குள்ளவர்கள் பெரிதும் பாதிக்கப்படுகிறார்கள்.

எனவே, உரிய தரப்பினர் இதனைக் கருத்திற் கொண்டு உடன் நடவடிக்கை எடுக்க வேண்டுமென அப்பகுதி மக்கள் கோரிக்கை ஒன்றை முன்வைத்துள்ளனர். (ம-267)

## பிரதேச செயலக ஊழியர்களுக்கு அனர்த்த முகாமைத்துவ பயிற்சி

வவுனியா நெடுங்கேணி பிரதேச செயலக ஊழியர்களுக்கு அனர்த்த முகாமைத்துவ வவுனியா கிளையினால் அனர்த்த முகாமைத்துவம் தொடர்பான பயிற்சி நெறிகள் வழங்கப்பட்டுள்ளன.

பிரதேச செயலகத்தின் கேட்போர் கூடத்தில் நேற்று உதவி பிரதேச செயலாளர் வி. ஆயகுலன் தலைமையில் இடம்பெற்ற இப் பயிற்சி நெறியின் பொது அரச ஊழியர்கள் அனர்த்தத்தின்போது மேற்கொள்ள வேண்டிய நடைமுறைகள், அனர்த்தத்தில் மக்களுக்கு பணியாற்றுவது, அனர்த்தத்தின்போது முதலுதவிகள் வழங்குதல் போன்ற பயிற்சிகள் அதன்போது தெளிவுபடுத்தப்பட்டிருந்தது.

இதேவேளை, அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் வேலைத் திட்டங்கள், அதற்கு பொது மக்களால் வழங்கப்பட வேண்டிய பங்களிப்புகள் என்பன தொடர்பிலும் விழிப்புணர்வு செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

இப் பயிற்சி நெறிகளை அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் வவுனியா மாவட்ட உதவி பணிப்பாளர் ரி.என். சூரியராஜா, இலங்கை செஞ்சிலுவை சங்கத்தின் உத்தியோகத்தர் கே. ராஜ்சங்கர் ஆகியோர் வழங்கியிருந்தனர். (ம-266)

## அலங்கார உற்சவம்

(சிவநகர்)

கிளிநொச்சி கணேசபுரம் அருள்மிகு சர்வார்த்த சித்தி விநாயர் ஆலய வருடாந்த அலங்கார உற்சவ பெருவிழா நாளை ஞாயிற்றுக்கிழமை ஆரம்பமாகி எதிர்வரும் ஜூலை மாதம் 9 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை தீர்த்த உற்சவத்துடன் நிறைவடையவுள்ளது.

இறுதி நாளான 9 ஆம் திகதி விநாயக பெருமானுடைய மஹா கும்பாபிஷேக தினத்திலே 108 சங்குகள் வைத்து தீர்த்த உற்சவம் நடைபெறவுள்ளதாக ஆலய பரிபாலன சபையினர் அறிவித்துள்ளனர்.

(ம-254)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாராளுமன்ற தெரிவுக்குழுவை ஆதரிக்காதோர் விரோதிகள்

## அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தெரிவிப்பு

(கொழும்பு)

**அரசியலமைப்பு திருத்தம் தொடர்பிலான பாராளுமன்றத் தெரிவக்குழுவுக்க ஆதரவு வழங்காத கட்சியினர் ஜனநாயக விரோதிகளாவே கருதப்படுவர் என அமைச்சரவைப் பேச்சாளரும் தகவல் ஊடகத்துறை அமைச்சருமான கெஹலிய ரம்புக்வெல தெரிவித்துள்ளார். 13ஆவது திருத்தம் தொடர்பில் பல்வேறு சர்ச்சைகள் எழுந்துள்ள நிலையில் பாராளுமன்றத் தெரிவுக்குழுவின் செயற்பாடுகள் தொடர்பில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில், நாட்டின் நலனை முன்னிறுத்தி அரசாங்கம் மேற்கொள்ளும் ஜனநாயக ரீதியிலான செயற்பாடுகளுக்கு சகல கட்சிகளும் ஆதரவ ளிக்க வேண்டும். அவ்வாறு ஆதரவளிக்காத வர்கள் ஜனநாயக விரோதிகளாவர் எனவும் அமைச்சர் தெரிவித்தார். எதிர்வரும் ஜூலை 9ஆம் திகதி நடைபெறவுள்ள அரசியலமைப் புத் திருத்தம் தொடர்பில் ஆராயும் பாராளும ன்றத் தெரிவுக்குழுவில் பங்கேற்குமாறுகோரி அதனை எதிர்க்கும் கட்சிகளுடன் அரசாங்கம் இதற்கு இடைப்பட்ட காலத்தில் பேச்சுவார்த் தைகள் நடத்துமா அல்லது அது தொடர்பில் ஏதாயினும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா என அமைச்சரிடம் வினவப்பட்டது.

இதற்குப் பதிலளித்த அமைச்சர் அரசாங்கம் திறந்த அழைப்பை விடுத்துள்ளது. இந்த வெளிப்படையான அழைப்பு பேச்சு நடத்தியதற்குச் சமனானது எனவும் தெரிவித்தார்.

அரசியலமைப்பு திருத்தம் தொடர்பாக ஆராய்வதற்கு பாராளுமன்றத் தெரிவுக்குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது. அதன் முதலாவது அமர்வு எதிர்வரும் ஜூலை 9 ஆம் திகதி நடைபெறவுள்ளது. அரசாங்கம் அனைத்துக் கட்சிகளுக்கும் அழைப்பு விடுத்துள்ளது. ஜனநாயக ரீதியாக இதற்கான சகல நடவடிக்கைகளையும் அரசாங்கம் உச்ச அளவில் எடுத்துள்ளது. பாராளுமன்றத் தெரிவுக்குழுவுக்கு ஐ.தே.க, ஜே.வி.பி., தமிழ்த் தேசியக்கூட்டமைப்பு உள்ளிட்ட கட்சிகள் சமுகமளிப்பதில்லை எனத் தெரிவித்துள்ளதுடன் அதற்கு எதிராகவே செயற்பட்டு வருகின்றன.

இந்நிலையில் அக்கட்சிகள் பங்கேற்காமல் தெரிவுக்குழுவின் நடவடிக்கைகளுக்கு பாதிப்பு ஏற்பட இடமுள்ளதா என அமைச்சரிடம் வினவியபோது, வெற்றி தோல்வி என்பது வேறு. ஜனநாயகத்துக்கு மதிப்பளித்து அவர்கள் தெரிவுக்குழுவில் பங்கேற்பது முக்கியம் எனவும் தெரிவித்தார்.

அரசியலமைப்பு திருத்தம் தொடர்பான சர்ச்சைகளுக்கு ஜனநாயக முறையில் தீர்வு காண்பதற்கே அரசாங்கம் பாராளுமன்றத் தெரிவுக்குழுவை நியமித்துள்ளது என்பதை அவர்கள் உணரவேண்டும். அவர்கள் இத் தெரிவுக்குழுவுக்கு சமுகமளிப்பார்கள் என எதிர்பார்க்கிறோம் எனவும் அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

இந்நிலையில் 13ஆவது திருத்தச் சட்டம் தொடர்பில் மாகாண சபை முறைமையினை ஒழிப்பதற்கான அமைப்பு முரண்பாடான கருத்துக்களை முன்வைத்து வருகிறது.

அந்த அமைப்பு அண்மையில் கொழும்பில் செய்தியாளர் மாநாடொன்றை நடத்தி 13ஆவது திருத்தத்தை வைத்துக்கொண்டு வட மாகாணசபை தேர்தலை நடத்தினால் பெரும் பாதிப்பினை எதிர்நோக்க நேரிடும் என பகிரங்கமாகத் தெரிவித்துள்ளது.

இந்நிலையில் இத்தகைய சர்ச்சைகளுக்கு பாராளுமன்றத் தெரிவுக்குழு மூலமே முடிவு காணமுடியும் என்ற காத்திரமான நிலைப்பாட்டில் அரசாங்கம் உள்ளது. இந்த நிலைப்பாட்டை வலுப்படுத்துவதற்கான சகல முயற்சிகளையும் அரசாங்கம் மேற்கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-2)

## 13 ஆவது திருத்தத்தை பாதுகாக்க கூட்டமைப்புடன் இணைய தயார்

### பிள்ளையான் தெரிவிப்பு

(கொழும்பு)

13 ஆவது திருத்தச் சட்டத்தை பாதுகாப்பதற்காக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கட்சியுடன் கூட இணைந்து கொள்ளத் தயார் என தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள் கட்சியின் தலைவர் சிவநேசதுரை சந்திரகாந்தன் தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பு கோரளைப்பற்று பிரதேசத்தில் நடைபெற்ற கலாசார நிகழ்வில் கலந்து கொண்டபோதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். இவ்விடயம் தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

13 ஆவது திருத்தச் சட்டம் இரத்து செய்யப்படக்கூடாது என்பதனை அண்மையில் ஜனாதிபதியிடம் வலியுறுத்தினேன். 13 ஆவது திருத்தச்சட்டத்தை பாதுகாப்பதற்காக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மற்றும் ஏனைய தெற்கு கட்சிகளுடன் இணைந்து கொள்ளத் தயார்.

தமிழ் மக்களின் அரசியல் அபிலாஷைகளை பூர்த்தி செய்து கொள்ளும் நோக்கில் 26 ஆண்டுகளுக்கு முன்னர் இந்த 13 ஆவது திருத்தச் சட்டம் அறிமுகம் செய்யப்பட்டது. 13 ஆவது திருத்தச் சட்டத்தின் ஊடாக வடக்கு, கிழக்கிற்கு அதிகாரங்களை பகிர்ந்தளிக்க முடியும் என அவர் மேலும் சுட்டிக்காட்டியுள்ளார். (அ-2)

## குற்றச் செயல்களில் ஈடுபடப் போவதில்லை

### மனம் திறக்கிறார் தமிழினி

இனி குற்றச் செயல்களில் ஈடுபடப் போவதில்லை என தமிழீழ விடுதலைப்புலிகளின் முன்னாள் மகளிர் அரசியல்துறைப் பொறுப்பாளர் தமிழினி தெரிவித்துள்ளார். புனர்வாழ்வு அளிக்கப்பட்டு சமூகத்துடன் மீள இணைக்கப்பட்ட போது தமிழினி இதனைக் குறிப்பிட்டுள்ளதாக சிங்கள பத்திரிகை யொன்று செய்தி வெளியிட்டுள்ளது

அப்பத்திரிகையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, எதிர்வரும் காலங்களில் சட்டவிரோத செயற்பாடுகளில் ஈடுபடமாட்டேன். திருமண பந்தத்தில் இணைந்து நல்ல வாழ்க்கை ஒன்றைத் தொடர்வேன்.

கடந்த கால நினைவுகளை நான் அழித்து விட்டேன். எனது தங்கையின் பிள்ளைகளுடன் சந்தோசமாக வாழ்வேன். தேவையில்லாதவற்றை தலையில் போட்டுக்கொள்ள மாட்டேன். எதிர்காலத்தில் நல்ல குடும்ப வாழ்க்கை ஒன்றை வாழ்ந்து சமூகத்திற்கு தொண்டாற்றுவேன்.

கடந்த ஒரு ஆண்டில் தியானம் செய்தேன். தற்போது நான் நல்ல வாழ்க்கையை வாழ்கின்றேன். இராணுவத்தினர் சிறந்த முறையில் புனர்வாழ்வு அளித்தனர். இராணுவத்தினருக்கு நன்றி தெரிவித்துக் கொள்கின்றேன் என தமிழினி தெரிவித்துள்ளார். (அ)



யாழ்ப்பாண பிரதேச செயலக பிரிவின் ஜே/61 கிராமசேவகர் பிரிவில் வசிக்கும் வீடு தீக்கிரையான குடும்பம் ஒன்றுக்கு யாழ்ப்பாண பிரதேச செயலக சமுர்த்தி மகா சங்க சமூக அபிவிருத்தி மன்றின் நிதிமூலம் கூரைத் தகரங்கள் வழங்கப்பட்டன. இதன்போது யாழ்ப்பாண பிரதேச செயலர் திருமதி சு.தெய்வேந்திரம் மற்றும் ஆசிரியர் அக்ஸ்ரின் ஆகியோர் பயனாளி ஒருவருக்கு கூரைத் தகரங்கள் வழங்குவதையும் படத்தில் காணலாம்.

## அரசாங்கம் எம்மை பிழையாக வழிநடத்தி விடக் கூடாது

### தென்னாபிரிக்காவிடம் சம்பந்தன் தெரிவிப்பு

அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தை நடத்தத் தயார் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கு விஜயம் செய்துள்ள தென்னாபிரிக்க பிரதி வெளிவிவகார அமைச்சர் இப்ராஹிமை இரண்டாவது தடவையாக சந்தித்த போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

எனினும் அரசாங்கம் தம்மை பிழையாக மீண்டும் வழிநடத்தி விடக் கூடாது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

முதற் சுற்றுப் பேச்சுவார்த்தைகளின் போது 13 ஆவது திருத்தச் சட்டம் உள்ளிட்ட ஏனைய விடயங்கள் குறித்து கவனம் செலுத்தப்பட்டது. தேசிய இனப்பிரச்சினைக்கு காத்திரமான தீர்வுத் திட்டமொன்றை முன்வைக்கும் முனைப்புக்கு முழு அளவில் யதார்த்தமான ஒத்துழைப்பு வழங்கத் தயார் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

நிரந்தரமான தீர்வுத் திட்டமொன்றையே தமிழ் மக்கள் விரும்புவதாகவும் எவ்வாறெனினும் தமிழ் மக்களின் மெய்யான பிரச்சினைகளுக்கு தீர்வு வழங்க அரசாங்கம் தயாரில்லை என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (அ-2)

## ஆட்சேபனை மனு நிராகரிப்பு

(கொழும்பு)

முன்னாள் பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்க தொடர்பில் பாராளுமன்ற தெரிவுக்குழு வழங்கிய தீர்ப்பை இரத்துச் செய்யக் கோரும் மேன்முறையீட்டு நீதிமன்ற உத்தரவிற்கு எதிராக சட்டமா அதிபர் உயர் நீதிமன்றில் தாக்கல் செய்துள்ள மனுவிற்கு ஆட்சேபனை தெரிவித்து பாராளுமன்ற உறுப்பினர்களான விஜித ஹேரத், ஆர்.சம்பந்தன் ஆகியோர் தாக்கல் செய்த மனு நிராகரிக்கப்பட்டுள்ளது.

உயர் நீதிமன்றால் குறித்த ஆட்சேபனை மனுக்கள் நேற்றைய தினம் நிராகரிக்கப்பட்டுள்ளன. (அ-2)

## பருத்.பிரதேச செயலக பிரிவில் டெங்கு ஒழிப்பு நடவடிக்கை

(தும்பளை)

பருத்தித்துறை பிரதேச செயலகத்தினரால் டெங்கு ஒழிப்பு வாரம் நாளை மறுதினம் திங்கட்கிழமை தொடக்கம் 7 ஆம் திகதி வரை நடைமுறைப்படுத்தப்படவுள்ளது. இந்நிகழ்வில் பருத்தித்துறை ஆதாரவைத்தியசாலையின் பொதுச் சுகாதார உத்தியோகத்தர்கள், சமுர்த்தி உத்தியோகத்தர்கள், கிராம அலுவலர்கள், பொலிஸார் மற்றும் பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். மேற்படி டெங்கு ஒழிப்பு நடவடிக்கை ஜே/383 கிராம சேவகர் பிரிவு தொடக்கம் ஜே/417 கிராம சேவகர் வரையான பிரதேசங்களில் மேற்கொள்ளப்படவுள்ளன. (அ-19)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உயிர்ப்பசளைகளின் பாவனையும் எமக்குள்ள சவால்களும்?

## இனியொரு பசுமைப் புரட்சிக்கு... 27-III



பேராசிரியர் கு.மிகுந்தன்
விவசாய உயிரியல்துறை
விவசாய பீடம்
யாழ்.பல்கலைக்கழகம்

வாருங்கள் எம்மினிய உறவுகளே! கடந்த சனிக்கிழமை யாழ்ப்பாண முகாமையாளர் மன்றத்தினதும் கண்டியிலுள்ள புலமையாளர்கள் நிறுவனத்தினதும் இலங்கை பொறியியலாளர்கள் குழுமத்தின் அனுசரணையுடனும் கிறீன்கிராஸ் மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்ற கருத்தரங்கில் பலவிடயங்கள் முன்வைக்கப்பட்டன.

அவைபற்றி எம் இனிய உறவுகளுக்கு தெரிவிப்பதில் மகிழ்ச்சியடைகின்றோம். பசுமைப்புரட்சியின் எதிர்பாராத விளைவுகளுள் ஒன்றாகவே பீடைநாசினிகள் மற்றும் அசேதன இரசாயனங்களின் ஆளுமை



யைக் குறிப்பிடலாம். உணவுற்பத்தியை பெருக்குவதற்காக பசுமைப்புரட்சி உள்வாங்கிய திருந்திக கலப்பினப்பயிர்கள் உள்ளீடுகளை நம்பியிருந்தபோது அதனை வரவேற்று அன்றைய காலத்தின் தேவையைப் பூர்த்தி செய்திருப்பினும் பிற்காலத்தில் பயன்படுத்திய உள்ளீடுகளினாலான தாக்கத்தை விஞ்ஞானிகள் முன்கூட்டியே அனுமானித்திருக்காமையும் அதன் விளைவுகளை பெரும்பொருட்டாக மதிக்காதமையும் தான் இவ்வாறான விளைவுகளுக்கெல்லாம் காரணம் என இப்போது அனைவரும் அடித்துக் கூறினாலும் காலந்தாழ்த்தியதால் அதன் விளைவுகள் எமது சூழலை வெகுவாகவே பாதித்துவிட்டது.

இதிலிருந்து மீள்வதற்கான வழிவகைகளை பலரும் பலவாறாக ஆராய்ந்து கொண்டிருக்கையில், இக்கருத்தரங்கில் முன்வைக்கப்பட்ட செய்தி அனைவருக்கும் நம்பிக் கையூட்டுவதாகவே அமைந்தது. பயன்படுத்திய அசேதன இரசாயனங்களின் தாக்கம் குடிநீரில் அதிகளவாகவே காணப்படுவதும் அதனால் எமக்கு ஏற்படும் விளைவுகள் பற்றி இன்னமும் நாம் அலட்சியமாக இருக்க முடியாதென பதை கட்டியங்கூறியிருப்பதையும் கவனத்திற் கொண்டு இனிவருங்கால செயற்றிட்டங்களை நாம் திட்டமிட வேண்டும்.

அசேதன இரசாயனங்களுக்கான மாறறு வழியாகவே உயிர்ப்பசளைகளை நாம் கவனத்திற் கொள்ளலாம். அவரை பயிர்த்தாவரங்களில் வளிமண்டல நைதரசனை வேர் முடிச்சுக்களாக நிலைநாட்டும் செயற்பாடு பற்றி நாமெல்லோரும் அறிந்திருக்கிறோம் அல்லவா. அவ்வாறான தாவரத்திற்கும் றைசோபியம் என்னும் நன்மைதரும் பக்றீறியாவுக்குமான ஒன்றிய வாழ்க்கையில் பக்றீறியாவுக்கான இடவசதியையும் தேவையான ஊட்டச்சத்தை தாவரம் வழங்கும் போது தாவரத்திற்கு தேவையான தழைச்சத்தை பக்றீறியா வளியிலிருந்து நிலைநாட்டி வேர்முடிச்சுக்களில் சேமித்து வைக்கும். இதனை தாவரம் இலகுமுறை தழைச்சத்தாக அகத்துறிஞ்சக் கூடியதாக இருக்கும்.

இவ்வாறான பக்றீறியாவை நாம் செயற்கை முறையில் விருத்திசெய்தால் அதனை பயிர்ச் செய்கை காலத்தில் விதை விதைக்கும் போது சேர்த்து கலந்து விதைப்பதால் வேர் முடிச்சுக்கள் விரைந்துருவாவதை ஊக்குவிக்கலாம்.

இதனை கண்டியிலுள்ள அடிப்படைக்கற்கைகள் நிறுவனத்தில் ஆய்வு மூலமாக ஆதாரத்துடன் நிரூபித்திருக்கிறார் அன்றையதினம் சிறப்பு சொற்பொழிவாற்றிய வாழ்நாழ் பேராசிரியர் குலசூரிய . இவ்வகையான பக்றீறியாக்களை செயற்கை முறையில் விருத்தி செய்தால் அவற்றை விவசாயிகள் வாங்கி பயன்படுத்த தக்கதாக ஏற்பாடு செய்தல் வேண்டும்.

இதற்காக தான் தொழிற்சாலைகளின் உதவி தேவைப்படுகின்றது. பாரிய அளவில் உயிர்ப்பசளைகளை உற்பத்தி செய்வதற்கான வழிவ்கைகளை நாம் ஆராயும் அதே வேளையில் அவற்றை விவசாயிகளின் பயன்பாட்டுக்கும் கிடைக்கக்கூடியதாக செய்தல் வேண்டும்.

இவற்றுடன் தாவர வேர்த்தொகுதியில் இருக்கும் நன்மைதரும் பூஞ்சணங்கள் மற்றும் பக்றீறியாக்களை ஒன்றிணைத்து உயிர்ப்படல நுண்ணங்கிகளை உருவாக்கி வெற்றியும் கண்டிருக்கின்றார்கள். இந்த உயிர்ப்படல நுணணங்கிகள்(Biofilm microorganisms) தாவரத்தின் வளர்ச்சிக்கு பெரிதும் உதவுவதோடு அவற்றினது பங்கு பற்றியும் ஆய்வினால் கண்டறிந்திருக்கின்றார்கள்.

இவ்வாறான நுண்ணங்கிகளின் தொழிறபாட்டை நாம் ஊக்குவிக்க வேண்டியதன் அவசியததை இக்கருத்தரங்கு ஆழமாகப் பதிவுசெய்திருக்கின்றது. இதற்கான ஏனைய முயற்சிகளை நாம் இனி கவனத்திலெடுத்து வடபகுதியிலிருந்து உயிர்ப்பசளைகள் உற்பத்தியாகும் நாளை ஆவலுடன் எதிர்பார்த்தி ருக்கின்றோம்.

சேதன விவசாயத்தை ஊக்குவிப்பதற்கான வழிவகைகளை நாம் இன்னும் முயற்சிக்க வேண்டும். விவசாய திணைக்களத்தின் பாரிய வேலைத்திட்டத்துடன் இச்செயற்பாடு முன்னெடுக்கப்பட்ட போதிலும் எமது மக்களும் விவசாயிகளும் அதில் அதீத அக்கறை கொள்ளாதிருப்பது இச்செயற்பாட்டை தொடர்ந்து முன்னெடுக்க முடியாமல் செய்து விடுகின்றது. விவசாய பெருமக்களிடையே பீடைநாசினி பயன்பாட்டை பயன்படுத்துவதல் கட்டுப்பாடுகளை நாம் போடுவதற்கு முன்னால் மாற்று வழிகள் பலவற்றை பரிந்துரை செய்ய வேண்டியது மிகவும் அவசியமாகும்.

இந்தியாவில் தமிழ்நாட்டில் கிராமந் தோறும் உயிர்ப்பசளைகள் மற்றும் உயிர்க் கொல்லிகள் பலவற்றை வாங்கி பயிர்ச்செய்கையில் பயன்படுத்துவதற்கு முடியும். அவ்வாறான நிலைமையை இங்கும் நாம் உருவாக்க வேண்டியிருக்கின்றது. இதற்கு ஆய்வுரீதியான பின்புலம் தேவையாயிருப்பதுடன் தரத்தையும் நிர்ணயஞ்செய்ய வேண்டியிருக்கின்றது.

இதுபற்றி நாம் நிறையவே பேசிவிட்டோம். இனி செயலில் காட்டும் நேரம் கனிந்து வந்துகொண்டிருக்கின்றது என கூறலாம். விவசாயபீடம் இவ்வருட இறுதியில் கிளிநொசசியில் காலடியெடுத்து வைக்கும் போது உயிர்க்கொல்லிக்ளை உருவாக்குவதற்கான முன்முயற்சிகள் எடுக்கப்படவுள்ளன. விவசாய பீடம் இதுவரையும் கூனிக்குறுகி வசதிகளற்ற வீடுகளில் உள்ளடக்கப்பட்டிருந்தமையும் ஒரு காரணமாக இதில் கூறலாம். விவசாய பீடத்தின் ஆய்வுகளில் சேதன விவசாயத்திற்கும், உயிர்ப்பசளைகள் மற்றும் ஒருங்கிணைந்த பீடை முகாமைத்துவத்தின் முக்கியத்துவத்திற்கும் இன்னும் உள்ளூர்வளங்களைப் பயன்படுத்தி மதிப்பேற்றஞ் செய்து புதிய பொருட்களை கண்டுபிடிக்கும் செயற்பாட்டுக்கு முன்னுரிமையளிக்கப்படும்.

உலகளாவிய ரீதியில் நடைபெறும் ஆய்வுகளுக்கிணைவாக எமது பிரதேசத்தில் உள்ளூர் வளங்களைப் பயன்படுத்தி எமது விவசாயிகளுக்கான பிரச்சினைகளுக்கு தீர்வு காணவேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தி இதில் நாமனைவரும் இணைந்து செயலாற்ற வேண்டியதன் தேவையையும் பதிவுசெய்ய விரும்புகின்றேன். பாரம்பரியமாக செய்யப்பட்ட விவசாயத்தின் முக்கியத்துவத்தை பதிவு செய்து அதன் நல்ல விடயங்களை மீண்டும் பரிசீலனை செய்து இயற்கையுடன் வாழ பயிர்ச்செய்கை செய்ய நாமனைவரும் முயற்சிக்க வேண்டும். யாழ்ப்பாண குடாநாட்டில் பெருகிவரும் புற்றுநோயாளர்களின் எண்ணிக்கைக்கு உணவும் ஒருவகையில் காரணியாக இருப்பதை அனைவருமே உணர்கின்றோம். அதுவும் தெளிக்கப்படும் பீடைநாசினிகளின் செறிவு மரக்கறிகளில் அதிகமாக இருப்பதை ஆய்வு மூலமாகவும் கண்டு அதற்கான தீர்வு முன்வைக்கப்பட வேண்டும். இதனை விவசாய பீடம் சிரமேற் கொண்டு செய்ய வேண்டும் என்ற எதிர்பார்ப்பு நியாயமானதும் நிறைவேற்றப்பட வேண்டியதுமாகும். கிளிநொச்சியில் மீள காலடியெடுத்து வைக்கும் போது இவைபற்றிய பேச்சுக்கு செயற்பாடுகள் காட்டப்பட வேண்டும்.

ஆங்காங்கே விவசாயிகளின் விளைநிலத்தில், இன்னும் விவசாயப் பெருமக்களின் சங்கத்தில் சிறு சிறு முயற்சிகளை ஏலவே நாம் செய்து பார்த்திருந்தும் அவற்றை முழுவீச்சில் செய்ய வேண்டிய காலத்தை நாமும் எதிர்பார்த்திருக்கின்றோம். நவீனமயப்படுத்தப்பட்ட ஆய்வுகூடத்தின் உதவி இதற்காக தேவைப்படுகின்றது. இதனை கிளிநொச்சியில் நாம் ஏற்படுத்திக் கொள்ள வழிவகை பிறக்கும் என நம்புகின்றோம்.

வடபகுதியில் உள்ள விவசாய திணைக்களம் உள்ளிட்ட அரச திணைக்களங்கள், தனியார் நிறுவனங்கள், பாடசாலைகள் மற்றும் வங்கிகள் என பரந்துபட்டு பணிபுரியும் பட்டதாரிகளை உருவாக்குவதில் விவசாய பீடத்திற்கு கணிசமான பங்களிப்புண்டு. விவசாய படம் வடபகுதிக்கு தேவையான ஆளணியை உருவாக்குவதோடு அவர்களோடு இணைந்து செயலாற்ற திட்டம் தீட்டியுமிருக்கின்றது. விவசாய பீடத்தின் இணையத்தளமான www.jfn.ac.lk/agri இற்கு வருகை தந்து பாருங்கள். அதனுடன் விவசாய பீடத்தில் விவசாய கற்கை நெறி தவிர்ந்த சமகாலத்திற்கு தேவையான புதிய கற்கை நெறியும் அறிமுகம் செய்ய இருக்கின்றோம். இதற்கான கருத்துக்களை, முன்மொழிவுகளை எம்மினிய உறவுகளிடமிருந்து எதிர்பார்க்கின்றோம்.

இன்னும் காலத்தின் தேவைய றிந்து தொழில்நுட்பத்தில் சிறந்த பட்டதாரிகளை உருவாக்க தேவையேற்பட்டுள்ளது. விவசாய பீடத்தின் வளர்ச்சியில் அனைவருக்குமே பஙகுண்டு என்பதால் உங்களது கருத்துக்களை, முன்மொழிவுகளை எமக்கு தாருங்கள். நிச்சயமாக ஆக்கபூர்வமானவையாக இருப்பின் கவனத்திற்கெடுப்போம்.

# சந்தேக நபர்களுக்கு எதிரான விசாரணையை துரிதப்படுத்துக

## சட்டமா அதிபருக்கு நீதியரசர் உத்தரவு

(கொழும்பு)

வழக்கு விசாரணை எதுவும் இன்றி தடுத்து வைக்கப்பட்டிருக்கும் சந்தேக நபர்களுக்கு எதிரான சட்ட நடவடிக்கைகளை துரிதப்படுத்துவதற்கான வேலைத்திட்டம் ஒன்றை தயார் செய்யுமாறு சட்டமா அதிபருக்கு பிரதம நீதியரசர் மொஹறான் பீரிஸ் உத்தரவிட்டுள்ளார்.

ஹெரோயின் போதைப் பொருளை வைத்திருந்தமை தொடர்பில் கைது செய்யப்பட்டு சுமார் 7 வருடங்களுக்கு மேலாக விசாரணைகள் எதுவும் இன்றி தடுத்து வைக்கப்பட்டிருந்த ஒருவர் தாக்கல் செய்த அடிப்படை உரிமை மீறல் மனு மீதான விசாரணையின் போதே பிரதம நீதியரசர் அடங்கலான 3 நீதிபதிகள் குழு இந்த உத்தரவைப் பிறப்பித்தது.

அந்த மனுதாரின் தரப்பில் ஆஜரான சட்டத்தரணி தனது வாதத்தில் இவ்வாறு வருடக் கணக்கில் விசாரணை இன்றி தடுத்து வைக்கப்படுவது இலங்கை அரசியலமைப்பை மீறும் செயல் என்று வாதிட்டார்.

இந்த வாதத்தை ஏற்றுக் கொண்ட பிரதம நீதியரசர் மொஹறான் பீரிஸ் இவ்வாறு விசாரணைகள் இன்றி வருடக்கணக்கில் ஆட்களை தடுத்து வைப்பதை அனுமதிக்க முடியாது என்று கூறினார்.

இவர்களுக்கு எதிராக வழங்கு தாக்கல் செய்தல் அல்லது விடுதலை செய்தல் குறித்து சட்டமா அதிபர் துரித முடிவை எடுக்க வேண்டும் என்றும் அவர் கூறினார்.

இதனடிப்படையில் வழக்கு தாக்கல் செய்யப்படாமல் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் நபர்களுக்கு எதிராக வழக்குகளை தாக்கல் செய்வதற்கான அல்லது விடுதலை செய்வதற்கான ஒரு துரித திட்டத்தை தயாரிக்குமாறும் அவர் உத்தரவிட்டார்.

இதன் முதற்கட்டமாக போதைப் பொருள் குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டு பல வருடங்களாகத் தடுத்து வைக்கப்பட்டிருப்பவர்களின் பட்டியலை எதிர்வரும் ஜூலை மாதம் 9 ஆம் திகதிக்கு முன்னதாக சமர்ப்பிக்குமாறும் அவர் உத்தரவிட்டார்.

அதனைப் பரிசீலித்து தான் அவர்களுக்கு வழக்கு தாக்கல் செய்வதா அல்லது அவர்களை விடுதலை செய்வதா என்பது குறித்து முடிபு எடுக்கவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

(அ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சித்தரிடம் எனது ஆன்மீகப் பயணம்



ஆன்மீகம் 46

அன்னை சித்தர்
இராஜ்குமார் குருஜி

ராஜா! ஆத்மா என்பது இறைவனின் சக்தி! அது எல்லா உயிரினத்திலும் நிறைந்துள்ளது. இதைத்தான் உயிர் என்றும் சொல்கிறார்கள். சிவம் அசைவற்றது. சக்தி சிவத்திற்கு அசைவைக் கொடுப்பதாகும்.


அதனால் ஒவ்வொரு உயிரினமும் சிவசக்திகளின் ஆலயங்களாகும். இதனால்தான் கொல்லாமையை எல்லா ஞானிகளும் வற்புறுத்துகின்றனர். உடலில் சக்திபோனால் சிவம் கொம்பொடிந்த சவமாகும். ஆதலால் ஆத்ம ஞானம் என்பது அந்த ஆத்மாவின் அனுபவமாகும். அந்த ஆத்ம ஞானத்தை உணர்ந்தவன் அதை மற்றவருக்கு விளக்கிக் கூற முடியாது! பெரிய காயம் அதனால் வலி தாங்க முடியவில்லை என்று ஒருவன் சொன்னால் அது எவ்வளவு தீவிரமான வலி! அதை அவன் எப்படி உணர்ந்தான் என்பதை மற்றவர் உணர முடியாது. ஏனென்றால் ஒவ்வொரு மனிதனும் தனி மனிதன்தான்!

இதனால் தான் உலகம், வாழ்க்கை உடல், நட்பு, உறவு, புகழ், செல்வம், மகிழ்ச்சி, துன்பம் எதுவுமே நிலையற்றது. அவைகள் மனிதனை ஞானத்தை அடையவிடாமல் தடுக்கும் மாய சக்திகள். அவைகளில் பற்றுவைக்காதே என்றார்கள் ஞானிகள்.

ஆன்மீகம் என்பது ஆன்மாவை பற்றியது! இது ஆன்மாவுக்கு ஆன்மா மாறுபடும். ஒருவரின் அனுபவம் மாதிரியே மற்றவருக்கும் அது அமைவதில்லை.

ஆதலால் ஒரு ஞானியோ, சித்தரோ எழுதி வைத்தவைகள் அந்த ஞானிகள், சித்தர்கள் அனுபவம் தானே ஒழிய, அதே அனுபவம் மற்ற ஆத்மாக்களுக்கு வேறுபடும்.

இந்நூல்கள் பெரும்பாலும் பாடல்களாகவே உள்ளன. இது பழகு தமிழில் இருக்காது. அதனால் இதில் உள்ள பல சொற்களுக்கு வேண்டுமானால் பொருள் சொல்லலாம். ஆனால், அந்த சொல் அந்த ஞானியால், சித்தரால் என்னபொருளில் எழுதப்பட்டுள்ளது என்பது ஒரு பெரிய ஞானிக்குத்தான் புரியும். அப்படி புரிந்ததை வைத்து அவர்களும் எழுதப்பட்ட முழு ஞானத்தைப்பெற்றிட முடியாது.




அவைகள் சிறிய் டார்ச் விளக்குகள் போல இருளில் சிறு வழி மட்டும்தான் காட்டும் இருளில் மூழ்கியிருக்கும் எல்லாப் பகுதிகளையும் அதனால் கட்ட இயலாது.

கோழிக்கு தான் முட்டை இடும் போது ஏற்படும் வலி என்பார்களே அதுபோல ஒரு மனிதனின் ஆத்ம ஞானம் அவனுக்கு மட்டும்தான் உணர முடியும். ஆனால், இதை விளக்க முடியாது என்பதால் கண்டவர் விண்டிலர் என்றார்கள். அதேநேரம் விண்டவர் கண்டிலர் என்றார்களே. அவர்கள் தான் நீ குறிப்பிடும் ஆசாமிகள் ஆன்மீகவாதிகள் என்று தமக்கு தாமே நாமதேயம் சூட்டிக்கொண்டவர்கள். இவர்கள் தாங்கள் படித்ததை மற்றவரிடம் கேட்டதை- கூட்டத்தைக் கூட்டி மைக்கில் உளரும் உளருவாயர்கள்.

பத்திரிகையில் தாம் காணாததை, உணராததை கிறுக்கி வைக்கும் கிறுக்கர்கள். வெந்ததைத் தின்று வேதாந்தம் என வேண்டாதவைகளை எல்லாம் விபரம் புரியாமல் பேசி மக்களை குழப்பி பிழைக்கும் ஏமாற்றுக்காரர்கள். தெய்வீகத்தை வியாபாரமாக்கும் வித்தை தெரிந்த வல்லவர்கள். இவர்கள் நோக்கம் புகழ், பணம், இதை அவர்கள் எளிதில் அடைந்து விடுகிறார்கள்.

தொடரும்

# முதல்வர் ஜெயலலிதாவே பிரதமர் வேட்பாளர்



தமிழக அரசியல் கட்சிகள் தேசிய அரசியலில் எப்படி அடியெடுத்து வைப்பது என்று தத்தளித்துக் கொண்டிருக்கின்றன. டெல்லியில் பாரதிய ஜனதா கட்சி தலைமையிலான தேசிய ஜனநாய கூட்டணியிலிருந்து பீஹார் முதல்வர் நிதிஷ் குமாரின் ஐக்கிய ஜனதா தளம் விலகிய பிறகு மாநில கட்சிகளின் தேசிய ஆசைக்கான காட்சிகளில் பெரும் சங்கடம் ஏற்பட்டிருக்கிறது. பா.ஜ.க அணியிலிருந்து விலகியுள்ள நிதிஷ்குமார், "பா.ஜ.க வேறு பாதையில் செல்கிறது. அந்தப் பாதை எங்களுக்கு உடன்பாடனது அல்ல. எங்கள் அடிப்படை கொள்கையில் சமரசம் செய்து கொள்ள முடியாது" என்று தெளிவாக அறிவித்துவிட்டார். அது மட்டுமன்றி "எங்கள் மாநிலத்திற்குள் கூட்டணி இருந்த போது ஒழுங்காக இருந்தது. வெளி மாநில தலையீடு வந்ததும் கெட்டுப் போய்விட்டது" என்று கூறி, நரேந்திர மோடியின் தலையீட்டால்தான் பீஹார் கூட்டணியில் பிரச்சினை என்று பேசியிருக்கிறார். இப்படி தேசிய ஜனநாயக கூட்டணியில் இருந்த முக்கிய கட்சியின் தலைவரான நிதிஷ்குமார் இப்போது நரேந்திர மோடியை தேர்தல் பிரச்சினையாக்கி விட்டார். சிறுபான்மையினரின் வாக்குகளை வைத்து அவர் இப்படி பேசியிருந்தாலும், அதுவே இந்திய அளவில் உள்ள அனைத்து மாநிலங்களிலும் இனி முக்கிய பிரச்சினையாக விவாதிக்கப்படும். தேர்தல் அணி உருவாகும்போது இதை மனதில் வைத்தே மாநில கட்சிகள் முடிவு எடுக்க நேரிடும். தேசிய அரசியலில் எந்தக் கட்சியுடன் கூட்டணி வைப்பது என்ற சிக்கலையும் தமிழகத்தில் உள்ள கட்சிகளுக்கு ஏற்படுத்தியிருக்கிறது. தேசிய அரசியல் என்பது இந்தியாவைப் பொறுத்தமட்டில் கங்கிரஸ், பாரதிய ஜனதா கட்சி, இடது சாரிகள் தலைமையிலான அணி என்பதை சுற்றிச் சுற்றியே இதுவரை வந்து கொண்டிருந்தது. அதுவும் சமீபகால நாடாளுமன்ற தேர்தல்களில் இதுதான் நிஜம் என்ற நிலைக்கு இந்திய அரசியல் தள்ளப்பட்டது.

ஆனால், இன்று நிலைமை வேறு மாதிரியாக இருக்கிறது. மேற்குவங்க மாநிலத்தில் இடதுசாரிகள் பலமிழந்து விட்டார்கள். உதாரணமாக, கூட்டணி ஆட்சிமுறை முதன் முதலில் தீவிரமாக தொடங்கிய 1989 காலகட்டத்தில் இடது சாரிகள் அடைந்த செல்வாக்கு படிப்படியாகக் குறைந்துகொண்டே வருகிறது. இன்றைய தினம் இரு கம்யூனிஸ்டுக் கட்சிகளுமே சேர்ந்து அகில இந்திய அளவிலுள்ள எம்.பி.க்களில் 16 எம்.பி.க்களை மட்டுமே ஜெயிக்க முடியும் என்ற நிலைக்கு தேய்ந்து கொண்டே போகிறார்கள். குறிப்பாக இந்திய கம்யூனிஸ்ட் கட்சி வெறும் நான்கு எம்.பி.க்கள் மட்டுமே வெற்றி பெறும் கட்சியாக மாறிவிட்டது. அதன் வாக்குவங்கியும் அகில இந்திய அளவில் 1.43 சதவீதம் மட்டுமே என்ற அளவிற்கு படுமோசமாக கீழே இறங்கிவிட்டது. இது ஒருபுறமிருக்க நாட்டில் நிலவும் அரசியல் சூழ்நிலையில் எந்தக் கட்சியை இப்போது ஆட்சிக்கு வரவிடக்கூடாது என்று முதிர்ச்சியுடன் யோசித்த ஹர்கிஷன் சிங் சுர்ஜித் போன்ற தலைவர்கள் இப்போது கம்யூனிஸ்டுகளுக்கு வழி காட்டுவதற்கு இல்லை. ஒரு காலத்தில் காங்கிரஷுடனும் பாரதீய ஜனதா கட்சியுடனும் கூட்டணி கிடையாது என்றார்கள். பின்னர் மதவாதத்தை ஒழிக்க காங்கிரஷுடன் கூட்டணி வைத்துக்கொண்டார்கள். இப்போது பிரகாஷ் கார்த் மார்க்ஸிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் தலைமைப் பொறுப்பிற்கு வந்தபின்னர் காங்கிரஸுடனும் இல்லை. பா.ஜ.கவுடன் இல்லை. இந்தக் கட்சிகளுடன் கூட்டணி வைக்கும் கட்சிகளுடனும் கூட்டணி இல்லை என்ற விநோதமான முடிவு எடுத்து அதை செயற்படுத்த முயற்சி செய்து கொண்டிருக்கிறார்கள்.

இந்தக்கொள்கை முடிவால் இடது சாரிகள் சோதனையைச் சந்தித்து வருகிறார்கள். குறிப்பாக தமிழகம் போன்ற மாநிலங்களில் அவர்களுக்கு பெரும் நெருக்கடி. ஹர்கிஷன் சிங் சுர்ஜித் தலைமைப்பொறுப்பில் இருந்த காலத்தில் தமிழ்நாட்டில் கடைக்கோடி நாடாளுமன்றத் தொகுதியாக இருக்கும் நாகர்கோவிலில் காங்கிரஸ் வேட்பாளருக்கு ஆதரவு திரட்டுவார். அங்கிருந்து 50 கிலோ மீற்றர்களே உள்ள கேரள மாநிலத்தில் இருக்கும் திருவனந்தபுரம் தொகுதியில் நின்றுகொண்டு காங்கிரஸுக்கு எதிராக வாக்கு கேட்பார். இந்த மாதிரி அணுகுமுறையெல்லாம் மதவாதத்தைக் கையிலெடுத்துள்ள பா.ஜ.கவை வெற்றிபெறவிடக்கூடாது என்ற ஒரே நோக்கத்தில் கையாளப்பட்டவை. ஆனால், இன்று "பா.ஜ.க., காங்கிரஸும் இல்லை. அக்கட்சிகளுடன் கூட்டணி வைக்கும் கட்சிகளுடனும் கூட்டணி இல்லை" என்பதால் இடது சாரிகள் தமிழகத்தில் மட்டுமன்றி தேசிய அளவிலும் பலமிழந்து வருகிறார்கள். குறிப்பாக தேசிய அளவில் காங்கிரஸ் மற்றும் பா.ஜ.கவிற்கு மாற்றாக ஓர் அணியை அமைக்க முடியாமல் திணறி வருகிறார்கள். இப்போது பா.ஜ.க.விலிருந்து விலகிய ஐக்கிய ஜனதா தளம்கூட முதலில் மேற்குவங்க முதல்வர் மம்தா பானர்ஜி, ஒடிசா முதல்வர் நவீன் பட்நாயக் ஆகியோரைச் சேர்த்துக் கொண்டு பெடரல் ப்ரன்ட் என்ற ஓர் அணியை உருவாக்கலாம் என்றே யோசித்தார்கள்.

மம்தா தலைமையில் அல்லது அவரும் சேர்ந்து அகில இந்திய அளவில் தனி அணியா என்று பதறிப் போன மார்க்ஸிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி தனது மூத்த தலைவர் சீத்தாராம் எச்சூரியை உடனடியாக ஐக்கிய ஜனதா தளத் தலைவர் சரத்யாதவை சந்திக்க வைத்தது. "தயவுசெய்து நீங்கள் மம்தாவுடன் சேர்ந்து கூட்டணி அமைக்காதீர்கள். நாம் புது அணி உருவாக்குவோம்" என்று கூறிவிட்டு வந்திருப்பதாக தகவல்கள் அடிபடுகிறது. இப்படி பதறிப்போயும் பலமிழந்தும் போய் நிற்கும் இடது சாரிகளைப் பார்த்து எந்த மாநிலக் கட்சிகளும் இப்போது மதிப்பும் மரியாதையும் கொடுப்பதில்லை. தமிழகத்தில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி ஒரு ராஜ்ய சபை எம்.பி.யைப் பெறுவதற்கு படும் பாடே நன்றாக அதை படம் போட்டுக் காட்டுகிறது. இடதுசாரிகள் தலைமையில் அணி உருவாக்க முடியாத சூழ்நிலை இருப்பதால் மாநில கட்சிகள் தேசிய அளவில் உள்ள காங்கிரஸ் அல்லது பா.ஜ.க வுடன் அணிசேர வேண்டிய கட்டாயத்திற்கு தள்ளப்படுகின்றன. இந்த விடயம் மற்ற மாநிலங்களுக்கு எப்படி பயன்படுகிறதோ தமிழகத்திற்குப் பயனில்லை.

## கூட்டணி வைப்பது யாரோடு என்பதில் குழப்பம்!

எம்.காசிநாதன்

தொடரும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# சிறுவர் அரங்கம்

499

## கனவுகளின் பொருள்





கோசல நாட்டு மன்னனான பிம்பிசாரன் ஒருநாளிரவு பல விசத்திர பயங்கரக் கனவுகளைக் கண்டான். மறுநாள் பல பிராம்மணர்களை அழைத்து "நீங்கள் சகல சாஸ்திரங்களைக் கற்றவர்கள். நான் கண்ட கனவுகளின் பெருள் என்ன? அதனால் ஏற்படும் பலன் என்ன?" என்று கேட்டான்.

பிராம்மணர்களும் மன்னன் கண்ட கனவுகளைக் கேட்டனர். இதுதான் பணம் பறிக்கத் தக்க தருணம் என அவர்கள் எண்ணினர்., "அரசே! இக்கனவுகளால் உங்களுக்கும் உங்கள் வம்சத்திற்கும் உங்கள் நாட்டிற்கும் விரைவில் கஷ்டம் வரப்போகிறது. ஆனால் அதைத் தடுக்கப் பரிகாரம் செய்தால் போதும். நாட்டில் நான்கு பாதைகள் கூடும் இடங்களில் எல்லாம் யாகங்கள் நடாத்தி பிராம்மணர்களுக்கு

**அம்புலிமாமா கதைகள்**

அவர்கள் மனம் குளிரதானமும் தட்சிணையும் கொடுத்தால் எல்லாம் சரியாய்ப் போய்விடும்" என்றார்கள்.

அதைக்கேட்ட மன்னன் "சரி. மந்திரியிடம் கூறி அதற்கான ஏற்பாடுகளைச் செய்யலாம்" என்றான். தன் பொக்கிஷ அதிகாரியிடமும் தான தர்மத்திற்காகப் பணம் தனியாக எடுத்து வைக்கவும் கட்டளையிட்டான். இது ராணிக்குத் தெரிந்தது. பிராம்மணர்களின் பேராசையைப் புரிந்து கொண்ட அவள் மன்னனிடம் "நீங்கள் இவர்கள் சொல்வதை வேதவாக்காக எடுத்துக் கொள்ளாதீர்கள்.

இவர்களுக்கு அரைகுறை அறிவே உள்ளது. சுயநலம் காரணமாக இப்படி தானதர்மம் செய்யச் சொல்லி அவற்றை அடைய விரும்புகிறார்கள். ஜைதவனத்தில் புத்தர்பிரான் இருக்கிறார். அவரிடம் உங்கள் கனவுகளைக் கூறி அவற்றின் பலன்கள் பற்றிக்கேளுங்கள். அவர் உங்களுக்கு விவரமாக எல்லாவற்றையும் கூறுவார்" என்றாள்.

பிம்பிசாரனும் "நானே நேரடியாக ஜைதவனத்திற்குப் போய் அவரை தரிசித்து நம் அரண்மனையில் பிக்ஷை ஏற்க வருமாறு வேண்டுகிறேன்" எனக்கூறி ஜைதவனத்திற்குச் சென்றான். புத்தரும், மன்னனின் அழைப்பை ஏற்று அவனது அரண்மனைக்கு வந்தார்.

மன்னனும் அவருக்குத் தக்கபடி உபசரித்து "ஐயனே, நான் சில கனவுகளைக் கண்டேன். அவற்றின் பலன்கள் என்ன என்று சொல்ல வேண்டும்" என வேண்டினான். புத்தரும் நீ கண்ட கனவுகளைச் சொல். அவற்றின் பலன்களைக் கூறுகிறேன்" என்றார்.

பிம்பிசாரனும் "முதலாவது கனவில் நான்கு காளைகள் அரண்மனையை நோக்கி ஓடி வந்தன. அவை சண்டை



போடுவதைக் கண்டுகளிக்கலாம் என மக்கள் நினைத்துக் கூடினர். ஆனால் அவைகள் சண்டை போடாமல் நான்கு திசைகளில் பிரிந்து சென்றன. இதன் பொருள் என்னவோ? விளக்கமாக எனக்குக் கூறுங்கள்" எனக் கேட்டான்.

புத்தரும் "மன்னா! இது உனக்கும் தற்கால நடப்பிற்கும் சம்மந்தப்பட்டதல்ல. பிற்காலத்தில் அரசர்கள் பாவங்களைப் புரிவார்கள். அப்போது கருமேகங்கள் வந்து மழை பெய்யப் போவது போல பிரமையை ஏற்படுத்தி விட்டுப் பெய்யாமல் போய்விடும். அவற்றின் மீது மக்கள் கொண்ட நம்பிக்கை ஏமாற்றமாக முடியும்" என்றார்.

மன்னனும் "அடுத்த கனவில் மரம் செடிகள் அதிகம் உயராமல் குட்டையாகவே இருந்து மலர்ந்து காய்களைக் கொடுப்பதாகக் கண்டேன். இதன் ரகசியம் என்னவோ?" என்று கேட்டான்.

புத்தரும் "நான் முன்பே கூறியபடி வருங்காலத்தில் பாவங்கள் அதிகரிக்க பெண்கள் சிறுமிகளாக இருக்கையிலேயே மணம் புரிந்து கொண்டு பெரியவர்களாகும் முன்பே குழந்தைகளைப் பெற்று விடுவார்கள். இதுவே அக்கனவின் பொருள்" என்றார். "பசுமாடுகள் கன்றுகளிடமிருந்து பால் குடிப்பதாக இன்னொரு கனவையும் நான் கண்டேன்.

இதன் பொருள் என்னவோ?" என மன்னன் கூறவே புத்தரும் "கிழவர்கள் இளைஞர்களை நம்பி இருக்க வேண்டிவரும் என்பதே பொருள்" என்றர். "அடுத்து குடியானவர்கள் ஏர்களில் உள்ள முரட்டு எருதுகளை அவிழ்த்துவிட்டு அவற்றிற்குப் பதிலாகக் கன்றுக் குட்டிகளைக் கட்டுவதாகக் கனவு கண்டேன் என மன்னன் கூறினான்.

புத்தரும் "நான் கூறிய பாவச் செயல் புரியும் மன்னர்கள் நல்ல மந்திரிகளைப் பதவியிலிருந்து விலக்கிவிட்டு அனுபவஞானமே இல்லாத இளைஞர்களை அப்பதவிகளில் அமர்த்துவார்கள் இதுதான் அக்கனவின் பொருள்" என்றார்.


"ஒருவன் கம்பளம் நெய்து கொண்டே இருக்க நெய்யாது கீழே கிடந்த பாகத்தை பெண் நரிகள் கடித்துத் தின்பதாக ஒரு கனவு கண்டேன்" என மன்னன் கூறவே புத்தரும் "வருங்காலத்தில் பாவம் அதிகரிக்கும். கணவன் சிரமப்பட்டு சம்பாதித்ததை மனைவி வீண் செலவு செய்வாள் என்பது பொருளாகும்" என்றார்.

"இரட்டைத் தலைக் குதிரை ஒன்று கொள்ளை தன் இருவாய்களாலும் சாப்பிடுவது போல ஒரு கனவு கண்டேன்" என மன்னன் சொல்லவே புத்தரும் "அரசாங்க வருமானத்தில் வருங்காலத்தில் அதிகாரிகள் சம்பளமும் பெற்றுக் கொண்டு லஞ்சமும் வாங்குவார்கள் என்பது இதன் பொருள்" என்றார்.

அரண்மனை முன் ஒரு பெரிய குழியும் பல சிறிய குழிகள் இருப்பது போலவும் பெரிய குழியில் மட்டும் வழிய வழியத் தண்ணீரை மக்கள் விடுவதையும் சிறிய குழிகளை கவனிக்காமல் இருப்பது போலவும் கனவு கண்டேன் என்றான் மன்னன். புத்தரும் மக்கள் சிரமப்பட்டு சம்பாதிப்பதை வருங்காலத்தில் அரசாங்க பொக்கிஷத்தில் நிரப்புவார்கள்.



ஆனால் மக்கள் வசதி எதுவும் பெறாமல் தம் வீடுகளில் பணம்



இல்லாமல் தவிப்பார்கள்" என்றார். "ஒரு பாத்திரத்தில் சாதம் எல்லாப் பக்கத்திலும் ஒரே மாதிரி வேகாமல் ஒரு பக்கம் நன்கு வெந்தும் வேறு பல பக்கங்களிலும் வேகாமல் இருப்பது போலவும் கண்டேன்" என பிம்பிசாரன் கூறினார். அதற்கு புத்தபிரான், "இது வருங்கால விவசாயம் பற்றியது.

நாட்டில் ஓரிடத்தில் நல்ல பயிர் விளைச்சலும் மற்ற பகுதிகளில் அரைகுறையான விளைச்சலுமே இருக்கும் எனக் காட்டுகிறது" என்று புத்தர் கூறினார். "மற்றொரு கனவு. அதில் நல்ல விலையுயர்ந்த சந்தனத்தைச் சிலர் தெருவில் விற்றுக்கொண்டு போவது போலக் கண்டேன் என மன்னன் கூறவே புத்தரும்" வருங்காலத்தில் சில கயவர்கள் புனிதமான உபதேசங்களைத் தம் இஷ்டம் போலக்கூறி மிகவும் கேவலமான போக வாழ்க்கையை அடைவார்கள என்பதே இதன் பொருள்" என்றார்.

"இன்னும் சில கனவுகள் பாறைகள் நீரில் மிதப்பது போலவும் அன்னப்பறவைகளின் கூட்டத்தில் காகம் சேர்ந்து நடப்பது போலவும் ஆடுகள் புலிகளை அடித்துக் கொன்று தின்பதும் அவற்றைக் கண்டு ஓநாய்கள் பயந்து நடுங்குவதும் நடப்பது போலக்கண்டேன். இவை என்ன கெடுதல்களைக் குறிக்கின்றனவோ?" என்று பிம்பிசாரன் பணிவுடன் கேட்டான்.

புத்தரும் "இவையெல்லாம் வருங்காலத்தில் விபரீத சம்பவங்கள் நிகழும் என்பதைக் காட்டுகின்றன. இவை உன் காலத்தில் ஏற்படாது. அது பற்றிக் கவலைப்பட வேண்டாம். வருங்காலத்தில் தர்மம் சீர்குலைந்து அதர்மம் மேலோங்க அப்போது நல்லவர்களெல்லாம் துன்பப்பட, கெட்டவர்கள் தலை நிமிர்ந்து நடப்பார்கள்.

நல்லவை நசிந்து தீயவை மேலொங்கி வரும். இதனைத் தான் நீ கூறியவை குறிக்கின்றன. இவையாவும் நாட்டில் பாவம் அதிகரிக்கும் போது ஏற்படுபவை. நீ புண்ணிய காரியங்களைச் செய்து தர்ம வழியில் நடந்து வருகிறாய். தொடர்ந்து இப்படியே இரு. எனக்கு எவ்வித பயமும் இல்லை. உன் நாடும் சுபீட்சமாக இருக்கும்" என்றார்.

பிம்பிசாரனின் சந்தேகங்கள் தீர்ந்தன. அவன் மனத்தில் அநாவசியமாக பிராம்மணர்கள் தோற்றுவித்த பயம் ஒழிந்தது. எனவே அவன் யாகங்கள் செய்ய ஏற்பாடுகள் செய்வதை நிறுத்தி விட்டான். புத்தரது உபதேசங்களை ஏற்று அவரைத் தக்கபடி உபசரித்து அவரை ஜைதவனத்திற்குக் கொண்டு போய் விட்டுவந்தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆட்சியிலிருக்கும் அரசாங்கத்துடன் சிநேகபூர்வமாக பேச்சு நடத்துங்கள்

## அமைச்சர் அதாவுல்லா அட்வைஸ்

(கொழும்பு)

**இலங்கையில் இனவாதம் தோன்றுவதற்கு தமிழ்த் தேசியக் கூட்ட மைப்பும் முஸ்லிம் காங்கிரசும் தான் காரணம் என்று ஜனாதிபதி குற்றம் சாட்டுவதாக அமைச்சர் அதாவுல்லா தெரிவித்துள்ளார். பொத்துவிலில் நேற்று முன்தினம் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் கலந்து கொண்டு உரை யாற்றியபோது அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.**

அங்கு தொடர்ந்தும் உரையாற்றிய அமைச்சர் அதாவுல்லா,

பொதுபல சேனாவின் செயற்பாடுகள் குறித்து நாங்கள் ஜனாதிபதியிடம் பேசிக் கொண்டிருந்தோம். அப்போது இந்த நாட்டில் இனவாதம் தோன்றுவதற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் முஸ்லிம் காங்கிரசும்தான் காரணம் என்று குற்றம் சாட்டினார். அதன் காரணமாகவே பொதுபலசேனா போன்ற அமைப்புக்களை கட்டுப்படுத்த முடியாதிருப்பதாக ஜனாதிபதி தெரிவித்தார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு கிழக்கு மாகாண சபை அதிகாரத்தைக் கைப்பற்ற வேண்டும். முஸ்லிம் காங்கிரசுக்கு முஸ்லிம்களின் வாக்குகளைக் கொள்ளையடிக்க வேண்டும் என்பதுதான் நோக்கம்.

அதற்காக அவர்கள் இப்போது கையில் எடுத்துள்ள பிரச்சினை தான் 13 ஆவது திருத்தச் சட்டம். இந்த திருத்தச் சட்டம் இருந்தாலும் இல்லாவிட்டாலும் ஒன்றும் ஆகிவிடப் போவதில்லை.

ஆனால் மாகாணங்கள் ஒன்றிணையும் சரத்து ஒன்றுஅதில் உள்ளடக்கப்பட்டிருக்கும்போது அதனை சிங்கள மக்கள் எதிர்ப்பார்கள். அதிலும் விரைவில் வடமாகாண சபைக்கு தேர்தல் வரப் போகும் நிலையில் நாம் அதனைப் புரிந்து கொள்ள வேண்டும்.

எந்தவொரு பிரச்சினையின் போதும் சர்வதேசத்திடம் கத்திக் கூப்பாடு போடுவதாலோ, முஸ்லிம் காங்கிரசைப் போன்று மேடை போட்டு அரசை கடுமையாக விமர்சிப்பதாலோ அவற்றுக்கு தீர்வு கண்டு விட முடியாது.

அதற்குப் பதிலாக பதவியில் இருக்கும் அரசுடன் சிநேகபூர்வமாகப் பேசியே பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள்ள வேண்டும் என்றும் அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார். (அ-2)

# தமிழர்களின் அரசியல் தீர்வில் முஸ்லிம்களும் உள்ளடக்கப்படுவர்

## அரியநேத்திரன் எம்.பி. தெரிவிப்பு

வடகிழக்கு தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வுத்திட்டம் ஒன்று கிடைக்கும் போது முஸ்லிம் மக்களையும் உள்வாங்கியதாகத் தான் இருக்கும். இவ்விடயத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மாறுபடாது என பாராளுமன்ற உறுப்பினர் பா.அரியநேத்திரன் தெரிவித்துள்ளார்.

கல்முனையில் அண்மையில் நடைபெற்ற விழாவில் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றும் போது மேற்கண்டவாறு கூறினார். அவர் தொடர்ந்து உரை யாற்றுகையில்,தமிழர்களுக்கான அரசியல் தீர்வு கிடைக்கப்பெறும் போது அது முஸ்லிம்களையும் உள்ளடக்கியதாக இருக்கும் என்பது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர்களின் கருத்தாகவே இருக்கின்றது.

ஆனால் முஸ்லிம் அரசியல் தலைவர்கள் மத்தியில் தமிழ் மக்களுடன் இணைந்து தீர்வைப் பெற வேண்டும் என்று உள்ளம் நினைத்தாலும் உதடு சொல் மறுக்கிறது. அதற்கான காரணம் அரசுடன் இருந்து சலுகைகளைப் பெறுகின்றபோது அவர்கள் உள்ளத்தில் இருப்பவற்றை வெளிக்கொண்டு வரத் தயங்குகின்றனர்.

இன்று கிழக்கு மாகாணத்தினைப் பொறுத்தவரையில் தமிழ்-முஸ்லிம்கள் இணைந்தே அரசியல் தீர்வினைப் பெற வேண்டும். வடகிழக்கில் தமிழ் பேசும் மக்கள் பூர்வீகமாகவே வாழ்ந்து வந்துள்ளனர். ஆனால் சிங்களவர்கள் அவ்வாறு அல்ல வேறு இடங்களில் இருந்து வந்தேறு குடிகளாகவே உள்ளனர் என்பதை யாரும் மறுக்கமுடியாது என்றார். (அ-2)

# ஆளும் கட்சி உறுப்பினர்கள் 45 பேருக்கு எதிராக வழக்கு

(கொழும்பு)

ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் 45 உறுப்பினர்களுக்கு எதிராக வழக்குத் தொடரப்பட்டுள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் ரவி கருணாநாயக்க தெரிவித்துள்ளார்.

பல்வேறு குற்றச்சாட்டுக்களின் அடிப்படையில் குறித்த நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். பொலிஸார் குறித்த நபர்களை கைது செய்துள்ளனர்.

இவர்களில் பலருக்கு எதிராக வழக்குத் தொடரப்பட்டுள்ளது.

அமைச்சர்கள், பிரதி அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், மாகாண சபை உறுப்பினர்கள், உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள் உள்ளிட்ட பலருக்கு இவ்வாறு வழக்குத் தொடரப்பட்டுள்ளது.

கடந்த பதினைந்து மாதங்களில் 20 உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாக ரவி கருணாநாயக்க தெரிவித்துள்ளார். (அ-2)

# அரசு பொதுபல சேனாவை ஆதரிக்கவில்லையாம்

(கொழும்பு)

அரசாங்கம் தமக்கு ஆதரவு வழங்கவில்லை என்று இலங்கையின் பௌத்த அமைப்பான பொதுபல சேனா அறிவித்துள்ளது.

இலங்கை அரசாங்கம் தமக்குப் பின்புலமாக இருந்து செயற்படுகிறது என்று சுமத்தப்பட்ட குற்றச்சாட்டை பொதுபலசேனாவின் பிரதம அதிகாரி திலந்த விதானகே தெரிவித்துள்ளார்.

இதற்கு உதாரணமாக தாம் ஜனாதிபதியை சந்திப்பதற்குப் பல முறை கோரிக்கை விடுத்தும் அது பலனளிக்கவில்லை.

காலம் தாமதித்தே அதற்கான அனுமதி வழங்கப்பட்டது. இந்நிலையில் பாதுகாப்பு செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவுக்கும் பொதுபல சேனாவின் தேரர் கேரம விமல கீர்த்திக்கும் இடையில் நீண்டகாலமாக இருந்து வரும் உறவு காரணமாகவே அவர் தமது திட்டங்களுக்கு வருகை தந்ததாக தகவல் வெளியான நிலையில் திலந்த விதானகே மறுத்துள்ளார். (அ-2)

# சாம ஸ்ரீ தேசமான்ய கௌரவம் வழங்கல்

(யாழ்ப்பாணம்)

யாழ். புன்னாலைக்கட்டுவன் ஆகம பண்டிதர் கலாநிதி து.கு.ஜெகதீஸ்வரக் குருக்கள் அகில இன நல்லுறவு ஒன்றியத்தின் சாமஸ்ரீ தேசமான்ய கௌரவப்பட்டம் வழங்கி கௌரவிக்கப்படவுள்ளார்.

சிவகாம பண்டிதர் சிவாகம ஞான பானு சிவாகமகியாரத்தினம், ஆகம கலாசூரி சைவசித்தாந்தவித்தகர் சித்தாந்த நல்லறிஞர் போன்ற பல வேறு பட்டங்களைப் பெற்ற குருக்கள் ஈவினை மீனாட்சியம்பாள் ஆலய அறங்காவலராகவும் 25 இற்கும் மேற்பட்ட ஆலயங்களின் மஹோற்சவ குருவாகவும் நல்லை ஆதீன பிரதம சிவாச்சாரியாராகவும் விளங்குகின்றார். ஜப்பான் பல்கலைக்கழகத்தில் கலாநிதிப்பட்டம் பெற்ற இவர் சமாதான நீதவானாகவும் விளங்குகின்றார் என்பது குறிப்பிடத்தக்கது. (செ-6)




❖ 1534 -பிரின்ஸ் எட்வேர்ட் தீவு ஜாக் கார்ட்டியர் என்ற ஐரோப்பியரால் கண்டுபிடிக்கப்பட்டது.

❖ 1613 - லண்டனில் உள்ள குளோப் நாடகமாளிகை தீயில் எரிந்து அழிந்தது.

❖ 1786 - அலெக்சாண்டர் மாக்டொனெல் மற்றும் 500 கத்தோலிக்கர்கள் ஸ்கொட்லாந்தில் இருந்து சென்று ஒண்டாரியோவின் கிளென்கரி என்ற ஊரில் குடியேறினர்.

❖ 1814 - மெதடிஸ்த திருச்சபையைச் சேர்ந்த ஆறு போதகர்கள் இலங்கையின் காலி நகரை வந்தடைந்தனர்.

❖ 1850 - வான்கூவர் தீவில் நிலக்கரி கண்டுபிடிக்கப்பட்டது.

❖ 1880 - பிரான்ஸ் டெஹீட்டி தீவைக் கைப்பற்றியது.

❖ 1904 - மொஸ்கோவில் இடம்பெற்ற சூறாவளியினால் சுமார் ஆயிரத்து500 வீடுகள், கட்டடங்கள் அழிந்தன்.

❖ 1914 - கிரிகோரி ரஸ்புட்டீன் சைபீரியா நகரில் உள்ள அவரது வீட்டில் இடம்பெற்ற கொலை முயற்சி ஒன்றில் தப்பினார்.

❖ 1925 - கலிபோர்னியாவில் 6.3 ரிக்டர் நிலநடுக்கம் ஏற்பட்டதில் சாண்டா பார்பரா என்ற இடம் முற்றாக அழிந்தது.

❖ 1976 - சிஷெல்ஸ் ஐக்கிய இராச்சியத்தில் இருந்து விடுதலை அடைந்தது.

❖ 1995 - அட்லாண்டிஸ் விண்ணோடம் ரஷ்யாவின் மீர் விண்வெளி நிலையத்துடன் முதற்தடவையாக இணைந்தது.

❖ 2002 - தென் கொரியாவுக்கும் வட கொரியாவுக்கும் இடையில் இடம்பெற்ற கடல் மோதலில் ஆறு தென்கொரிய மாலுமிகள் உயிரிழந்ததுடன் ஒரு வடகொரியக் கப்பல் மூழ்கடிக்கப்பட்டது.

**பிறப்புகள்**

❖ 1945 - **சந்திரிகா குமாரதுங்க, இலங்கையின் நான்காவது ஜனாதிபதி.**

❖ 1981 - ஜோ ஜான்சன், அமெரிக்கக் கூடைப்பந்து ஆட்டக்காரர்

**இறப்பு**

❖ 2009 - வ. ஐ. சுப்பிரமணியம், மொழியியல் அறிஞர் (பி. 1926)

### சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க



சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க 1945ஆம் ஆண்டு யூன் மாதம் 29ஆம் திகதி பிறந்தார். இவர் இலங்கையின் ஐந்தாவது ஜனாதிபதியும் நான்காவது நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியுமாவார்.

சந்திரிகா பரீஸ் பல்கலைக்கழகத்தில் அரசியல் அறிவியல் தொடர்பான பட்டப்படிப்பை முடித்தவர். இவர் சிங்களம், ஆங்கிலம் மற்றும் பிரெஞ்சு மொழிகளில் பரீட்சயம் உள்ளவராவார். இலங்கை திரும்பிய சந்திரிகா, சுதந்திரக் கட்சியில் இணைந்து தமது அரசியல் வாழ்க்கையை தொடங்கினார். 1972-1976 காலப்பகுதியின் நில மறுசீரமைப்பின் போது, இலங்கை நில மறுசீரமைப்பு ஆணைக்குழுவுக்கு மேலதிக பிரதான இயக்குநராக பணியாற்றினார். 1974 இலங்கை சுதந்திரக் கட்சியின் பெண்கள் அணியின் நிறைவேற்றுக் குழு உறுப்பினராக தெரிவு செய்யப்பட்டார். 1976 - 1977 காலப்பகுதியில், கொத்தணிப் பண்ணைகளை அமைத்த ஜனவச ஆணைக்குழுவின் தலைவராக பணியாற்றினார்.1976- 1979 காலப்பகுதியில், உணவு மற்றும் விவசாய அமைப்பிற்கு விசேட ஆலோசகராக பணியாற்றினார்.

1978 இல் சந்திரிகா இலங்கையின் பிரபல நடிகரும் அரசியல்வாதியுமான விஜய குமாரணதுங்கவை மணந்தார். குமாரணதுங்க 1988இல் கொலை செய்யப்பட்டதை அடுத்து சந்திரிகா தனது பெயரில் இருந்த 'ண' வை அகற்றிவிட்டு குமாரதுங்க என்றே பாவித்து வருகின்றார். 1994 ஒகஸ்ட் 19இல் சந்திரிகா மக்கள் முன்னணி தலைமையிலான அரசில் பிரதமராக தெரிவு செய்யப்பட்டார். அவ்வாண்டு நவம்பர் மாதம் நடைபெற்ற ஜனாதிபதி தேர்தலில் வெற்றிபெற்று ஜனாதிபதியாக பதவியேற்றார். இவரது ஆட்சியின் ஆரம்ப பகுதியில் தமிழீழ விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டார். இது தோல்வில் முடிவடைந்தது. 1999 ஒக்டோபர் மாதத்தில் ஜனாதிபதி தேர்தலுக்குரிய நாளுக்கு முன்னதாகவே சந்திரிகா தேர்தலை நடத்த திட்டமிட்டார். அத்தேர்தலில் சந்திரிகா -ரணில் விக்கிரமசிங்கவை வெற்றி பெற்று இரண்டாவது முறையாக ஜனாதிபதியாக பதவியேற்றார்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# அடுத்த திட்டம், தமிழரின் தனித்துவ உரிமைக்கு ஆப்பு !

போர் முடிவுக்கு வந்த பின்னர், தமிழர்களின் பாரம்பரிய தாயகப் பிரதேசமான வடக்கு-கிழக்கின் இனப்பரம்பலை மாற்றியமைக்கும் செயற்பாடுகளை, இலங்கை அரசாங்கம், மேற்கொண்டு வருவதான ஒரு குற்றச்சாட்டு இருந்து வருகிறது. தமிழத் தேசியக் கூட்டமைப்பு மற்றும் தமிழ்க் கட்சிகள் பலவற்றாலும் முன்வைக்கப்படும் இந்தக் குற்றச்சாட்டை, அரசாங்கம் நிராகரித்தே வந்துள்ளது. ஆனால், அரசாங்கத்தின் அடுத்த இலக்காக அமையப்போவது, வடக்கின் இனப்பரம்பலை மாற்றியமைப்பதுதான், என்பதை கடந்த வாரம் ஆங்கில நாளிதழிற்கான பேட்டி ஒன்றில் உறுதிப்படுத்தியுள்ளார் பாதுகாப்புச் செயலர். வடக்கின் மீது தமிழர்கள் கொண்டுள்ள தனித்துவத்தை, இல்லாமற் செய்யவேண்டும் என்ற கருத்து அவரது பேட்டியில் அப்பட்டமாகவே தெரிகிறது. காணிகளை வாங்குவதற்கும், குடியமர்த்துவதற்கும் ஏனைய இனத்தவர்களுக்கு உடனடியாக வடக்கு திறந்துவிடப்பட வேண்டும் என்று இவர் பகிரங்கமாகவே கூறியுள்ளார். அதுபோலவே வடக்கில் சிங்கள, முஸ்லிம் அதிகாரிகள் பணியாற்றுவதற்கு அனுமதிக்கப்பட வேண்டும் என்றும் பாதுகாப்புச் செயலர் வலியுறுத்தியுள்ளார்.

வடக்கில் வெளியார், காணிகளை வாங்குவதற்கு தேசவழமைச் சட்டம் தடங்கலாக இருக்கிறது என்பது உண்மை. அதனால் தான், அந்தச் சட்டத்தை ஒழிக்க வேண்டும் என்று சிங்களத் தேசியவாதிகள் சிலர் 2010 இலேயே குரல் எழுப்பியிருந்தனர். அதன் பின்னர் அடங்கிப் போயிருந்த விவகாரத்தை, பாதுகாப்புச் செயலர் மீண்டும் உசுப்பிவிட முனைகிறார்.

வடக்கில் நடைமுறையில் உள்ள தேசவழமைச் சட்டம் தான், வெளியார், வடக்கில் காணிகளைக் கொள்வனவு செய்வதைத் தடுத்ததேயன்றி, வேறெந்த தடையும் சிங்களவர்களோ அல்லது வேறெவரோ காணிகளை வாங்குவதற்குத் தடையாக இல்லை. இன்றைய நிலையில், படையினரின் அதிகாரத்தை மீறி, வடக்கில் சிங்களவர்கள் காணிளை வாங்கிக் குடியேறுவதையோ அல்லது வேறு எங்காவது குடியமர்வதையோ தடுக்கின்ற அதிகாரம் யாருக்கும் இல்லை. அரசாங்கமும் படைத்தரப்பும் நினைத்ததே வடக்கில், சட்டம் என்றுள்ள நிலையில், இன்னமும் அது ஏனைய இனங்களுக்கு மூடப்பட்டதொரு பிரதேசமாகவே இருப்பதாக பாதுகாப்புச் செயலர் குறிப்பிட்டுள்ளார்.


அவ்வாறாயின், அடுத்த கட்டமாக தேசவழமைச் சட்டத்தின் மீது அரசாங்கத்தின் கவனம் திரும்பப் போகிறது என்றே அர்த்தம்.

13-வது திருத்தச் சட்டம் ஆபத்தானது என்றும் காணி, பொலிஸ் அதிகாரங்களை ஒழித்த பின்னரே வடக்கு மாகாணசபைக்குத் தேர்தலை நடத்தவேண்டும் என்றும், சிங்களத் தேசியவாதிகளை உசுப்பிவிட்டவரே பாதுகாப்புச் செயலர் தான். அவர், இதுபற்றிக் கருத்து வெளியிட்ட பின்னர் தான், சிங்களத் தேசியவாத கட்சிகள், அமைப்புகள், அரசியல் தலைவர்கள் போர்க்கொடி தூக்கி நிற்கின்றனர். பாதுகாப்புச் செயலர், அரசாங்கத்தில் வலுவாகச் செல்வாக்குச் செலுத்தக்கூடிய ஒருவராக விளங்கினாலும், பல்வேறு சந்தர்ப்பங்களில் இதுபோன்ற கருத்துக்களின் ஊடாக, சிங்கள, பௌத்த தேசியவாதிகளை உசுப்பி விட்டு, அரசாங்கத்தை தன் கருத்துக்கு இசைந்து செயற்பட வைக்க முனைகிறார். 13-வது திருத்தச் சட்டம் தொடர்பான தற்போதைய நகர்வுகள் அனைத்தும் இத்தகைய பின்னணியில் வந்தவை தான்.

இப்போது, வடக்கில் தமிழர்களுக்கு உள்ள தனித்துவத்தை இல்லாமல் செய்து, எல்லா இனங்களும் வாழும் பிரதேசமாக மாற்றுவது தான், அவரது திட்டம். அவ்வாறு செய்வத்ன் மூலம் நல்லிணக்கத்தை ஏற்படுத்தலாம் என்ற ஆபத்தான வழியொன்றை அவர் காட்ட முனைகிறார். தெற்கில் தமிழர்கள் இயல்பாக வாழ்வது போலவே வடக்கில் சிங்களவர்கள் வாழ அனுமதிக்கப்பட வேண்டும் என்ற அவரது கருத்து நல்லிணக்கத்தை அடிப்படையாக கொண்டதென்று கூறமுடியாது. தமிழர்கள் தெற்கில், குடியேறிய சூழலையும், அதற்கான காரணத்தையும் வடக்கில் சிங்களவர்களின் குடியேற்றம் மற்றும் அதற்கான காரணத்தையும ஒப்பீடு செய்ய முடியாது. இரண்டுக்குமான பின்புல அரசியல் தளம் வேறுபட்டது.

தேசவழமைச் சட்டத்தை இல்லாமற் செய்வதன் மூலமே வடக்கில் வெளியார் [illegible] வாக்க முடியும் என்பதை சொல்லாமல் சொல்லி விட்டுள்ளார் கோத்தபாய ராஜபக்ஷ, எனவே 13 வது திருத்தச் சட்டத்துக்கு அடுத்ததாக தேசவழமைச் சட்டத்தின் மீதும் அரசாங்கம் கை வைக்கலாம். வடக்கின் மீது தமிழர்களுக்கு உள்ள தனியுரிமைதான், எல்லாப்பிரச்சினைகளுக்கும் காரணம் என்று தவறாகப் புரிந்து கொண்டிருப்பது தான் பெரும்பாலான சிங்களத் தலைவர்களினது மிகப்பெரிய தவறு. இதனால் தான், வடக்கில் தமிழர்களின் தனியுரிமையை இல்லாமற் செய்ய வேண்டும் என்பதில் அவர்கள், அக்கறை கொண்டுள்ளனர்.

இந்தியாவில் சில பிரதேசங்களில், வாழும் மக்கள் தமது தனியுரிமையைப் பாதுகாக்க சிறப்பு சட்ட ஏற்பாடுகள் இருக்கின்றன. இமாசலப் பிரதேசம், காஷ்மீர் உள்ளிட்ட மாநிலங்களில், உள்துறை அமைச்சின் அங்கீகாரத்தைப் பெறாமல், வெளியார் யாரும் நிலங்களை வாங்க முடியாது. அதுபோலத் தான், வடக்கிலும் தேசவழமைச் சட்டம் சில தடைகளைக் கொண்டுள்ளது. அத்தகைய தடைகள் எல்லாவற்றையும் நீக்கி, தமிழ் மாகாணமான வடக்கை ஒரு கலப்பு மாகாணமாக மாற்ற முனைகிறது அரசாங்கம்.



இந்த திட்டம் இப்போது உருவானது அல்ல.

ஏற்கனவே, ஜே.ஆர்.ஜெயவர்த்தன காலத்தில் வவுனியா தெற்கிலும், மணலாற்றிலும், மன்னாரிலும் சிங்களக் குடியேற்றங்கள் இத்தகைய நோக்கிலேயே மேற்கொள்ளப்பட்டன.

ஆனால், விடுதலைப்புலிகளின் தாக்குதல்கள் இந்தத் திட்டத்தை கட்டுப்படுத்தியிருந்தது. இப்போது [illegible] புலிகள் தோல்வியடைந்துள்ள நிலையில், மீளவும் அரசாங்கம் சிங்களக் குடியேற்றங்களை வெளிப்படையாகச் செய்யாமல், வடக்கைத் திறந்துவிடுதல் என்ற பெயரில் அதை நடைமுறைப்படுத்த முனைகிறது. இதனால், திட்டமிட்ட சிங்களக் குடியேற்றம் என்ற பழி, அரசாங்கத்தின் மீது வராது. ஆனால், வடக்கின் இனப் பரம்பல், அரசாங்கம் திட்டமிட்டபடி-அது விரும்பியபடி மாற்றத்துக்குள்ளாகும்.

தனது திட்டத்தை இலகுவாக நிறைவேற்றிக் கொள்வதற்காகவே கோத்தபாய ராஜபக்ச, இன்னொரு திட்டத்தையும் முன்வைத்துள்ளார். வடக்கில் ஏனைய இன அதிகாரிகளையும் நியமிக்க வேண்டும் என்பதே அது. அவரது பேட்டியில், வடக்கில் தற்போது, எந்தவொரு சிங்கள அல்லது முஸ்லிம் அதிகாரியும் பணியாற்றவவில்லை என்ற கருத்தே தொனிக்கிறது. ஆனால், வடக்கு மாகாண ஆளுனராக இருப்பவர் ஒரு சிங்களவர் தான். வவுனியா, மன்னார் மாவட்டங்களில் அரசாங்க அதிபர்களாக இருப்பவர்களும் சிங்களவர்கள் தான். யாழ்ப்பாணத்தில் உதவித் தெரிவத்தாட்சி அதிகாரியாக இருப்பவர் ஒரு முஸ்லிம். யாழ்ப்பாணத்தில், உள்ள பிரதேச செயலகங்களிலும் மாவட்டச் செயலகத்திலும், எத்தனையோ சிங்கள, முஸ்லிம் அதிகாரிகள் பணியாற்றுகின்றனர். அதையெல்லாம் மறந்துவிட்டு, வடக்கை ஏனைய இனத்தவர்களுக்காகத் திறந்துவிட வேண்டும் என்று பாதுகாப்புச் செயலர் கூறியிருப்பதன் அர்த்தம் ஆபத்தானது.

கிழக்கில், தமிழர்களை அரசாங்கம் திட்டமிட்ட முறையில் சிறுபான்மையினராக்கிவிட்டது. இந்த நிலையில், தமிழர்களுக்கென தனித்துவமாக எஞ்சியுள்ள ஒரு பிரதேசமான, வடக்கையும் சிங்களமயப்படுத்துவதே அரசாங்கத்தின் அடுத்த திட்டம். என்பதை விளங்கிக் கொள்ள முடிகிறது. போருக்குப் பிந்திய, நல்லிணக்கத்துக்காகவே, வடக்கில் தமிழர்கள் கொண்டுள்ள தனித்துவத்தை இல்லாமல் செய்ய வேண்டும் என்று பாதுகாப்புச் செயலர் நியாயப்படுத்துகிறார். ஆனால், இந்த விடயத்தில் மட்டுமன்றி, வடக்கு இன்னொரு விடயத்திலும் தனித்துவமாக நடத்தப்படுகிறது என்பதை கவனத்தில் கொள்ள வேண்டும்.

நாட்டின் ஏனைய பகுதிகளைப் போலன்றி வடக்கு, படைக்குவிப்புச் செய்யப்பட்ட பகுதியாகவே காட்சியளிக்கிறது. அந்த தனித்துவத்தை இழக்க விரும்பாத அரசாங்கம் தான், அந்த தனித்துவத்தை நியாயப்டுத்துகின்ற அரசாங்கம் தான், வடக்கின் மீது தமிழர்கள் கொண்டுள்ள தனித்துவத்தை அழிக்கப் பார்க்கிறது. அதிலிருந்து அரசாங்கத்தினது அடுத்த திட்டம் தமிழர்களை எந்தவகையிலும் இலக்கு வைக்கவுள்ளது என்பதை எவராலும் இலகுவாகவே விளங்கிக் கொள்ள முடியும்.

-தொல்காப்பியன்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசியலமைப்பு மறுசீரமைப்புக்கு சரியான தீர்வு தெரிவுக்குழுதான்

## அமைச்சர் பீரிஸ் இராஜதந்திரிகளுக்கு விளக்கம்

(கொழும்பு)

**நாட்டில் தற்போது வாதப்பிரதிவாதங்களுக்கு உள்ளாகியுள்ள அரசியலமைப்பு மறுசீரமைப்பு தொடர்பில் சரியான தீர்வு காண்பதற்கு பாராளுமன்ற தெரிவுக்குழுவுக்கு மாற்றீடு எதுவும் இல்லையென வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.**

நாட்டின் தற்போதைய அரசியல் நிலைமை தொடர்பில் வெளிநாட்டுத் தூதுவர்கள் மற்றும் உயர்ஸ்தானிகர்களுக்கு வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் மற்றும் ஜனாதிபதி செயலாளர் லலித்வீரதுங்க ஆகியோர் கடந்த புதன்கிழமை அமைச்சில் வைத்து விளக்கமளித்திருந்தனர்.

இதன்போது கருத்து தெரிவிக்கையிலேயே அமைச்சர் மேற்கண்டவாறு கூறினார்.

அரசியலமைப்பு தொடர்பிலான திருத்தங்கள் பாராளுமன்றத்துக்கு சமர்ப்பிக்கப்படுவதற்கு முன்பாக இது தொடர்பில் கட்டமைக்கப்பட்ட விரிவான அணுகுமுறை அவசியமென மாகாண சபைகள், அரசியல் கட்சிகள், கல்விமான்கள் மற்றும் தொழில்வல்லுநர்கள் பல்வேறுபட்ட அபிப்பிராயங்களை அண்மையில் வெளிப்படுத்தியுள்ளனர்.

பாராளுமன்றத்தின் பார்வையில் அரசியலமைப்பு சீர்திருத்தம் அத்தியாவசியமாகியுள்ள நிலையில், பெரும்பான்மையினர் விசேடமாக கேட்டுக் கொண்டுள்ளதற்கமைய பாராளுமன்ற தெரிவுக்குழு அத்தியாவசியமாகியிருப்பதாகவும் அமைச்சர் இதன்போது கூறினார்.

அரசாங்கம் இவ்விடயம் தொடர்பிலான செயற்பாடுகளை துரிதப்படுத்தி வருவதாக தூதுவர்கள் மத்தியில் சுட்டிக்காட்டிய அமைச்சர், இதன் காரணமாகவே பாராளுமன்ற தெரிவுக்குழு, அதன் தலைவர் மற்றும் உறுப்பினர்கள் தொடர்பில் சபாநாயகர் கடந்த வாரம் அறிவித்ததாகவும் குறிப்பிட்டார். இதன்படி, ஜூலை 9 ஆம் திகதி பாராளுமன்றத் தெரிவுக்குழு கூட இருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

தெரிவுக்குழுவின் தலைவரும் சபை முதல்வருமான அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா குழுச் செயற்பாடுகள் தொடர்பில் முக்கியத்துவங்கள் மற்றும் முன்னுதாரணங் களை அடிப்படையாகக் கொண்டு ஆரம்ப உடன்படிக்கைகளை முன்னெடுக்க ஆர்வமாக இருப்பதாகவும் விளக்கமளித்த அமைச்சர் பீரிஸ் பரந்துபட்ட கலந்துரையாடலுக்குப் பின்னர் தீர்மானங்கள் எடுக்கப்படுமெனவும் கூறினார்.

பாராளுமன்ற தெரிவுக்குழுவின் கலந்துரையாடல்கள், அரசியலமைப்புக்கான 13 ஆவது திருத்தம் உள்ளிட்ட அரசியலமைப்பின் அனைத்து விடயங்களையும் உள்ளடக்கியதாக அமையுமென எதிர்பார்ப்பதாகவும் அமைச்சர் இதன்போது தெரிவித்தார்.

பாராளுமன்ற தெரிவுக்குழுவில் அரசாங்கம் சார்பில் 19 உறுப்பினர்களும் எதிர்க்கட்சிகள் சார்பில் 12 உறுப்பினர்களும் உள்ளடக்கப்படுவர்.

பாராளுமன்ற ஜனநாயக முறைமைக்குக் கட்டுப்பட்ட அரசாங்கம் என்ற வகையிலேயே இதற்கான அனைத்து ஏற்பாடுகளும் முன்னெடுக்கப்பட்டிருப்பதாகவும் அவர் கூறினார். தெரிவுக்குழுவின் விதிமுறைகளுக்கு அமைய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரின் கருத்துக்களும் இதில் உள்வாங்கப்படும் அதேவேளை தெரிவுக்குழுவின் செயற்பாடுகள் தீர்மானிக்கப்படும். கால வரையறைக்குட்பட்டதாக இருக்குமெனவும் அமைச்சர் பீரிஸ் தெரிவித்தார். அனைத்து அரசியல் கட்சிகளும் இந்த தெரிவுக் குழுவில் அங்கம் வகிக்கும் என்பதே அரசாங்க த்தின் எதிர்பார்ப்பும் மற்றும் நம்பிக்கையுமாகுமெனவும் அவர் குறிப்பிட்டார்.

இதேவேளை, நவம்பரில் இலங்கையில் நடத்தப்படவுள்ள பொதுநலவாய உச்சி மாநாடு மற்றும் அதனையொட்டி முன்னெடுக்கப்படவுள்ள வர்த்தகப் பேரவை, இளைஞர் பேரவை மற்றும் மக்கள் பேரவை ஆகியவற்றை முன்னிட்டு தற்போது மேற்கொள்ளப்பட்டுள்ள விசேட ஏற்பாடுகள் என்பன தொடர்பாகவும் அமைச்சர் பீரிஸ் இதன்போது வெளிநாட்டுத் தூதுவர்களுக்கு விளக்கமளித்தார்.

மூன்று அமைச்சரவை குழுக்கள் இது தொடர்பிலான செயற்பாடுகளை முன்னெடுத்து வரும் அதேவேளை, பிரபல தொழில் வல்லுநர்களது தலைமையில் முன்னெடுக்கப்படவுள்ள வர்த்தகப் பேரவைக்கென தனியார் மற்றும் அரச துறையினரால் 69 கொள்கைச் செயற்றிட்டங்கள் செய்யப்பட்டுவருவதாகவும் அமைச்சர் கூறினார்.

இக்கூட்டத்தில் ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்க கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகள் செயற்படுத்தப்படும் விதம், அதன் தற்போதைய வளர்ச்சி நிலை என்பன குறித்து வெளிநாட்டுத் தூதுவர்கள் மற்றும் உயர்ஸ்தானிகர்களுக்கு விளக்கமளித்தார். (அ-2)



சின்னையா சிவராசாவின் முயற்சியால் மிகவும் பின்தங்கிய கிராமமாகிய செட்டி புலக் கிரமாத்திற்கு மீள் எழுச்சித் திட்டத்தின் கீழ் செட்டிப்புலம் ஐயனார் கோவில் வீதி, வடக்கின் வசந்தம் விசேட 100 மில்லியன் ஒதுக்கீட்டில் செட்டிப்புலம் முருகன் கோவில் வீதி மற்றும் மின்சார இணைப்பு போன்ற வேலைத்திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக குறிப்பிடப்படுகின்றது. புனரமைக்கப்படும் வீதியைப் படத்தில் காணலாம்...

# பாலஸ்தாபனம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.கட்டப்பிராய் அருள்மிகு ஸ்ரீமுத்துமாரி அம்பாள் ஆலய பாலஸ்தாபன நிகழ்வு எதிர்வரும் ஜூலை மாதம் 3 ஆம் திகதி புதன் கிழமை காலை 6.40 மணிக்கு இடம்பெறவுள்ளது.

அம்பாளிற்கான பஞ்சதள இராஜ கோபுர வேலைகள் ஆலய புனருத்தாரண வேலைகள் வெகுவிரைவில் பூர்த்தி செய்து மஹாகும்பாபிஷேக பெருஞ்சாந்தி விழா இடம்பெறவுள்ளதாக ஆலய பரிபாலன சபயினர் அறிவித்துள்ளனர். (அ)

# பாலர் விளையாட்டு விழா நாளை

(யாழ்ப்பாணம்)

உடுவில் இந்து இளைஞர் மன்றத்தின் பாலர் விளையாட்டு விழா நாளை ஞாயிற்றுக்கிழமை பாலர் பாடசாலை மைதானத்தில் பிற்பகல் 1.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

மன்றத் தலைவர் தி. தியாகச்சந்திரன் தலைமையில் நடைபெறவுள்ள இவ் விளையாட்டு விழாவில் பிரதம விருந்தினராக யா/சீனன்கலட்டி ஞானோதய வித்தியாசாலை அதிபர் சிதம்பரப்பிள்ளை சிவராஜன், சிறப்பு விருந்தினராக சுன்னாகம் மக்கள் வங்கி உதவி முகாமையாளர் தனுசியா உமாநாத், கௌரவ விருந்தினராக கணனி பொறியியல்துறை விரிவுரையாளர் தி. ஜெயந்தன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

பரிசில்களை யா/இராமநாதன் கல்லூரி பிரதி அதிபர் நந்தினி சிவராஜன் வழங்கவுள்ளார். (அ)

# ஐ.தே.க.யாப்பு நகல் சந்திரிகாவிடம்

(கொழும்பு)

ஐக்கியதேசியக் கட்சியால் தயாரிக்கப்பட்டுள்ள உத்தேச புதிய அரசியல் யாப்பின் நகல் இலங்கையின் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

கொழும்பு சுதந்திர மாவத்தையில் உள்ள சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவின் இல்லத்தில் வைத்து நேற்றைய தினம் காலை இந்த அரசியல் யாப்பு நகல் கையளிக்கப்பட்டுள்ளது.

இதில் ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க உள்ளிட்ட குழுவினர் கலந்து கொண்டனர். (அ-2)

# வாகன விபத்தில் பிக்கு பலி!

மஹியங்கனையில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த லொறியொன்றின் பின்பகுதியில் முச்சக்கரவண்டி மோதி ஏற்பட்ட விபத்தில் பிக்கு ஒருவர் உயிரிழந்துள்ளார்.

நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை காலை 8.40 மணியளவில் இடம்பெற்ற இவ்விபத்தில் முச்சக்கர வண்டியில் பயணித்த சாரதி, இரு பிக்குகள் உள்ளிட்ட நால்வர் காயமடைந்து மஹியங்கனை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

அதில் 33 வயதான ஒரு பிக்கு சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார். ஏனையோர் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

மஹியங்கனை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (செ)

# சீருடை அணியாவிட்டால் நடவடிக்கை எடுக்கப்படும்

## பொதுச் சுகாதார பரிசோதகர்களுக்கு எச்சரிக்கை

யாழ். மாநகர சபையில் பணிபுரியும் பொதுச் சுகாதார பரிசோதகர்கள் அனைவரும் கண்டிப்பாக சீருடை அணிய வேண்டும். இல்லையேல் அவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படும் என சபையின் ஆணையாளர் செ. பிரணவநாதன் தெரிவித்தார்.

யாழ். மாநகர சபையின் மாதந்த பொதுக் கூட்டம் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை நடைபெற்றது.

இதன்போது சுகாதார பரிசோதகர்கள் பணியின் போது சீருடை அணிவதில்லை என்ற குற்றச்சாட்டினை எதிர்க்கட்சி உறுப்பினர்கள் முன்வைத்தனர். இதையடுத்தே ஆணையாளர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து கூறுகையில், மாநகர சபையின் பொதுச் சுகாதார பரிசோதகர்கள் சீருடை இன்றி சோதனைகளில் ஈடுபடவேண்டாம். அவ்வாறு சீருடை இன்றி சோதனையில் ஈடுபடுவோருக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படும்.

மேலும் மாநகர சபை எல்லைக்குள் கட்டடம் கட்டுவதற்கு அனுமதி வழங்குவதற்கு முன்பெல்லாம் 4 மாதங்கள் எடுத்துக் கொள்ளப்பட்டன. ஆனால், தற்போது ஒரு நாளில் அனுமதி வழங்கப்படுகின்றது. இந்த அனுமதி இலங்கையில் எந்தவொரு சபையினாலும் வழங்கப்படுவதில்லை. அவ்வாறு இருந்தும் யாழ். மாவட்டத்தில் அனுமதியற்ற கட்டடங்கள் கட்டப்பட்டுள்ளன என்றும் சுட்டிக்காட்டினார்.

அந்த வகையில், 450 இடங்களில் கட்டப்பட்டுள்ள அனுமதியற்ற கட்டட உரிமையாளர்களுக்கு எச்சரிக்கை கடிதம் (சிவப்பு நோட்டீஸ்) வழங்கப்பட்டுள்ளது. யாழ். மாநகர சபையினால் தற்போது இந்தவொரு நடவடிக்கையை மாத்திரமே மேற்கொள்ள முடியும் என அவர் மேலும் தெரிவித்தார். (அ-6)

# இன்று முதல் 5 ஆம் திகதிவரை மின்சாரம் தடைப்படும்

(யாழ்ப்பாணம்)

வீதி அகலிப்பு பணிகளுக்காக உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் நிவியோக மார்க்கங்களை இடம் நகர்த்தவேண்டியிருப்பதாலும், புதிய உயர் அழுத்த மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காகவும் காலை 8.30 மணியிலிருந்து மாலை 5.30 மணிவரையும் மின்விநியோகம் தடைப்பட்டிருக்குமென யாழ். பிரதேச மின் பொறியியலாளர் அறிவித்துள்ளார்.

இதன் பிரகாரம் இன்று சனிக்கிழமை இடைக்காடு, பத்தமேனி, வளலாய், தொண்டைமானாறு வீதிப் பிரதேசம், இளவாலை, மாதகல், சில்லாலை, சுழிபுரம், விளான், பண்டத்தரிப்பு, வடலியடைப்பு ஆகிய இடங்களிலும்,

நாளை ஞாயிற்றுக்கிழமை குஞ்சர்கடைப் பிரதேசத்தின் ஒரு பகுதி, உடுப்பிட்டி, தொண்டைமானாறு, வல்வெட்டித்துறை, வல்வெட்டி, நவிண்டில், சுன்னாகம், புன்னாலைக் கட்டுவன், அச்செழு, ஆவரங்கால், புத்தூர், அச்சுவேலி, வல்லை, புறாப் பொறுக்கி, பரமேஸ்வரா சந்தி, பலாலி வீதி, விஞ்ஞானபீடப் பிரதேசம், அரசடி வீதி, கொழும்புத்துறை வீதி, ஈச்சமோட்டை, பாஷையூர், குருநகர், கந்தர்மடம், ஆரியகுளம், ஸ்ரான்லி வீதி, வேம்படிப் பிரதேசம், கொன்வெண்ட் பிரதேசம், பிரதான வீதி குருநகர், யாழ்.பட்டணப் பகுதி ஆகிய இடங்களிலும்,

நாளை மறுதினம் திங்கட்கிழமை, எதிர்வரும் ஜூலை மாதம் 3 ஆம்திகதி புதன்கிழமை மற்றும் 5 ஆம்திகதி வெள்ளிக்கிழமை ஆகிய தினங்களில் அம்பன், குடத்தனை பிரதேசங்களிலும் மின்விநியோகம் தடைப்பட்டிருக்குமென அவர் குறிப்பிட்டுள்ளார். (அ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மக்களின் வாழ்வாதாரம் குறித்து கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

பனைசார் தொழில் துறையில் தங்கியுள்ள 70 ஆயிரத்திற்கும் மேற்பட்ட குடும்பங்களினது. வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் பொருட்டு தயாரிக்கப்பட்ட அமைச்சரவைப் பத்திரம் தொடர்பிலான கலந்துரையாடல் அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தாதலைமையில்நடைபெற்றுள்ளது.

வடமாகாண பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கங்களின் சமாச கூட்டுறவாளர் மண்டபத்தில் கடந்த 26 ஆம் திகதி இடம் பெற்றுள்ளது.

இதன்போது பனைசார் தொழிற்றுறையின் மேம்பாட்டைக் கருத்தில் கொண்டு தயாரிக்கப்பட்ட அமைச்சரவைப் பத்திரத்தில் 70 ஆயிரத்திற்கும் மேற்பட்ட குடும்பங்கள் குறித்த தொழிற்றுறையை தமது வாழ்வாதாரமாக கொண்டு வாழ்ந்து வருகின்றன.

இத்திட்டத்தில் 7 செயற்றிட்டங்கள் உள்ளடங்கப்பட்டுள்ள நிலையில் அவை தொடர்பில் அமைச்சர் துறைசார்ந்தோரிடம் கலந்துரையாடி அவர்களது கருத்துக்களையும் ஆலோசனைகளையும் கேட்டறிந்து கொண்டார்.

பனைவளம் சார்ந்த மேம்பாட்டு செயற்றிட்டங்கள் பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சின் கீழான பனை அபிவிருத்தி சபையினால்வடக்கு, கிழக்குமாகாணங்களில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் ஆலோசனைக்கு அமைவாக முன்னெடுக்கப்பட்டு வரும் நிலையில் மேலும் அத்திட்டங்கள் விரிவாக்கப் படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதனிடையே சமாசம் விடுத்த கோரிக்கைக்கு அமைவாக அமைச்சரினால் அன்பளிப்புச் செய்யப்பட்ட ஐந்து புதிய கணனிகளை பார்வையிட்ட அவர் அவற்றின் செயற்பாடுகளை உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைத்தார்.

இதன்போது பனை அபிவிருத்தி சபைத் தலைவர் பசுபதி சீவரத்தினம், பொதுமுகாமையாளர் லோகநாதன், சமாசத் தலைவர் கணேசன் ஆகியோர் உடனிருந்தனர். (அ-2)

# ஆளும் கட்சியிலிருந்து விலகப் போவதில்லை

### *தடுமாறுகிறது முஸ்லிம் காங்கிரஸ்*

(கொழும்பு)

ஆளும் கட்சியிலிருந்து விலகப் போவதில்லை என ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் பொதுச் செயலாளர் எம்.ரீ. ஹசன் தெரிவித்துள்ளார். இவ்விடயம் தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

பாராளுமன்றத் தெரிவுக்குழுவில் தங்களை உள்ளடக்காத காரணத்திற்காக ஆளும் கூட்டணியிலிருந்து விலகிக் கொள்ளும் உத்தேசம் கிடையாது எனவும் ஆளும் கட்சியிலிருந்து விலகப் போவதில்லை எனவும் தம்மை கூட்டணியிலிருந்து நீக்குவது தொடர்பில் ஜனாதிபதியே இறுதித்தீர்மானம் எடுக்க வேண்டும்.

பாராளுமன்றத் தெரிவுக் குழுவில் தமது கட்சிக்கு பிரதிநிதித்துவம் வழங்கப்படவில்லை என்பதனை ஊடகங்கள் மூலம் அறிவித்துள்ளனர்.

எனினும் அரசாங்கத்தின் பின்னால் சென்று பிரதிநிதித்துவத்தை பெற்றுக் கொள்ளப்போவதில்லை என ஆளும் கட்சியில் அங்கம் வகிக்கும் சில கட்சிகளுக்கு இடையில் மாறுபட்ட நிலைப்பாடுகள் காணப்படுவதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார். (அ-2)

# மாகாணசபை முறைமையை எதிர்த்தாலும் தேர்தலில் போட்டி

### ஜே.வி.பி.பொதுச்செயலாளர்

மாகாணசபை முறைமையை எதிர்த்த போதிலும் தேர்தல்களில் தொடர்ந்தும் போட்டியிடப் போவதாக ஜே.வி.பி. பொதுச்செயலாளர் ரில்வின் சில்வா தெரிவித்துள்ளார்.

இவ்வாறு மாகாணசபைத் தேர்தல்களில் போட்டியிடுவதன் மூலம் மாகாணசபைகளை ஏற்றுக்கொண்டதாக அர்த்தப்படாது.

மாகாணசபை முறைமையை இரத்துச் செய்து தமிழ்மக்களின் மெய்யான பிரச்சினைகளுக்கு தீர்வு வழங்க வேண்டும்.

மாகாணசபை முறைமையை இரத்துச் செய்ய யோசனை கொண்டு வரப்பட்டால் முழு அளவில் ஆதரவு வழங்கப்படும்.

மாகாணசபை முறைமையானது இனவாதத்தை தூண்டக்கூடிய ஓர் செயற்பாடாகும்.

தேசிய இனப்பிரச்சினைக்குமாகாண சபை முறைமையில் எவ்வித தீர்வுகளும் கிடையாது என அவர் தெரிவித்துள்ளார். (அ-2)

# 13 ஆவது திருத்தச் சட்ட மூலத்தை 19 ஆவது திருத்தம் பாழாக்கி விடும்

### ஆங்கில ஊடகம் சுட்டிக்காட்டு

(கொழும்பு)

13 ஆவது அரசியல் அமைப்பு திருத்தத்தில் மாற்றம் மேற்கொண்டு வரப்படவுள்ள 19 ஆவது அரசியல் அமைப்பு திருத்தம் இலங்கையின் நல்லிணக்க செயற்பாடுகளை பாழாக்கி விடும் என ஆங்கில ஊடகம் ஒன்று இந்தக் கருத்தை வெளியிட்டுள்ளது.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ 13 இற்கு பதிலாக 13 பிளஸ் என்ற அரசியல் அமைப்பை கொண்டு வரப்போவதாக இந்தியாவிடம் உறுதியளித்திருந்தார்.

எனினும் கோத்தபாய ராஜபக்ஷ இலங்கையில் அனைவரும் ஏற்றுக் கொள்ளக் கூடிய தீர்வு ஒன்றே காணப்பட வேண்டும் என்று கூறி வருகிறார்.

இதன் அடிப்படையில் காணி, பொலிஸ்அதிகாரங்கள்என்றமாகாண சபையின் அதிகாரங்கள் நீக்கப்பட்டு அத்துடன் இரண்டு மாகாண சபைகள் ஒன்றிணைவது தடுக்கப்பட்டு 19 ஆவது அரசியல் அமைப்பு கொண்டு வரப்படுவதாக அந்த ஆங்கில ஊடகம் குறிப்பிட்டுள்ளது.

எனவே, அது இலங்கையில் நல்லிணக்கத்தை பாதிக்கும் என்றும் குறித்த ஊடகம் குறிப்பிட்டுள்ளது.

இதேவேளை அடுத்த வாரத்தில் 19 ஆவது அரசியல் அமைப்பு திருத்த சட்ட மூலம் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் என்று அரசாங்க அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல அறிவித்துள்ளார். (அ-2)

# நாகர் கோயில் பகுதிக்கு தனியார் பேருந்து சேவை

### அமைச்சர் டக்ளஸ் பணிப்பு

(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறையில் இருந்து வடமராட்சி கிழக்கு நாகர் கோவில் பகுதிக்கு தனியார் பேருந்து சேவையை நடத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

யாழ்.மாவட்டச்செயலகத்தில் அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா தலைமையில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை நடைபெற்ற கலந்துரையாடலின் போதே உடனடியாக குறித்த பகுதிக்கு போக்குவரத்துச் சேவையினை ஆரம்பிக்குமாறு அமைச்சர் பணிப்புரை விடுத்துள்ளார்.

வடமராட்சி கிழக்கு நாகர் கோயில் பகுதியில் 10 வருடங்களுக்குப் பின்னர் கடந்த 2011 ஆம் ஆண்டு மக்கள் மீள்குடியேற்றம் செய்யப்பட்டுள்ளனர். குறித்த பகுதிக்குச் செல்வதற்கு மக்கள் பருத்தித்துறை-மருதங்கேணி பிரதான வீதிக்கு 3 கிலோ மீற்றருக்கு நடந்து வந்து பயணம் செய்ய வேண்டிய நிலையே காணப்பட்டு வருகின்றது.

இந்நிலையைக் கருத்திற்கொண்டு அப்பிரதேசத்திற்கான போக்குவரத்து வசதியை மேற்கொண்டு தருமாறு மக்கள் விடுத்த கோரிக்கையை அடுத்து குறித்த பகுதிக்கு போக்குவரத்து வசதி மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இந்தப் போக்குவரத்தினை மந்திகையூடாக உடனடியாக வடமராட்சி கிழக்கு தனியார் பஸ் சங்கத்துடன் இணைந்து முன்னெடுக்க வேண்டுமென்றும் பாடசாலை மாணவர்கள், அரச உத்தியோகத்தர்கள் மற்றும் பொதுமக்களின் நன்மைகருதி நாளொன்றுக்கு மூன்று தடவைகள் இச்சேவை நடத்தப்பட வேண்டுமென்றும் துறைசார்ந்தோரிடம் கேட்டுக் கொண்டார்.

இக்கலந்துரையாடலில் மாவட்ட அரசாங்க அதிபர் சுந்தரம் அருமைநாயகம், யாழ்.மாநகரசபை முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராஜா, மருதங்கேணி பிரதேச செயலர் திருலிங்கநாதன், பருத்தித்துறை பிரதேச செயலர் ஜெயசீலன் மற்றும்பிரதேசவாழ்மக்கள்எனப்பலரும் கலந்து கொண்டனர். (அ-6)

# ஹெரோயின் குற்றவாளிக்கு மரண தண்டனைத் தீர்ப்பு

(கொழும்பு)

3.3 கிராம் ஹெரோயின் வைத்திருந்த குற்றச்சாட்டு நிரூபிக்கப்பட்டு குற்றவாளியாக இனங்காணப்பட்ட ஒருவருக்கு கொழும்பு மேல் நீதிமன்றம் மரண தண்டனை விதித்து தீர்ப்பளித்துள்ளது.

கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி பிரதி பத்மன் சூரசேனவே நேற்று முன்தினம் மேற்கண்டவாறு தீர்ப்பளித்துள்ளார்.

மஹரகமவைச் சேர்ந்த விதான பத்திரனகே சமன் தனஞ்சவுக்கே இவ்வாறு மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

ஹெரோயின்போதைப்பொருளை வைத்திருந்த குற்றத்திற்காக இவருக்கு ஏற்கனவே இரண்டு வருடங்கள் கடூழிய சிறைத்தண்டனையும் 15 ஆயிரம் ரூபா தண்டனையும் விதிக்கப்பட்டுள்ளது. இந்நிலையிலேயே இதே குற்றத்திற்காக அவருக்கு எதிராக வழக்குத்தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

குற்றச்சாட்டப்பட்டவர் மீதான குற்றச்சாட்டு சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டமையினால் அவருக்கு மரண தண்டனை விதிப்பதாக நீதிபதி தனது தீர்ப்பில் அறிவித்தார். (அ-2)

# முன்னாயத்த கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

நல்லூர் கந்தசுவாமி கோயில் வருடாந்த மஹோற்சவம் எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 12 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது. இதனை முன்னிட்டு முன்னாயத்த ஏற்பாடுகள் தொடர்பான கலந்துரையாடல் இன்று சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தலைமையில் முதல்வர் அலுவலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளதாக மாநகர முதல்வர் யோ.பற்குணராஜா அறிவித்துள்ளார். இதில் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு அவர் கேட்டுள்ளார். (அ)




பிரதேச அபிவிருத்தி வங்கியின் யாழ்ப்பாணக் கிளையின் முதலாம் ஆண்டு நிறைவு விழா அண்மையில் யாழ்ப்பாணக்கிளை அலுவலகத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் விருந்தினர்கள் அமர்ந்திருப்பதையும் பிரதேச அபிவிருத்தி வங்கியின் மாவட்ட பொதுமுகாமையாளர் கேக் வெட்டி பரிமாறுவதையும் வாடிக்கையாளர் ஒருவரின் குழந்தைக்கு துவிச்சக்கரவண்டி வழங்குவதையும் படங்களில் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சி.பி.ஐக்கு கூடுதல் அதிகாரம் வழங்க மத்திய அமைச்சர்கள் குழு ஒப்புதல்




(புதுடில்லி)

**சி.பி.ஐக்கு கூடுதல் அதிகாரம் வழங்குவது தொடர்பான அமைச்சரவை பரிந்துரைக்கு மத்திய அமைச்சர்கள் குழு ஒப்புதல் அளித்துள்ளது.**

**உச்ச நீதிமன்றம் கண்டனம்**

நிலக்கரி சுரங்க வழக்கு குறித்து விசாரணை நடத்தி சி.பி.ஐ. அதன் அறிக்கையை மத்திய சட்டத்துறை அமைச்சர் மற்றும் பிரதமர் அலுவலக அதிகாரிகளிடம் காண்பித்ததை உச்சநீதிமன்றம் கண்டித்தது. சி.பி.ஐ தற்போது கூண்டுக்கிளியாக இருப்பதாகவும், கூண்டுக்கிளியாக இருக்கும் வரையில் அவை சுதந்திரமாக செயற்பட முடியாது. எஜமானரின் பேச்சை மட்டுமே அவை பிரதிபலிக்க கூடியதாக இருக்கும் என உச்சநீதிமன்றம் தன்னுடைய கண்டனத்தில் தெரிவித்து இருந்தது.

தொடர்ந்து அரசியல் தலையீடு இல்லாமல் தன்னாட்சி அமைப்பாக இருக்க தேவையான நடவடிக்கையை மேற்கொள்ளும்படி அறிவுறுத்தியது. இது குறித்த அறிக்கையை எதிர்வரும் 10ஆம் திகதிக்குள் தாக்கல் செய்ய வேண்டும் என குறிப்பிட்டிருந்தது.

**அமைச்சர்கள் குழு**

இதனைத் தொடர்ந்து மத்திய நிதியமைச்சர் தலைமையில் சி.பி.ஐ. அமைப்பிற்கு அதிகாரம் வழங்குவது குறித்த ஆலோசனை குழு அமைக்கப்பட்டது. இக்குழுவில் சட்டத்துறை அமைச்சர் கபில் சிபல், உள்துறை அமைச்சர் சுசில் குமார் ஷிண்டே, வெளியுறவுத் துறை அமைச்சர் சல்மான் குர்ஷித் மற்றும் பாராளுமன்ற விவகாரத்துறை அமைச்சர் நாராயணசாமி உட்பட பலர் குழுவில் இடம் பெற்றனர்.

**பரிந்துரை**

சி.பி.ஐ. வழக்கு விசாரணையை சுதந்திரமாக நடத்துவதை கண்காணிக்க ஓய்வு பெற்ற நீதிபதிகள் குழுவை அமைப்பது மற்றும் நிதி ஆதாரங்களை அதிகரிப்பது, தொடர்ந்து சி.பி.ஐ இயக்குநரை நியமிப்பதில் பிரதமர், உச்ச நீதிமன்றத் தலைமை நீதிபதி, பாராளுமன்ற எதிர்க்கட்சி தலைவர் ஆகியோர் அடங்கிய குழுவை அமைப்பது போன்ற பரிந்துரைகளை அமைச்சர்கள் குழு உருவாக்கியது.

அமைச்சர்கள் குழு பரிந்துரைந்த கருத்துக்களை மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்தது. இதனையடுத்து எதிர்வரும் 6ஆம் திகதி மத்திய அரசு உச்ச நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய முடிவு செய்துள்ளது. (அ-2)

## பேருந்து கவிழ்ந்ததில் 50 பேர் படுகாயம்

களப்பாலில் இருந்து திருத்துறைப் பூண்டிக்கு அரச பேருந்து ஒன்று நேற்று காலை புறப்பட்டது.

அதில் மாணவர்கள் உட்பட 50இற்கும் மேற்பட்ட பயணிகள் பயணம் செய்தனர். பேருந்து திருவாரூர் அருகே சென்று கொண்டிருந்தபோது சாரதியின் கட்டுப்பாட்டை இழந்தது.

இதனால் பேருந்து அருகிலிருந்த குளத்தில் கவிழ்ந்தது. இதில் பஸ்ஸில் பயணம் செய்த 30 மாணவர்கள் உட்பட 50 பேர் படுகாயமடைந்தனர். இது குறித்து தகவல் அறிந்ததும் அவ்விடத்திற்கு விரைந்த மக்கள் பேருந்தில் சிக்கி கொண்டிருந்தவர்களை மீட்டு அருகிலுள்ள வைத்தியசாலைக்கு அனுப்பி வைத்தனர்.

பேருந்து தண்ணீர் இருந்த குளத்தில் விழுந்ததால் ஒரு மாணவர் குளத்தில் மூழ்கிவிட்டதாக கூறப்படுகிறது. அவரை தேடும் பணியில் மீட்புக் குழுவினர் ஈடுபட்டுள்ளனர். (அ-2)

# கனிமொழியின் வெற்றிக்கு ஜெயா மறைமுக ஆதரவு

## விஜயகாந்த் குற்றச்சாட்டு

(சென்னை)

கனிமொழியின் வெற்றிக்கு ஜெயலலிதா மறைமுகமாக ஆதரவு அளித்துள்ளார் என்று தே.மு.தி.க. தலைவர் விஜயகாந்த் குற்றம் சாட்டியுள்ளார்.

மாநிலங்களவைத் தேர்தல் முடிவுகள் குறித்து விஜயகாந்த் நேற்று வெளியிட்ட அறிக்கையிலே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. அதில் கூறப்பட்டுள்ள விடயங்கள் வருமாறு,

நடந்து முடிந்த மாநிலங்களவை தேர்தலில் தே.மு.தி.க. பல வகைகளில் மாபெரும் வெற்றியை பெற்றுள்ளது.

அ.தி.மு.க. முதலில் 5 வேட்பாளர்களை அறிவித்து விட்டு பின் தி.மு.க. சார்பில் கனிமொழி வேட்பாளராக அறிவிக்கப்பட்டவுடன் அ.தி.மு.க. தனது வேட்பாளரை வாபஸ் பெற செய்து அந்த ஓரு இடத்தை இந்திய கம்யூனிஸ்ட் கட்சிக்கு விட்டுக் கொடுத்ததன் மூலம் மறைமுகமாக தி.மு.கவை ஆளும் அ.தி.மு.க. அரசு வெற்றி பெறச் செய்யவா? என்ற சந்தேகம் மக்களிடையே எழுந்துள்ளது.

ஆளும் அ.தி.மு.க. அரசு நினைத்திருந்தால் தன்னுடைய வாக்குகள் மற்றும் அவர்கள் கூட்டணிக் கட்சிகளின் வாக்குகள் மூலம் வெகு சுலபமாக தி.மு.க.வை தோல்வியடையச் செய்திருக்க முடியும்.

தி.மு.க. வெற்றியின் மூலம் தி.மு.க., அ.தி.மு.க. இரண்டு கட்சிகளும் வெளியில் தங்களை எதிரிகளைப் போல் காட்டிக் கொண்டாலும் தி.மு.க. ஆட்சிக்கு வந்தால் அ.தி.மு.க. செய்த தவறுகளை கண்டு கொள்ளாமலும் அ.தி.மு.க. ஆட்சிக்கு வந்தால் தி.மு.க. செய்த தவறுகளை கண்டும் காணாததும் போல் இருப்பதும் மறைமுகமாக இரண்டு கட்சிகளுக்கும் இரகசிய உடன்பாடு கொண்டு உள்ளனவோ என்ற சந்தேகம் வலுப்பெறவே வழி செய்கிறது.

2ஜி வழக்கில் ஒரு இலட்சத்து 76 ஆயிரம் கோடி ஊழல் நடந்த போது கடுமையாக கனிமொழியையும் தி.மு.க.வையும் விமர்ச்சித்த ஜெயலலிதா மறைமுகமாக கனிமொழியின் வெற்றிக்கு ஆதரவு தெரிவித்துள்ளது ஏன்?

ஒருவேளை தன் மீதும் ஊழல் வழக்கு பெங்களூர் நீதிமன்றத்தில் 14 ஆண்டுகளாக நடப்பதன் எதிரொலியாக இருக்குமோ என்று மக்கள் கேள்வி எழுப்புகின்றனர். விரைவில் உண்மை தெரியவரும் என தெரிவித்துள்ளார். (அ-2)



டில்லி மேல்சபை தேர்தலில் வெற்றி பெற்ற கனிமொழிக்கு தி.மு.க. பொருளாளரும் அக் கட்சியின் சட்டமன்ற தலைவருமான மு.க.ஸ்டாலின் பொன்னாடை போர்த்தி பூங்கொத்து கொடுத்து கைகுலுக்கி வாழ்த்துத் தெரிவித்ததைப் படத்தில் காணலாம்.

**பாரதச் செய்தி**

# இந்.-பாக். இடையே நல்லுறவு; ஆப்கானுக்கு நன்மையே தரும்

## பாக்கிற்கான அமெ. தூதுவர் தெரிவிப்பு

(புதுடில்லி)

இந்தியா-பாகிஸ்தான் இடையே நல்லுறவு வளர்ந்து வந்தால் அது தானாகவே ஆப்கானிஸ்தானுக்கு நல்லதாக அமையும் என்று அமெரிக்கா கருத்து தெரிவித்துள்ளது.


ஆப்கானிஸ்தானில் இருந்து அமெரிக்கப் படைகள் விரைவில் வெளியேறவுள்ளன. அதற்குள் அங்கு முழு அமைதியை ஏற்படுத்தும் முயற்சியில் அமெரிக்கா இறங்கியுள்ளது. இதன் ஒருபகுதியாக தலிபான் தீவிரவாதிகளுடன் பேச்சுவார்த்தை நடத்த அமெரிக்கா திட்டமிட்டுள்ளது.

இதுகுறித்து இந்தியாவிடம் விளக்கம் அளிப்பதற்காக ஆப்கானிஸ்தான் மற்றும் பாகிஸ்தானுக்கான அமெரிக்க பிரதிநிதி ஜேம்ஸ் டப்பினஸ் நேற்று முன்தினம் புதுடில்லிக்கு வருகை தந்துள்ளார்.

அப்போது அவர் நிருபர்களுக்கு பேட்டி அளிக்கையில், இந்தியா-பாகிஸ்தான் இடையே நல்லுறவு வளர்ந்து வந்தால் அது ஆப்கானிஸ்தானுக்கு நல்லதாகவே இருக்கும். அதேசமயத்தில் அல்கொய்தா உட்பட அனைத்து தீவிரவாத அமைப்புகளுடனான உறவையும் தொடர்பையும் துண்டித்துக்கொள்ளும் வரை தலிபான் அமைப்புடன் எந்தவித ஒப்பந்தமும் அமெரிக்கா செய்து கொள்ளாது. தலிபான் அமைப்பானது தீவிரவாதத்தை அடியோடு ஒழித்துவிட வேண்டும்.

ஒப்பந்தம் ஏற்படுவதற்கு முன்பு தலிபான்கள் திருந்தி வாழ வேண்டும். இதற்காக அந்த இயக்கம் முழுமையாக மாற வேண்டும். எந்தவித நாசவேலையிலும் ஈடுபடக் கூடாது. நாட்டின் அரசியல் சட்டத்தை மதித்து நடக்க வேண்டும். (அ-2)

# அ.தி.மு.கவில் இருவர் இணைவு



(சென்னை)

தமிழக அரசியலில் ஒரு கட்சியில் இருந்து மற்றொரு கட்சிக்கு தாவுவது வழக்கமானதாகவே இருந்து வருகிறது. இதன்படி தி.மு.க.வில் இருந்து பரிதி இளம் வழுதி மற்றும் பாட்டாளி மக்கள் கட்சியில் இருந்து முன்னாள் மத்திய அமைச்சர் பொன்னுச்சாமி ஆகியோர் நேற்றையதினம் அ.தி.மு.க.வில் இணைந்தனர்.

இந்த விலகல் மேற்கண்ட கட்சிக்கு எவ்வித பாதிப்பையும் ஏற்படுத்தாது என்று இந்தக் கட்சி நிர்வாகிகள் தெரிவித்துள்ளனர்.

இவர்கள் அ.தி.மு.க. பொதுச் செயலர் ஜெயாவை போயஸ் கார்டனில் உள்ள அவரது இல்லத்திற்கு சென்று தங்களை கட்சியில் இணைத்து கொண்டனர்.

பரிதியை பொறுத்தவரை தி.மு.க.வில் இருந்து ஸ்டாலினுடன் ஒத்து போகாததால் கட்சியில் இருந்து விலகி இருந்தார்.

இது குறித்து பா.ம.க. தலைவர் ஜி.கே.மணி கூறுகையில்,

கொள்கை ரீதியாக கட்சி நடத்துபவர் ராமதாஸ். தாழ்த்தப்பட்ட அவருக்கு அமைச்சர் பதவி கொடுக்க வேண்டும்.

இவருக்கு முக்கியத்துவம் அளிக்க வேண்டும் என்ற எண்ணத்தில் தான் அவருக்கு பொறுப்புகள் வழங்கப்பட்டன. இவர் அ.தி.மு.க.வில் இணைந்ததால் கட்சிக்கு எவ்வித இழப்பும் ஏற்பட போவதில்லை.

இவர் கட்சியில் இருந்த போதே எமக்கு எந்தவொரு பலனும் ஏற்படவில்லை. இதனை பல தொண்டர்கள் கூறியிருக்கின்றனர். இவர் தன்னைத்தானே முன்னேற்றி கொண்டார். இவ்வாறு அவர் கூறினார். இது குறித்து பொன்னுச்சாமி கூறுகையில்,

அரசியலுக்கு வர மாட்டேன் என்று இருந்தபோது என்னை பா.ம.க.தான் கட்சிக்கு அழைத்தது, மிக முக்கியமான பொறுப்புகள் வழங்கப்பட்டன. இதற்கு நான் எப்போதும் நன்றியுடன் இருப்பேன் என்றார். (அ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தர்பார் தங்கச் சுரங்கம் அருகே பழங்குடியினர் மோதல்

## 50 பேர் பலி; 20 இற்கும் அதிகமானோர் காயம்

(தர்பார்)

**சூடான் நாட்டிலுள்ள தர்பார் பகுதியில் அமைந்துள்ள தங்கச் சுரங்கங்களில் நடைபெற்ற சண்டையில் பாணி ஹீசைன் பிரிவினரைச் சேர்ந்த 50 பேர் கொல்லப்பட்டுள்ளனர். 20 இற்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்தனர்.**



சூடான் நாட்டிலுள்ள தர்பார் பகுதியில் நிறைய தங்கச்சுரங்கங்கள் செயற்படுகின்றன. இங்கு 5 இலட்சம் மக்கள் அரசு அனுமதி பெற்ற, பெறாத தங்க சுரங்கங்களில் வேலை செய்து வருகின்றனர்.

இந்த தங்க சுரங்கங்களை தங்கள் கட்டுப்பாட்டில் கொண்டு வருவதற்காக பானி ஹூசைன் மற்றும் ரிஸைகாட் என்ற இரு அரேபிய பழங்குடியின குழுக்களுக்கிடையே கடந்த ஜனவரி மாதம் முதல் சண்டை இடம் பெற்று வருகிறது.

இந்நிலையில் நேற்றுமுன்தினம் அவர்களிடையே நடந்த மோதலில் பானி ஹூசைன் பிரிவினரை சேர்ந்த 50 பேர் கொல்லப்பட்டனர். 20இற்கும் மேற்பட்டோர் படுகாய மடைந்தனர்.

பல வருடங்களாக அவர்களிடையே சர்வதேச அளவில் சமரச முயற்சிகள் எடுக்கப்பட்டும் எந்த முன்னேற்றத்தையும் அடையவில்லை என சுட்டிக்காட்டப்படுகின்றது.

இப்பகுதியில் இரா ணுவம், பழங்குடியினர்கள் என இவர்களிடையே நடக்கும் மோதல்களுக்கு பயந்து 3 இலட்சம் மக்கள் தங்கள் வீடுகளை விட்டு வெளி யேறியுள்ளனர் என்று ஐ.நா. கூறியுள்ளது. (அ-2)

# செயற்கை சுவாசத்துடன் நெல்சன் மண்டேலா

(பிரிடோரியா)



தென் ஆபிரிக்க முன்னாள் ஜனாதிபதி நெல்சன் மண்டேலா (94 வயது) உடல் நிலை கவலைக்கிடமாகவுள்ளதால், அந்நாட்டு ஜனாதிபதி ஜேக்கப் ஜுமா, தன் வெளிநாட்டு பயணத்தை இரத்து செய்துள்ளார்.

நுரையீரல் தொற்று காரணமாக, கடந்த, 8ஆம் திகதி வைத்திய சாலையில் அவர் அனுமதிக்கப்பட்டார். அமைதிக்கான நோபல் பரிசு பெற்ற, நெல்சன் மண்டேலாவின் உடல் நிலை, தற்போது மோசமடைந்துள்ளதால், மொசாம்பிக் நாட்டுக்கு விஜயம் செய்ய இருந்த, தென் ஆபிரிக்க ஜனாதிபதி ஜேக்கப் ஜுமா, தன் பயணத்தை இரத்து செய்துள்ளார்.

மண்டேலாவுக்கு தற்போது, செயற்கை முறையில், சுவாசம் அளிக்கப்பட்டு வருகிறது. எனவே, அவருக்கு எந்த நேரத்திலும் உயிர் பிரியலாம் என்பதால், அவருடைய உறவினர்கள் அனைவரும், பிரிட்டோரியாவில் குவிந்துள்ளனர்.

இதற்கிடையே, அவர் இறந்த பின், எங்கே அடக்கம் செய்வது என்பதில், அவரது குடும்பத்தில் தற்போது குழப்பம் ஏற்பட்டுள்ளது. தென் ஆபிரிக்காவில் கிழக்கு கேப் மாகாணத்தில், மண்டேலா பிறந்த, எம்விமோ கிராமத்தில் அவரை அடக்க செய்ய வேண்டும், என பேரன்கள் தரப்பினரும், இதே மாகாணத்தில், மண்டேலாவின் அருங்காட்சியகம் உள்ள, குனு என்ற இடத்தில், அடக்க செய்ய வேண்டும் என புதல்விகள் தரப்பினரும் வற்புறுத்துவதாகத் தெரிவிக்கப்படுகின்றனது. (அ-2)




# அறிவுஜீவிகள் குழுவில் இடம்பெற்று சாதனை படைத்த 2 1/2 வயது குழந்தை

(லண்டன்)

**பிரிட்டனில் இரண்டரை வயதுக்குழந்தை அறிவு ஜீவிகள் குழுவில் இடம்பெற்று சாதனை படைத்துள்ளது. பிரிட்டனைச் சேர்ந்த டீன் மற்றும் கெர்ரி ஆன் தம்பதியரின் மகன் ஆடம் கிர்பி. இரண்டரை வயது நிரம்பிய இந்தக் குழந்தை தன் திறமையை வெளிப்படுத்துவதற்கான அறிவு ஜீவிப் போட்டியில் சமீபத்தில் பங்கேற்றது.**



ஷேக்ஸ்பியர் எழுத்துக்களை இந்தக் குழந்தை அப்படியே வாசித்தது. அதுபோல் ஜப்பான் மற்றும் பிரெஞ்சு மொழி எழுத்துக்களையும் படித்து காண்பித்தது. அதுமட்டுமின்றி 100 வார்த்தைகளை எழுத்துக் கூட்டி படித்ததுடன் இரசாயனப் பொருட்களின் பெயர்களையும் வரிசை மாறாமல் படித்து காண்பித்து அசத்தியது.

குழந்தைகளைப் பொறுத்தவரை இந்த வயதில் சிரமப்பட்டு மெதுவாக படிப்பர். ஆனால், ஆடமைப் பொறுத்தவரை புத்தகங்களையே சாதாரணமாகப் படிக்கிறான். இது அவனது புத்திக்கூர்மையை வெளிப்படுத்துகிறது.

இது குறித்து மென்சா அறிவுஜீவிகள் குழுவின் முதன்மை செயல் அலுவலர் ஜான் ஸ்டிவனேஜ் கூறியதாவது,

ஆடமின் புத்திக்கூர்மை (ஐ.க்யூ) அளவு 41 ஆக உள்ளது. இது அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா மற்றும் பிரிட்டன் பிரதமர் டேவிட் கமரூன் ஆகியோருக்கு இணையான திறமையை இந்த குழந்தை பெற்றுள்ளதைக் காட்டுகிறது.

உலகிலேயே மிகக் குறைந்த வயதில் இந்தக் குழுவில் இடம்பெற்றவன் ஆடம்தான். இதற்குமுன் ஆறு வயதான லண்டனைச் சேர்ந்த டான் ரோபர்ட்ஸ் இக்குழுவில் இடம்பிடித்திருந்தான் என அவர் இவ்வாறு கூறினார். (அ-2)



அவுஸ்திரேலியாவின் புதிய பிரதமராக கெவின் ரூட் நேற்றுக் காலை கான்பெராவில் உள்ள அரசு மாளிகையில் நடைபெற்ற விழாவில் புதிய பிரதமராக பதவி ஏற்றுக் கொண்டார். அவருக்கு ஆளுநர் ஜெனரல் குயின்டின் பிரேய் பதவி பிரமாணம் செய்து வைத்ததைப் படத்தில் காணலாம்.

# சந்திரனுக்கு செல்கிறது ரோபோ குரங்கு

சந்திரனில் மனிதன் காலடி பதித்து சாதனை புரிந்து விட்டான். அதனை தொடர்ந்து சந்திரனில் பல்வேறு ஆய்வுகளை விஞ்ஞானிகள் மேற்கொண்டு வருகின்றனர்.

இதன் அடுத்த கட்டமாக ஒரு குரங்கை விஞ்ஞானிகள் அனுப்புகின்றனர். அது உயிருள்ள குரங்கு அல்ல.

அது மின்வயர்கள், போல்ட் மற்றும் நட்டுகளால் ஆன ரோபோ (எந்திர) குரங்கு. இதை ஜேர்மனி ஆராய்ச்சி மையத்தைச் சேர்ந்த விஞ்ஞானிகள் உருவாக்கியுள்ளனர். இந்த மையம் பிரேமன் நகரில் உள்ளது.

இந்த ரோபோ குரங்கு மரத்தில் கிளைக்கு கிளைதாவக் கூடியது. அதற்காக இரும்பினால் கைகள் மற்றும் கால்கள் தயாரிக்கப்பட்டு பொருத்தப்பட்டுள்ளன. அதன் மூலம் இக்குரங்கு சந்திரனில் உள்ள பாறைகளின் மீது தாவி ஏறி மாதிரிகளை எடுத்து ஆய்வுக்கு அனுப்பும்.

தற்போது கிரகங்களில் ஆய்வு மேற்கொள்ள அனுப்பும் விண்கலங்கள் சக்கரம் மூலம் நகர்த்தப்பட்டு ஆய்வில் ஈடுபடுத்தப்படுகின்றது. மிக உயரமான இடங்களில் ஆய்வு மேற்கொள்ள புதுவிதமான முறையில் இந்த ரோபோ குரங்கு வடிவமைக்கப்பட்டுள்ளது. அது விரைவில் சந்திரனுக்கு அனுப்பப்படவுள்ளது. (அ-2)

## 80 ஆயிரம் இராணுவத்தினரை இடைநிறுத்துகிறது அமெரிக்கா

(வோஷிங்டன்)

அமெரிக்கா அரசு வருகிற 2017 ஆம் ஆண்டுக்குள் 80 ஆயிரம் இராணுவ வீரர்களை வேலையிலிருந்து நீக்கம் செய்ய திட்டமிட்டுள்ளது.

அமெரிக்க அரசு உலகிலேயே இராணுவத்துக்கு மட்டும் வரவு செலவுத் திட்டத்தில் அதிக நிதி ஒதுக்குகிறது.

மேலும் உலகம் முழுவதும் பல்வேறு நாடுகளில் தீவிரவாதிகளை ஒடுக்குவதற்காக நேட்டோ படைகளுக்கு இராணுவ வீரர்களை விநியோகம் செய்து வருகிறது.

இதில் ஏராளமான அளவு பணம் செலவிடப்படுவதால் பொருளாதார நெருக்கடி அதிகரித்து வருகிறது.

இந்நிலையில் 2017 ஆண்டுக்குள் இராணுவத்தின் வலிமையை 5 இலட்சத்து 70 ஆயிரம் வீரர்களில் இருந்து 4 இலட்சத்து 90 ஆயிரமாக குறைக்க அமெரிக்க அரசு முடிவு செய்துள்ளது.

இதன் மூலம் சுமார் 80 ஆயிரம் வீரர்கள் மற்றும் அதிகாரிகள் பதவி நீக்கம் செய்யப்படுவார்கள் என்று தலைமை தளபதி ரேமண்ட் ஓதர்னோ கூறியுள்ளார். (அ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு முட்டாள் பையன் தாயின் வயிற்றில் இருந்து வெளியே வந்த பிறகும் அவளுக்குப் பாரம் தான்
- ஓர் அறிஞர்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

# மரத்தின் கீழ் இருப்பவர்கள் கதைப்பது என்ன?

மாலைப் பொழுதின் ரம்மியமான வேளையில் ஆலயங்களில், பொது இடங்களில் உள்ள மரநிழல்களின் கீழ் ஓய்வு நிலையில் இருப்பவர்கள் கூடியிருந்து கதைப்பது வழக்கம்.

அவர்கள் அப்படி என்னதான் கதைக்கிறார்கள் என்று அறியவேண்டும் என்ற ஆவல் நீண்ட காலமாய் இருந்தது.

ஆவலுக்கு முடிபு கட்டி விடவேண்டும் என்று நினைத்து ஓய்வூதியர்கள் இருந்து கதைக்கின்ற பெரிய மரத்தின் மறுபக்கமாய் மறைந்திருந்து ஒட்டுக் கேட்டேன்.

ஒட்டுக்கேட்டால் அடுத்தபிறப்பு என்ன என்பதை அறிந்திருந்தாலும் ஆர்வக் கோளாறு காரணமாய் அத்தகையதொரு முடிவு.

அங்கிருந்தவர்கள் ஆக்ரோசமாய் பேசிக் கொண்டார்கள்.

**வாத்தியார்:** என்னதான் இருந்தாலும் பிள்ளைகளுக்கு அடிச்சுப் படிப்பித்தால்தான் பிள்ளைகள் பயபக்தியோடு படிக்குங்கள். அந்தக் காலத்தில நாங்கள் அடிக்காத அடியே! அந்த அடியாலதான் அந்தக் காலத்துப் பிள்ளைகள் படித்தார்கள். பண்புள்ளவர்களாக வாழ்கிறார்கள்.

நாங்கள் படிப்பித்த பிள்ளைகள் எங்களைக் கண்டால் என்ன சொல்கிறார்கள். வாத்தியார் நீங்கள் அடிச்சபடியால்தான் நாங்கள் படிச்சம். இன்றைக்கு நாங்கள் இந்த நிலையில் இருப்பதற்கு நீங்கள் அடித்த அடிதான் காரணம் என்று சொல்கிறார்கள்.

**விதானையார்:** வாத்தியார் உது அந்தக் காலம். இந்தக் காலத்தில; நீங்கள் பிள்ளைகளுக்கு அடித்தால் ஊடகங்கள் உடனடியாகவே ஊதிப் பெருக்க வைத்துவிடும். பிறகென்ன மனித உரிமை, சிறுவர் உரிமை என்று ஒரே கொண்டாட்டம் தான்.

அண்மையில ஒரு ஆசிரியை ஒரு பிள்ளைக்கு அடித்த சம்பவம் பற்றி உங்களுக்குத் தெரியாதோ?

**கிளாக்கர்:** ஓம்! ஓம்!! நானும் கேள்விப் பட்டனான்தான். நானும் கல்வித் திணைக்களத்தில ஏ.ஓவாக இருந்தனான். அப்பவெல்லாம் ஆசிரியர்கள் பிள்ளைகளுக்கு அடித்தால் திணைக்களம் அலட்டிக் கொள்வது கிடையாது.

ஆனால்; இப்ப ஆசிரியர் பிள்ளைக்கு அடித்துவிட்டார். அந்தப் பிள்ளை வைத்திசாலையில் அனுமதிக்கப்பட்டுவிட்டது என்று அறிந்தால் போதும்,

ஆளுநர் அலுவலகத்தில் இருந்து, தொலைபேசி அலறுமாம். ஏதோ பரிசுத்த இலங்கைத் தீவின் யாழ்ப்பாணத்தில்–மனித உரிமைகளை நூறுவீதம் கடைப்பிடிக்கின்ற மண்ணில் ஒரு பிள்ளைக்கு அடி விழுந்தது என்பது போன்று பதைபதைக்குமாம்.

பிறகென்ன! ஆளுநர் அலுவலகத்தின் ரெலிபோன் தானே எங்கட கல்வித் திணைக்கள ஆராய்ச்சி மணி.

ஆராய்ச்சி மணி அடித்த சத்தம் கேட்ட பாண்டிய மன்னன் பட்ட பதைபதைப்பில் எங்கட கல்வி அதிகாரிகளும்.

ஓம் சேர்... ஓம் சேர்... ஓம் ஓம் சேர். இதைவிட வேறு எதுவும் சொல்லமுடியுமா? என்ன.

வாகனங்கள் ஓடித்திரியும். இடமாற்றக் கடிதங்கள் படபட என அடிபடும். அன்று முழுநாளும் அந்த அடி அலுவல்தான்.

அடுத்த அடிவிழும் வரை இந்த அடிதான். கல்வித் திணைக்களத்தின் மேல்விழுந்த இடி.

**வாத்தியார்:** இதுக்குப் பிறகும் எந்த வாத்தியும் பிள்ளைக்கு அடிப்பானோ!

நோட்ஸ் ஒப் லெசன் எழுதுறது. தேவையான அறிக்கைகளை எழுதி அவற்றுக்கு வர்ண உறை போடுவது. பிள்ளை எக்கேடுகெட்டாலும் நமக்கு என்ன? ஆக, மிஞ்சி திணைக்களம் கேட்டால் விசேட தேவையுடைய பிள்ளை ஐயா! என்றால் எல்லாம் சரியாப் போகும்.

இப்படி வாத்தியார் கூற, கிளாக்கர் திடீர் என யாரோ மரத்துக் கருகில் மறைந்திருப்பது போல இருக்குது... என்று சொல்ல கோயில் ஒலிபெருக்கியில் மரத்தை மறைத்தது மாமத யானை.. என்ற திருமந்திரம் ஒலிக்க யானும் மெதுவாய் அவ்விடம் விட்டு ஏகினேன்

# இலங்கையில் 200 ஆண்டுக்குள் பிரவேசிக்கிறது மெதடிஸ்த திருச்சபை


1813 ஆம் ஆண்டு இலங்கைக்கு சுவிசேஷத்தை கொண்டு செல்வதற்காக பிரித்தானியாவிடம் இருந்து பண்டிதர் கோக் என்பவர் அனுமதி பெற்றார். அப்போது அவருக்கு அறுபத்தாறு வயதாகும்.1813 ஆம் ஆண்டு மார்கழி மாதம் 30 ஆம் திகதி அவர் இங்கிலாந்தில் உள்ள பொடஸமவுத் துறைமுகத்தில் இருந்து புறப்பட்டார்.

இவருடன் ஆறு இளம் மிஷனரிமார்களான ஜேம்ஸ் லின்சு தோமஸ் ஸ்குலான்ஸ், வில்லியம் மாட்டின் கால்ட், வில்லியம் ஓல்ட், பென்ஜமின் கிளவ், ஜோர்ஜ் ஏல்ஸ்கின் ஆகியோர் நான்கு மாத ஆபத்தான கப்பல் பிரயாணத்தை மேற்கொண்டு இந்து சமுத்திரத்திற்குள் பிரவேசித்தனர்.

மிஷனரிமார் தங்கள் பிரயாணத்தை முடிக்கும் தறுவாயில் மிகப் பெரிய ஆபத்தில் சிக்கினார்கள். மாசி மாதம் 3 ஆம் திகதியில் அருட்திரு.தோமஸ் கோக்குடன் பிரயாணம் செய்த கப்பலின் தளபதி அருட்திரு.தோமஸ் கோக் இறந்து விட்டார் என்பதை அறிவித்தார்.

ஆழ்ந்த கவலையுடனும் மரியாதையுடனும் அவரை கடலில் அடக்கம் செய்தனர். ஒரு பணமோ திட்டமோ இல்லாது தலைவரை இழந்த ஆறு மிஷனரிமார்கள் இறைவனிடம் தங்களை அடைக்கலம் கொடுத்து விட்டு தொடர்ந்து பிரயாணம் செய்து ஜூன் மாதம் 29 ஆம் திகதி காலியில் வந்து இறங்கினார்.

லின்சு ஸ்குலான்ஸ், கிளப் ஆகியோர் கப்பலை விட்டு இறங்கி அந்த இருண்ட இரவில் ஒரு தோணி மூலம் துறைமுகத்தை அடைய முயற்சித்தனர். ஆயினும் பலமான காற்று வீசியதால் பதினேழு


THE DUTCH CHURCH IN JAFFNA FORT

மைல் தூரத்திற்குத் தெற்குப் புறமாக உள்ள வெலிகம வரைக்கும் இழுத்துச் செல்லப்பட்டு வெலிகம கரையிலே தரை இறங்கி வெலிகம நீதிபதியினால் வரவேற்கப்பட்டு காலிக்கு பல்லக்கு மூலம் அனுப்பப்பட்டார்கள்.

இதற்கிடையில் அவர்கள் வந்த கப்பல் புயலாலும் நீர் சுழற்சியாலும் இழுத்துச் செல்லப்பட்டு நடுக்கடலை அடைந்தது.

இலங்கையின் தேசாதிபதியாகிய றொபேட் பிறவுன்றிக் காலியிலுள்ள அரச மாளிகையை அவர்களின் உபயோகத்திற்குக் கொடுத்ததோடு ஒரு வரவேற்பையும் நிகழ்த்தினார்.

1814 ஆம் ஆண்டு ஜுலை மாதம் 3 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை தமது நன்றி செலுத்தும் ஆராதனையை நடத்தினர். இதன்பின்பு ஜுலை மாதம் 11 ஆம் திகதி இவர்கள் ஒரு மகா நாட்டை நடத்தினர். இந்த மகா நாட்டில் எடுக்கப்பட்ட முடிவின் படி வில்லியம் ஓல்ட் மட்டக்களப்பிற்கும் ஜேம்ஸ் லின்சும், தோமஸ் ஸ்குலான்சும் யாழ்ப்பாணத்திற்கும் கிளப் காலிக்கும் ஏல்ஸ்கின் மாத்தறைக்கும் அனுப்பப்பட்டனர். ஓகஸ்ட் மாதம் முதலாம் திகதி கொழும்பில் இருந்து புறப்பட்டு ஜேம்ஸ் லின்சும், தோமஸ் ஸகுலான்சும் காடுகளையும் கிராமங்களையும் கடந்து வந்து ஓகஸ்ட் மாதம் 10 ஆம் நாள் யாழ்ப்பாணத்தை வந்தடைந்தனர்.

அக்காலத்தில் யாழ்ப்பாணத்தில் அரச அதிபராக இருந்த ஜேம்ஸ் முயாட் என்பவரால் வரவேற்கப்பட்டார்கள். இவர்கள் யாழ். கோட்டையிலுள்ள ஒல்லாந்தரின் தேவாலயத்தில் இரண்டு வருடங்களாக ஆராதனைகளை நடத்தி வந்தனர். 1816 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் முதலாம் திகதி ஜேம்ஸ் லின் சுவால் முதன் முதலாக ஒரு நிலம் 646 ரிங்ஸ் டொலரிற்கு வாங்கப்பட்டது.

இந்த இடத்தில் தான் தற்போது யாழ். மத்திய கல்லூரியின் றொமையின் குக் மண்டபம் அமைந்துள்ளது.

இவ்வாறான வரலாறுகளைக் கொண்ட மெதடிஸ்த திருச்சபை இலங்கையில் 2014 இல் தனது பணியை 200 ஆவது ஆண்டிற்குள் பிரவேசிக்கின்றது.

-டினேஷ் குணரட்ணம்

# இரு பெண்கள் விபத்தில் பலி

(யாழ்ப்பாணம்)

கடந்த வாரத்தில் கவனயீனமாக இடம்பெற்ற விபத்தில் இரு பெண்கள் பலியாகியுள்ளனர் என யாழ்.மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சர் எம்.எம். ஜெப்றி தெரிவித்தார்.

கடந்த 22-ம் திகதி வட்டுக் கோட்டை இந்து மகாவித்தியாலயத்திற்கு அருகில் மோட்டார் சைக்கிளில் பின் இருக்கையில் அமர்ந்து சென்று கொண்டிருந்த 68 வயதுடைய மூதாட்டி ஒருவர் தவறுதலாக கீழே வீழ்ந்து உயிரிழந்துள்ளார்.

இதோபோல் கடந்த 21-ம் திகதி இளவாலை பகுதியிலும் 16 வயதுடைய சிறுமியொருவர் மோட்டார் சைக்கிள் விபத்தில் காயமடைந்து சிகிச்சை பயனின்றி உயிரிழந்துள்ளார் என அவர் தெரிவித்ததோடு வயதானவர்கள், சிறுவர்களை மோட்டார் சைக்கிளில் மிகுந்த அவதானத்தோடு ஏற்றிச் செல்லு மாறு கேட்டுக் கொண்டார். (அ-4)

# சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்

## கடவுளைக் காணமுடியுமா?



❁ எல்லா இடங்களிலும் கடவுள் நிறைந்து இருக்கிறார். காணும் எல்லாப் பொருட்களிலும் பரம்பொருளைக் காண முயலுங்கள்.

❁ குறிக்கோளுக்குச் செலுத்தும் முக்கியத்துவத்தை அதை அடைய மேற்கொள்ளும் பாதைக்கும் செலுத்துவது அவசியம்.

❁ நல்லதையே சிந்தியுங்கள், நல்லதை மட்டுமே செய்யுங்கள்.

❁ கண்டன வார்த்தை எதையும் சொல்ல வேண்டாம். உதடுகளை மூடிக்கொண்டு உங்கள் இதயங்களைத் திறந்து வையுங்கள்.ஸ்ரீ

❁ விரிந்து கொண்டே செல்வதுதான் வாழ்க்கை. மனம் குறுகிக் கொண்டு செல்வதை மரணம் என்றுதான் சொல்லவேண்டும்.

❁ சில நேரங்களில் துன்பமே மனிதனுக்கு சிறந்த ஆசிரியராக அமைந்து விடுகிறது.

❁ நல்ல மனிதனை உருவாக்குவதில் இன்பமும் துன்பமும் சரிசமமான இடத்தை வகிக்கின்றன.

❁ மனத்தூய்மை மிக்கவர்கள் இந்த பிறவியிலேயே கடவுளைக் காணும் பேறு பெறுகிறார்கள்.

# ஸ்ரீ அம்மா பகவானின் மகா வாக்கியங்கள்

மக்களுக்கு அவரவர்களுடைய மதங்களில் பொதிந்துள்ள உண்மைகளைக் கண்டு பிடிக்கவே நாங்கள் உதவி வருகிறோம். எல்லாவற்றையும் ஒன்று சேர்த்து ஏதோ ஒரு புதிய மதத்தை உருவாக்குவது எங்கள் நோக்கம் அல்ல. ஒவ்வொரு மதத் திலும் ஆரம்பத்திலிருந்த புனிதத் தன்மையைக் காப்பாற்றவே முயற்சிக் கிறோம்.



ஏனெனில் எல்லாவிதமான மதங்களும் நம்பிக்கைகளும் அனுபவத்தையே ஆதாரமாகக்கொண்டுள்ளன. ஒரு அனுபவத்தை அடிப்படையாகக் கொண்டே எல்லா மதங் களும் தொடங்குகின்றன.

ஆனால் விரைவிலேயே துஷ்ட சக்திகள் ஆட்கொண்டு வேறு காரணங்களுக்காக அவைகளை உபயோகப்படுத்திக்கொள்கின்றன. இவ்வாறுதான் மதங்களில் கலப்படம் ஏற்பட்டு ஒழுங்கற்றுப்போய் இறுதியில் மனித இனத்திற்கே தீங்கை விளைவிக்கின்றன. நாம் ஆரம்பகாலத்தில் இருந்த மிகவும் புனிதமான அந்த நிலைக்குத் திரும்பச் செல்ல வேண்டும். இதற்காக ஒன்னெஸ் தியான மண்டபத்தை நிர்மாணித்துக்கொண்டிருக்கின்றோம். இது சக்தியின் இருப்பிடமாக இருப்பதால் நீங்கள் விரும்பிய ரூபத்தில் எந்தக் கடவுளை வேண்டுமானாலும் அங்கு வணங்கலாம். அங்கு ஒரு சிம்மாசனம் இருக்கும். மனிதன் தான் வணங்கும் கடவுளை உண்மையிலேயே தரிசிக்கவல்ல ஒரு மிகச்சிறப்பான சிம்மாசனம் அது. அந்தச் சிம்மாசனம் காலியாகத்தான் இருக்கும்.

ஆனால் உங்களால் நீங்கள் வணங்கும் கடவுளை அதில் காணமுடியும். இந்தத் தர்மத்திற்கோ இயக்கத்திற்கோ தனிப்பட்ட முறையில் இங்கே எந்த இடமும் இல்லை. இது கிறிஸ்தவர்களுக்கு கிறிஸ்தவ மதம், முகமதியருக்கு முகமதிய மதம், இந்துக்களுக்கு இந்து மதம், ஜைனர்களுக்கு ஜைன மதம், சீன தேசத்தவருக்கு டாவ் (Tao) மதம் என்று அவரவர்க்கு அவருடைய மதத்துடன் ஒரு உண்மையான இணைப்பைக் கொடுத்து அந்த மதத்தின் உண்மையைக் கண்டறிய வைக்கும் ஓர் இயக்கம்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## நியூசிலாந்துடனான ரி –20 தொடரை இழந்தது இங்கிலாந்து

இங்கிலாந்திற்குக் கிரிக்கெட் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள நியூசிலாந்து அணிக்கும், இங்கிலாந்து அணிக்குமிடையிலான ருவென்ரி ருவென்ரி தொடரை நியூசிலாந்து அணி 1:0 என்ற வீதத்தில் கைப்பற்றியுள்ளது.

இரு அணிகளுக்குமிடையிலான இரண்டாவது ருவென்ரி ருவென்ரி சர்வதேசப் போட்டி மழையினால் முடிவேதும் பெறப்படாது கைவிடப்பட்டதையடுத்தே இத்தொடர் நியூசிலாந்து வசமாகியுள்ளது.

லண்டன் ஓவல் மைதானத்தில் இடம்பெற்ற இரண்டாவது போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற நியூசிலாந்து அணி முதலில் களத்தடுப்பில் ஈடுபடத் தீர்மானித்தது.

இதன்படி துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அணி 2 ஓட்டங்களைப் பெற்றிருந்தவேளையில் இரண்டாவது பந்தில் தனது விக்கெட்டை இழந்தபோது மழை குறுக்கிட்டது.

மழை தொடர்ச்சியாகப் பெய்ய, போட்டியை மீள ஆரம்பிக்கும் வாய்ப்பு ஏற்பட்டிருக்கவில்லை என்பதால், போட்டி கைவிடப்படுவதாக அறிவிக்கப்பட்டது.

இத்தொடரின் முதலாவது போட்டியில் நியூசிலாந்து அணி 5 ஓட்டங்களால் வெற்றி பெற்ற நிலையில், இத்தொடர் நியூசிலாந்து வசமாகியுள்ளது.

இரு அணிகளுக்குமிடையில் சம்பியன்ஸ் கிண்ணத்திற்கு முன்னதாக இங்கிலாந்தில் இடம்பெற்ற ஒருநாள் சர்வதேசப் போட்டித் தொடரையும் நியூசிலாந்து அணி கைப்பற்றியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## சர்வதேச போட்டியில் பங்கேற்கிறது தமிழீழ உதைபந்தாட்ட கழகம்



எதிர்வரும் ஜூலை மாதம் இங்கிலாந்தில் நடைபெறவுள்ள டின்வோல்ட ஹில் (Tynwald Hill) சர்வதேச உதைபந்தாட்டப் போட்டியில் தமிழீழ உதைபந்தாட்டக் கழகமும் (TEFA) பங்கேற்கின்றது.

சென். ஜோன்ஸ், ஐல் ஒஃப்மான (St.John's, Isle of Man) எனும் இடத்தில் நடைபெறும் இப்போட்டிகளில் தமிழீழ உதைபந்தாட்டக் கழகத்துடன் Sealand F.A., Alderney F.A., Raetia F.A., Occitania F.A. and St. John's United F.A. ஆகிய அணிகள் போட்டியிடுகின்றன.

சர்வதேச அளவில் நடைபெறும் போட்டிகளில் பங்குபற்றுவதற்கான வாய்ப்பினை உலகெங்கும் வாழும் ஈழத் தமிழ் உதைபந்தாட்ட வீரர்களுக்கு ஏற்படுத்திக் கொடுத்து, அதனூடாக அவர்களின் திறமையினை ஊக்குவிக்கும் பொருட்டும் உலகளாவிய தமிழ் இளையோர் அவை (T-League) 2012 ஆம் ஆண்டில் தமிழீழ உதைபந்தாட்டக் கழகத்தை உருவாக்கியது.

இந்த அணி சுவிறஸர்லாந்து, பிரான்ஸ், ஜேர்மனி, ஐக்கிய இராச்சியம், நோர்வே, இத்தாலி, கனடா என உலகெங்கும் பரந்து வாழும் ஆர்வமுள்ள தமிழ் வீரர்களை கொண்டு உருவாக்கப்பட்டுள்ளது.

## சச்சினின் சாதனையை முறியடிக்கும் வாய்ப்பு குக்கிற்கு உண்டு –பீற்றர்சன்

எதிர்காலத்தில் சச்சின் டெண்டுல்கரின் டெஸ்ட் சாதனைகளை முறியடிக்கும் வாய்ப்பு அலஸ்ரெயர் குக்கிற்கு காணப்படுவதாக தெரிவித்துள்ளார் இங்கிலாந்து அணியின் நட்சத்திரத் துடுப்பாட்ட வீரர் கெவின் பீற்றர்சன்.

நீண்ட காலம் காயம் காரணமாகப் போட்டிகளில் பங்குபற்றியிருக்காத நிலையில் மீண்டும் இங்கிலாந்து அணியில் சேர்க்கப்பட்டுள்ள கெவின் பீற்றர்சன், அது தொடர்பாகக் கருத்துத் தெரிவிக்கும்போதே இவ்வாறு தெரிவித்தார்.

டெஸ்ட் அணித்தலைவராக அலஸ்ரெயர் குக்கின் முதலாவது தொடர் இந்தியாவில் வைத்து இந்தியாவிற்கெதிராக அமைந்திருந்ததாகக் குறிப்பிட்ட கெவின் பீற்றர்சன், அத்தொடரில் இங்கிலாந்து அணி இந்தியாவைத் தோற்கடித்திருந்ததாகக் குறிப்பிட்டார்.

அலஸ்ரெயர் குக் மிகச்சிறப்பாகச் செயற்பட்டுள்ளதாகத் தெரிவித்த அவர், குக்கின் கிரிக்கெட் தொடர்ந்தும் முன்னேறி வருவதாகக் குறிப்பிட்டார்.

தன்னைப் பொறுத்தவரை, இங்கிலாந்திற்குத் தலைமை தாங்குவதற்கு சிறந்தவராக அலஸ்ரெயர் குக்கே காணப்படுவதாகத் தெரிவித்த கெவின் பீற்றர்சன், அவர் மிகச் சிறந்த பணியைச் செய்து வருவதாகவும், அவர் இன்னமும் முன்னேறிக் கொண்டுள்ளார் எனவும் தெரிவித்தார்.


சாதனை வீரரான சச்சின் டெண்டுல்கரின் டெஸ்ட் சாதனை ஓட்டங்களை முறியடிக்கும் வாய்ப்பு அலஸ்ரெயர் குக்கிற்குக் காணப்படுவதாகவும் கெவின் பீற்றர்சன் தெரிவித்தார்.

### கொன்பெடரேஷன் கிண்ண உதைபந்தாட்ட இறுதிச் சமர் நாளை

# பரபரப்பான அரையிறுதி ஆட்டங்களில் பிரேசில், ஸ்பெயின் அணிகள் வாகை!



பிரேசில் - உருகுவே அணிகள் மோதிய ஆட்டத்தில்...





இத்தாலி-ஸ்பெயின் மோதிய ஆட்டத்தில்....

கொன்பெடரேஷன் கிண்ண உதைபந்தாட்ட போட்டியின் இறுதி ஆட்டத்துக்கு பலம்வாய்ந்த பிரேசில் அணியும் உலகச் சம்பியன் ஸ்பெயின் அணியும் தகுதி பெற்றுள்ளன.

**ஸ்பெயின் வெற்றி**

பிரேசிலில் நடைபெற்றுவரும் கொன்பெடரேஷன் கிண்ண உதைபந்தாட்டப் போட்டியின் முதல் அரை இறுதி ஆட்டத்தில் பிரேசில், உருகுவே அணிகள் மோதின. இதில் பிரேசில் அணி 2:1 என்ற கோல் கணக்கில் உருகுவேயை தோற்கடித்து இறுதிப்போட்டிக்கு முன்னேறியது.

8 அணிகள் பங்கேற்ற இந்த போட்டியில் லீக் ஆட்டங்கள் முடிவில் 'ஏ' பிரிவில் பிரேசில், இத்தாலி அணியும், 'பி' பிரிவில் உலக சம்பியன் ஸ்பெயின், உருகுவே அணியும் முதல் இரண்டு இடங்கள் பிடித்து அரை இறுதிக்கு முன்னேறின. பெலோஹோரி ஜோன்ட் நகரில் நடந்த முதலாவது அரை இறுதிப் போட்டியில் 'ஏ' பிரிவில் முதலிடம் பிடித்த பிரேசில்'பி' பிரிவில் 2ஆவது இடம் பெற்ற உருகுவே அணிகள் மோதின.

உள்ளூர் ரசிகர்களின் பலத்த ஆதரவுக்கு மத்தியில் விளையாடிய பிரேசில் அணியின் கட்டுப்பாட்டிலேயே பந்து அதிக நேரம் இருந்தது. ஆட்டத்தின் 13ஆவது நிமிடத்தில் கோல் எல்லைப்பகுதியில் வைத்து பிரேசில் வீரர் டேவிட் லூயிஸ்சை, உருகுவே வீரர் லுகானோ பனியனை பிடித்து இழுத்து தடுத்தார். இதனால் நடுவர் லூகானோவுக்கு மஞ்சள் அட்டை காண்பித்து எச்சரிக்கை விடுத்ததுடன், பிரேசில் அணிக்கு பனால்டி வாய்ப்பும் அளித்தார். அந்த அரிய வாய்ப்பை பிரேசில் வீரர் டியாகோ போர்லன் கோலாக்க முயற்சித்தார். ஆனால் உருகுவே கோல் கீப்பர் ஜூலியோ சீசர் அபாரமாக செயற்பட்டு அந்த முயற்சிக்கு முட்டுக்கட்டை போட்டார்.

30ஆவது நிமிடத்தில் பிரேசில் வீரர் போர்லன் கோலை நோக்கி அடித்த பந்து மயிரிழையில் கோல் கம்பத்தை விட்டு விலகி சென்றது. 41ஆவது நிமிடத்தில் பிரேசில் முதல் கோலை அடித்தது. நெய்மார் கோலை நோக்கி அடித்த பந்து எதிரணியினரால் தடுத்து திரும்பியது. அதனை பிரெட் இலாவகமாக திணித்தார். முதல் பாதி ஆட்டத்தில் பிரேசில் அணி 1:0 என்ற கணக்கில் முன்னிலை பெற்றது.

பின் பாதி ஆட்டம் தொடங்கிய 3ஆவது நிமிடத்தில் உருகுவே அணி பதில் கோல் திருப்பியது. அந்த அணி வீரர் எடின்சன் கவானி இந்த கோலை அடித்தார். இதனால் 1:1 என்ற கோல் கணக்கில் சமநிலை ஏற்பட்டது. ஆட்டத்தில் அவ்வப்போது முரட்டுத்தனமும், தள்ளு முள்ளும் தலை காட்டியது.

ஆட்டம் சமநிலையில் முடிந்து கூடுதல் நேரத்துக்கு செல்லுமோ என்று எதிர்பார்க்கப்பட்ட நிலையில் பிரேசில் அணி 2ஆவது கோலை போட்டது. மூலையில் இருந்து வந்த பந்தை அந்த அணி வீரர் பவுலினோ தலையால் முட்டி கோலாக்கினார். அதன் பின்னர் இரு அணியினரும் கோல் எதுவும் அடிக்கவில்லை. முடிவில் பிரேசில் அணி 2:1 என்ற கோல் கணக்கில் உருகுவேயை வீழ்த்தி 5ஆவது முறையாக இறுதிப்போட்டிக்கு முன்னேறியது.

**ஸ்பெயின் வெற்றி**

மற்றொரு அரையிறுதி ஆட்டத்தில் உலகச் சம்பியன் ஸ்பெயின், இத்தாலி அணிகள் மோதின.

பரபரப்பான இந்த ஆட்டத்தில், பெனாட்டி சூட்அவுட் முறையில் 7-6 என்ற கோல்கள் கணக்கில் இத்தாலி அணியை வீழ்த்தியது.

ஆட்டம் தொடங்கியது முதலே இரு அணி வீரர்களும் கோல் அடிக்கும் முயற்சியில் ஈடுபட்டனர். 90 நிமிடங்கள் வரை இரு அணியும் கோல் எதுவும் அடிக்காததால், கூடுதல் நேரம் வழங்கப்பட்டது. அதிலும் இரு அணிகளும் கோல் அடிக்கவில்லை. இதையடுத்து, வெற்றி தோல்வியை தீர்மானிக்க பெனாட்டி சூட்அவுட் முறை கடைப்பிடிக்கப்பட்டது.

இரு அணி வீரர்களும் மாறி மாறி தலா 6 கோல்கள் அடித்ததால் ஆட்டத்தில் பரபரப்பு தொற்றியது. 7 ஆவது வாய்ப்பை இத்தாலி வீரர் பொனுசி கோலாக மாற்றத் தவறினார்.

இந்நிலையில் ஸ்பெயின் வீரர் நவாஸ் , பந்தை இலாவகமாக கோலவளைக்குள் தள்ளினார். இதனால் 7- 6 என்ற கோல்கள் கணக்கில் ஸ்பெயின் அணி வெற்றி பெற்று, இறுதிப்போட்டிக்கு முன்னேறியது.

**இறுதி ஆட்டம்**

நாளை ஞாயிற்றுக்கிழமை நடைபெறும் இறுதி ஆட்டத்தில் பலம் வாய்ந்த பிரேசில் அணியும், உலகச் சம்பியன் ஸ்பெயின் அணியும் மோதுகின்றன.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விம்பிள்டன் டென்னிஸ்:


# ஜோகோவிச், செரீனா 3-ம் சுற்றுக்கு முன்னேற்றம்

லண்டனில் விம்பிள்டன் டென்னிஸ் போட்டிகள் நடைபெற்று வருகின்றன.

இதில் முன்னணி வீரர்கள் பலர் தோல்வியடைந்து வெளியேறி அதிர்ச்சி அளித்துவரும் நிலையில்,



நேற்றுமுன்தினம் சென்டர் கோர்ட் மைதானத்தில் நடைபெற்ற ஆண்களுக்கான ஒற்றையர் டென்னிஸ் போட்டியின் இரண்டாம் சுற்றில் உலகின் முதல் நிலை ஆட்டக்காரரான செர்பியாவின் நோவாக் ஜோகோவிச், அமெரிக்காவின் பாப்பி ரெனால்ட்சை சந்தித்தார்.



இதில் நோவாக் ஜோகோவிச் 7-6, 6-3, 6-1 என்ற நேர் செட்டுகளில் பாப்பி ரெனால்ட்சை வீழ்த்தினார். இந்த வெற்றியின் மூலம் நோவாக் ஜோகோவிச் மூன்றாம் சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

இதேவேளை,விம்பிள்டன் டென்னிஸ் தொடரில் நடப்பு சம்பியனான செரீனா வில்லியம்ஸ் 3-ம் சுற்றுக்கு முன்னேறினார்.

அமெரிக்காவின் முதல் நிலை வீராங்கனையான செரீனா வில்லியம்ஸ், நேற்று முன்தினம் நடைபெற்ற மகளிர் ஒற்றையர் 2-ம் சுற்று போட்டியில், பிரான்சின் இளம் வீராங்கனை கார்சியாவை 6-3, 6-2 என்ற நேர்செட்களில் வீழ்த்தினார்.

## 13 ஐ மாற்ற...

நாட்டின் ஒன்பது மாகாணங்களில் வடக்கு தவிர்ந்த 8 மாகாண சபைகளிலும் அரசின் ஆதிக்கம் உள்ள நிலையில் மேற்படி தீர்மானம் நிறைவேற்றப்படுள்ளது.

வடமேல் மாகாணசபை (புத்தளம்), தென்மாகாண சபை (காலி), சப்பிரகமுவா மாகாண சபை (இரத்தினபுரி), மத்திய மாகாண சபை (கண்டி) ஆகியவற்றிலேயே 13 ஆவது சட்டத்திருத்தத்தை திருத்துவதற்கு ஆதரவான தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

இரண்டு அல்லது இரண்டிற்கு மேற்பட்ட மாகாண சபைகளை இணைப்பதற்கான தேவை இல்லை.

13-வது திருத்தத்தின் பிரகாரம் மாகாண சபைப்பட்டியலில் உள்ள சில விடயங்கள், அதிகாரங்கள் தொடர்பிலான மாற்றத்திற்கு சகல மாகாண சபைகளின் அனுமதியைப் பெற்றுக் கொள்வதற்கு பதிலாக பெரும்பான்மை மாகாண சபைகளின் அனுமதி போதுமானதாகும் ஆகிய இரண்டு யோசனைகளும் 13-வது அரசியலமைப்பு திருத்தத்தில் திருத்தம் செய்யப்பட முன்வைக்கப்பட்டுள்ளன.

இந்த யோசனைக்கு ஆளும் தரப்பினுள் எதிர்ப்புக்கள் இருந்த நிலையிலும், மேற்படி நான்கு மாகாண சபைகளிலும் வாக்கெடுப்பு நடத்தப்பட்டு யோசனைக்கு ஆதரவான தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

வடமேல் மாகாண சபைக்கான வாக்கெடுப்பு கடந்த வாரமும், தென் மற்றும் சப்ரகமுவ மாகாணங்களுக்கான வாக்கெடுப்பு கடந்த 25-ம் திகதியும் நடத்தப்பட்ட நிலையில், நேற்று மத்திய மாகாண சபையில் வாக்கெடுப்பு நடத்தப்பட்டது.

மத்திய மாகாண சபையில் நேற்று வெள்ளிக்கிழமை பிரேரணை சமர்ப்பிக்கப்பட்டபோது பிரேரணைக்கு ஆதரவாக 30 வாக்குகள் கிடைத்தன.

ஆளும் தரப்புடன் இணைந்து ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினர்கள் இருவரும் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் உறுப்பினர் ஒருவரும் பிரேரணைக்கு ஆதரவாக வாக்களித்துள்ளனர்.

எதிர்க் கட்சியினர், இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் வாக்களிப்பின் போது அவையில் பிரசன்னமாய் இருக்கவில்லை.

இதே வேளை 13 ஆவது திருத்தத்தில் மாற்றம் செய்யப்படுவதை ஆதரித்து வாக்களித்தமைக்காக சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் வட மேல் மாகாண சபை உறுப்பினர்கள் இருவர் கட்சியிலிருந்து நீக்கப்பட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (செ-11)

## இலங்கை...

வகையில் அவர் அனுப்பியுள்ள கடிதத்தில் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

"இலங்கையைக் கணிப்பதற்கு முன் நீங்கள் காத்திருக்கவும்" என்ற தலைப்பில் குறித்த கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இலங்கை அரசால் நியமிக்கப்பட்ட கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக் குழுவின் அறிக்கையை செயற்படுத்த இன்னும் பல திட்டங்களை செயற்படுத்த இலங்கை வேண்டியுள்ளது.

ஆணைக்குழுவின் அறிக்கையானது, தங்களுக்கு சமாதானத்தை ஏற்படுத்தி இனப்பிரச்சினைக்கு தீர்வு காண உள்நாட்டில் போட்டுக் கொண்ட பாதை அமைப்பு என கமலேஷ் ஷர்மா கூறியுள்ளார்.

மேலும் பொதுநலவாய அமைப்பானது, மனித உரிமைகள், ஊடகத் துறை மற்றும் நீதித்துறை என்பற்றை மேம்படுத்தும் பொருட்டு இலங்கையில் செயற்படுவதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (செ-11)

## 19-வது...

உலகின் மிகப்பெரிய ஜனநாயக நாடான இந்தியாவில் 69 தடவைகள் அரசியல் அமைப்பில் திருத்தம் கொண்டுவரப்பட்டுள்ளது. 19-வது அரசியல் அமைப்புத் திருத்தத்தை தயாரிக்கும் முயற்சியில் அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா தற்போது மும்முரமாக ஈடுபட்டுள்ளார்.

அடுத்த வாரமளவில் அதனைக் கொண்டுவர எண்ணியுள்ளோம் அரசியல் அமைப்புத் திருத்தத்தை முறையாக முன்னோக்கி செல்லும் வகையில் நாட்டுக்கும் நாட்டு மக்களுக்கும் பொருந்தாத நாட்டின் எதிர் காலத்திற்கும் ஒருமைப்பாட்டிற்கும் பொருந்தாத விடயங்களை நீக்கி அரசாங்கத்தின் கொள்கையை முன்னெடுப்பது தொடர்பிலேயே நாம் அண்மைக் காலமாக அதிகம் கலந்துரையாடினோம் என அவர் குறிப்பிட்டார். (செ-11)

## 22 இலங்...

அதன்படி, கடந்த வருடம் ஒகஸ்ட் மாதம் தொடக்கம் இதுவரை 1270 புகலிடக் கோரிக்கையாளர்கள் நாடு கடத்தப்பட்டுள்ளனர்.

அவர்களில் ஆயிரத்து 57 பேர் சுய விருப்பில் நாடு திரும்பியவர்கள் என அவுஸ்திரேலிய குடிவரவு அமைச்சர் பிரன்டன் ஓ கொன்னர் குறிப்பிட்டுள்ளார். (செ-11)

## மேர்வின்...

ஆதரவாளர்கள் மன்றாடியதுடன் சிதறு தேங்காயும் உடைத்துள்ளனர.

களனி பெண்கள் அமைப்பைச் சேர்ந்தவர்களே நேற்று வெள்ளிக்கிழமை இந்த பூஜை வழிபாடுகளில ஈடுபட்டுள்ளனர்.

முன்னேஸ்வரம் காளி கோவிலில் நடத்தப்படவிருந்த பலி பூஜைக்காக கொண்டு செல்லப்பட்ட கோழிகள் மற்றும் ஆடுகளை அமைச்சர் மேர்வின் சில்வா தலைமையிலான குழுவினர் 2011-ம் ஆண்டு செப்டெம்பர் 11-ம் திகதி எடுத்துச் சென்றமை குறிப்பிடத்தக்கது. (செ-11)

## இராணுவ...

கின்றனர்.

இராணுவத்தினர் காணிகளை நிர்வாகம் செய்து வருவதனால் அங்குள்ள சகல இன மக்களும் நெருக்கடிகளை எதிர்நோக்கி வருகின்றனர்.

ஏ9 வீதியில் பல சோதனைச் சாவடிகள் அமைக்கப்பட்டுள்ளது. 13-ம் திருத்தச் சட்டத்தை விடவும் பல முக்கியமான விடயங்கள் வடக்கில் காணப்படுகின்றன.

13-ம் திருத்தச் சட்டத்தை ரத்து செய்ய வேண்டுமென ஒரு தரப்பினரும் அதனை ரத்து செய்யக் கூடாது என மற்றுமொரு தரப்பினரும் கோரி வருகின்ற போதிலும் வடக்கு மக்களின் மெய்யான தேவைகளுக்கு தீர்வு வழங்க வேண்டிய அவசியத்தை எவரும் புரிந்து கொள்ளவில்லை என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (செ-11)

## இலங்கை - ஆபிரி...

மேற்கொண்டுள்ள ஜனாதிபதி ராஜபக்ஷவுடன் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை அந்நாட்டு அரச தலைவர் உத்தியோகபூர்வ இல்லத்தில் நடைபெற்ற இருதரப்பு பேச்சுவார்த்தையின்போதே அவர் இக்கருத்தை தெரிவித்தார்.

இதன்போது ஆபிரிக்க பிராந்தியத்துடன் தொடர்புகளை வளர்த்துக் கொள்வதற்கு ராஜபக்ஷ காட்டுகின்ற அர்ப்பணிப்பை பாராட்டிய தன்சானிய ஜனாதிபதி,

இலங்கைக்கும் தன்சானியாவுக்குமிடையிலான தொடர்புகளுக்கு நீண்ட வரலாறு ஒன்று உள்ளதென தெரிவித்தார்.

பரஸ்பரம் முக்கியத்துவம் வாய்ந்த விடயங்களை ஆராய்வதற்கு சந்தர்ப்பம் வழங்கப்படுவதனால் 2013 உலக ஒத்துழைப்பு கருத்தாடலில் கலந்துகொள்வதற்கு தமக்கு அழைப்பு விடுத்தமைக்காக ஜனாதிபதி ராஜபக்ஷ, தன்சானிய ஜனாதிபதிக்கு நன்றி தெரிவித்தார்.

தேயிலைக் கைத்தொழிலில் இலங்கைப் பெற்றுள்ள முன்னேற்றம் பாராட்டத்தக்கது எனத் தெரிவித்த ஜனாதிபதி கிக்வெத்தே, அத்துறையில் இலங்கையின் வெற்றிகரமான அனுபவங்களை பகிர்ந்துகொள்வதற்கு தான் விரும்புவதாகவும் தெரிவித்தார். கராம்பு மற்றும் தெங்கு கைத்தொழில் தொடர்பாகவும் இலங்கையிடமிருந்து கற்றுக்கொள்ள தமது நாடு தயாராகவும் இருப்பதாக தெரிவித்தார்.

இலங்கையின் தெங்கு ஆராய்ச்சி நிறுவனம் தொடர்பாக விவரித்த ராஜபக்ஷ, தொழில்நுட்ப ஒத்துழைப்பை வழங்குவதற்கு இலங்கையிலிருந்து ஒரு குழுவை அனுப்புவதற்கு சம்மதம் தெரிவித்தார்.

அரச - தனியார்துறைகளில் சிறப்பான கூட்டு பங்களிப்பு விடயத்தில் இலங்கை பெற்றுள்ள முன்னேற்றத்தை பாராட்டிய தன்சானிய ஜனாதிபதி, இலங்கையின் அனுபவத்தை தமது நாடு கற்றறிய விரும்புவதாகவும் தெரிவித்தார். பிரபலமான பிராந்திய கூட்டமைவாக இருக்கின்ற ஆபிரிக்க சங்கத்தின் பொன் விழாவுக்கு நல்வாழ்த்துக் கூறிய மகிந்த, ஆபிரிக்க பிராந்தியத்துடனான இலங்கையின் இருதரப்பு தொடர்புகள் 2005 ஆம் ஆண்டில் புதிய பாதையில் தடம் பதித்துள்ளது எனத் தெரிவித்தார்.

ஆபிரிக்க சங்கத்தின் கண்காணிப்பாளர் நிலையைப் பெற்றுக் கொள்வதற்கு இலங்கை விரும்புவதாகவும் அதற்கு தன்சானியாவின ஒத்துழைப்பை எதிர்பார்ப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இருநாடுகளுக்குமிடையிலான பொருளாதார ஒத்துழைப்பை வளர்த்துக்கொள்வதற்கு காலம் வந்துள்ளது எனத் தெரிவித்த ஜனாதிபதி மகிந்த, தெற்கு -தெற்கு உரையாடலில் புதிய வாய்ப்புகள் தோன்றியுள்ளன என சுட்டிக் காட்டினார். மக்களிடையே தொடர்புகளை வளர்ப்பதற்கு ஏற்றவகையில் தன்சானிய மாணவர்களுக்கு இலங்கையில் புலமைப்பரிசில்களை வழங்குவதற்கு தனது நாடு விரும்புவதாகவும் தெரிவித்தார்.

30 ஆண்டு கால பயங்கரவாதத்தை முடிவுக்குக் கொண்டுவந்து தற்பொழுது இலங்கை சமாதானப் பாதையில் பிரவேசித்துள்ளது எனவும் பயங்கரவாதிகள் அழித்த அனைத்து உட்கட்டமைப்பு வசதிகளையும் மீளமைப்பதில் அரசாங்கம் அர்ப்பணிப்புடன் செயலாற்றுகிறது எனவும், நிலக்கண்ணி வெடிகளை அகற்றுதல், உள்நாட்டில் இடம்பெயர்ந்தவர்களை மீளக் குடியமர்த்துதல் என்பவற்றின் முன்னேற்றம் பற்றியும் மகிந்த, தன்சானியா தலைவருக்கு விளக்கினார்.

வடக்கில் மாகாண சபைத் தேர்தல் செப்டெம்பர் மாதம் நடைபெறும் எனத் தெரிவித்த ஜனாதிபதி,

நாங்கள் யுத்தத்தில் வெற்றி பெற்றுவிட்டோம் இப்பொழுது நாம் மக்களின் இதயங்களை வெற்றிக் கொள்ள வேண்டுமெனத் தெரிவித்தார்.

இருதரப்பு பேச்சுவார்த்தைகளின் பின்னர் இலங்கைக்கும் தன்சானியாவுக்குமிடையில் விசாவை விடுவிப்பதற்கும் புலனாய்வு பிரிவிற்கும் பாதுகாப்பு பிரிவிற்குமிடையிலான ஒத்துழைப்புக்கும் கலாசார ஒத்துழைப்புக்குமான 3 உடன்படிக்கைகள் கைச்சாத்திடப்பட்டன. (செ-11)

## சூழ்நிலை கைதி...

சந்தேகத்தை ஏற்படுத்தி தீர்வு வழங்காமல் இருந்தால் அது பாரிய விளைவுகளை ஏற்படுத்தும்.

சிங்கள தேசியவாதத்தை விற்றுப பிழைக்கும் சிலரினால் நாட்டுக்கு பாதக நிலைமை ஏற்பட்டுள்ளது. ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ ஆட்சி பீடம் ஏறிய போது தேசிய இனப்பிரச்சினைக்கு விரைவில் தீர்வு வழங்குவதாக அறிவித்த போதிலும், இதுவரையில் தீர்வு வழங்கவில்லை.

ஆளும் கட்சியின் முக்கியஸ்தர்கள் என தங்களைக் கூறிக் கொள்ளும் சிலர் 13-ம் திருத்தச் சட்டத்தை ரத்து செய்ய முயற்சிக்கின்றனர்.

எனினும், 13-ம் திருத்தச் சட்டத்தை ரத்து செய்வதற்கு சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் அநேக முக்கியஸ்தர்கள் எதிர்ப்பை வெளியிட்டு வருகின்றனர்.

சுயமாக தீர்மானம் எடுத்தால் ஜனாதிபதி ஒரு போதும் 13-ம் திருத்தச் சட்டத்திற்கு எதிராக நடவடிக்கை எடுக்க மாட்டார்.

பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ தலைமையிலான கடும்போக்குவாதிகளின் சூழ்நிலைக் கைதியாக தற்போது ஜனாதிபதி மாறியுள்ளார்.

13-ம் திருத்தச் சட்டம் தொடர்பிலான பெரும்பான்மையான கருத்தை நசுக்குவதற்கு ஆளும் கட்சியின் சில கடும்போக்கு அமைப்புக்கள் முயற்சித்து வருகின்றன.

எனவே 13-ம் திருத்தச் சட்டத்தை ரத்து செய்யும் முயற்சிகளை தடுத்து நிறுத்த வேண்டும் என மங்கள சமரவீர தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டபோது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார். (செ-11)

## தமிழ் விழா...

சோன் தயாரிக்கப்பட்டுள்ளது.

பல உலகநாடுகளிலும் ஐ.நா மனித உரிமைகள் ஆணையத்திலும் இது திரையிடப்பட்டது.

இலங்கைக்கு எதிரான பல நாடுகளின் நிலைப்பாட்டுக்கு பெரிதும் துணை நின்ற ஆவணப்படம். போர்க் குற்றங்களுக்காக இலங்கை சர்வதேச விசாரணைக்கு உட்படுத்தப்பட வேண்டும் என்பதிலும் ஈழத்தமிழருக்கு ஓர் நீதி கிடைக்க வேண்டும் என்பதிலும் மிக உறுதியோடு செயற்படுபவர் இப் படத்தின் இயக்குநரான இங்கிலாந்தைச் சேர்ந்த கலம் மக்ரே.

ஈழத்தமிழரையும் தமிழ்நாட்டுத் தமிழரையும் புலத்தில் இணைக்கும் பாலமாய் அமையும் பெற்னா தமிழ் விழாவில் அனைத்துத் தரப்பினருக்கும் ஏற்றவகையில் இயல் இசை நாடக நிகழ்வுகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

தமிழுக்கும்தமிழருக்கும்பெருமை சேர்க்கும் வகையில் அமையும் நிகழ்வுகளில் கனடா மற்றும் அமெரிக்காவில் இருந்து 3500 இற்கும் அதிகமான தமிழர்கள் பங்கேற்க இருக்கின்றமை குறிப்பிடத்தக்கது. (செ-11)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விற்பனைக்கு

லேத் மெசின்,
மில்லிங் மெசின் (ஜப்பான்)
விற்பனைக்குண்டு

(3144)

தொடர்புகளுக்கு:- 0773608652
0212227623



**வீடு வாடகைக்கு உண்டு**

யாழ்ப்பாணம் நாவலர் வீதி, அன்ன சத்திரலேனில் முழுவதும் மாபிள் பதித்த, 2 Hall உடைய 7அறையுடன் கூடிய A/C வசதியுள்ள வாகனத் தரிப்பிடத்துடன் அமைந்தபுதியமாடி வீடு உடன் வாடகைக்கு உண்டு.

தொடர்பு:-0770476299
0770474116

(3145)


## சீனா, ரஷ்யா...

இதனால் தமது படையதிகாரிகளை பயிற்சிக்காக இந்தியா அனுப்பும் விடயத்தை மீள்பரிசீலனை செய்யவும், அவர்களுக்கு சீனா, ரஷ்யா மற்றும் பாகிஸ்தான் போன்ற நாடுகளில் பயிற்சிகளைப் பெற்றுக் கொடுக்கவும் இலங்கை அரசாங்கம் உத்தேசித்திருப்பதாக அறிய முடிகின்றது.

கடந்த வாரம் தமிழ்நாடு குன்னூர் வெலிங்டன் படைத்துறை பயிற்சிக் கல்லூரியில் ஒரு வருடப் பயிற்சிக்காகச் சென்ற இலங்கையின் படை அதிகாரிகளுக்கு அங்கு தமிழக அரசியல் கட்சிகளால் எதிர்ப்புத் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இதனையடுத்து வேறு மாநிலத்தில் பயிற்சியளிக்க ஏற்பாடுகளை இந்திய அரசு செய்த போதும், இலங்கை அரசாங்கம் அதனை நிராகரித்து அவர்களைத் திருப்பி அழைத்தமை குறிப்பிடத்தக்கது. (செ-11)


ஒன்பது வருடங்களின் பின்னர் மீண்டும்

**திருமறைக் கலாமன்றம்**
தயாரித்து வழங்கும்

## ஞானசௌந்தரி
(இசை நாடகம்)

1991 ஆம் ஆண்டிலும், 2004 ஆம் ஆண்டிலும் திருமறைக் கலாமன்றத்தின் தயாரிப்பில் யாழ்.நகரில் மேடையேற்றப்பட்டு அனைவரது மனங்களிலும் நிறைந்து பாராட்டுக்களைப் பெற்ற

**ஞானசௌந்தரியை**

**மீண்டும் ஒருமுறை பார்த்திட அரிய சந்தர்ப்பம்**

காலம் : ஜூன் 30, ஜூலை 01. 2013 (ஞாயிறு , திங்கள்)
நேரம் : மாலை: 6.45 மணி
இடம் : திருமறைக் கலாமன்ற அரங்கு

ஆசனங்களுக்கான பதிவுகளை யாழ்.திருமறைக் கலாமன்ற அலுவலகத்தில் மேற்கொள்ளலாம்.

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

**திருமறைக் கலாமன்றம்**

238, பிரதான வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே: 021222 2393

(சி-3790)



நாளை முதல்...

## சண்ஜெய உணவகத்தின் மற்றுமோர் சேவை

**மதிய உணவு**
- ஒடியல் கூழ் (யாழ்.முறைப்படி சனி, ஞாயிறு தினங்களில் மட்டுமே)
- மதிய உணவு புவே(Luhch Buffet)
- பிறைற் றைஸ் (Fried Rice)
- ரெட் நாடு (Red Naadu)
- சம்பா (Samba)

**இரவு உணவு**
- பிறைற் றைஸ் (Fried Rice)
- இடியப்பம்
- பிட்டு
- தோசை
- மரக்கறிக்கொத்து
- மச்சக்கொத்து
- றொட்டி

(Chicken) கோழி, (Mutton) ஆடு, (Cuttle fish) கணவாய் ( fish) மீன் இத்துடன் மேலும் நான்கு மரக்கறி வகைகள், Fruit Salad with Ice Cream

மேற்குறிப்பிட்ட உணவு வகைகள் எல்லாவற்றையும் விரும்பியபடி எவ்வளவும் உண்ணலாம்.

**ஒருவருக்கு 450 ரூபா மட்டும்**

இச்சேவை மு.ப. 11.30 - பி.ப.2.30 வரை,
இரவு 7.00 – 9.30 வரை மட்டுமே



Sunjeya Food Land
713, Hospital Road, Jaffna.
T.P: 021 221 7070, 0776777500





WICKramarachchi
Opticians

யாழ்.விக்கிரமாராட்சி அன் கம்பனியில் முதலாம் திகதி தொட்க்கம் 30 ஆம் திகதி-வரை இலவசமாக காது , கண் பரிசோதனைகள் மேற்கொள்ளப்படவுள்ளதால் செவிப்புலன் அற்றோர் மற்றும் கண்பார்வையற்றோர் உங்கள் பரிசோதனைகளை இலவசமாகப் பெற்றுக்கொள்ளலாம். மற்றும் மூக்குக் கண்ணாடிகளுக்கும் 25% - 50% வரை விலைக்கழிவும் வழங்கப்படும். எனவே நீங்கள் நாடவேண்டிய ஒரே இடம் யாழ்.விக்கிரமாராட்சி அன் கம்பனி உடன் தொடர்புகொள்ளுங்கள்

**J.M.விக்கிரமாராட்சி அன் கம்பனி**

229, 231 மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே: 021 221 9288

ISO :9001:2008

(சி-3791)



## BRITISH COLLEGE OF HIGHER STUDIES

BCHS

சர்வதேச பாடத்திட்டத்தின் தராதரத்திற்கு அமைய நவீன தொழில் நுட்பத்துடன் வழங்கும் புதிய கற்கை நெறிகள்

**Spoken English With Grammar - Quick Learning Course** (1 ½ Months)

ஆங்கிலத்தில் சரளமாகக் கதைக்க விரும்புவர்களுக்காகவே நடாத்தப்படுகிறது. தொழில் புரிபவர்களுக்கு பிற்பகல், சனி மற்றும் ஞாயிறு வகுப்புக்கள் உண்டு.
A/L பரீட்சை எழுதிய மாணவர்களுக்கு இது மிகவும் சிறந்தது.
வகுப்புக்கள் யாவும் புதிய தொழில் நுட்பத்திற்கமைவாகவும் (Video & Audio Visuals) கூடுதலான பயிற்சிகளுடன் நடாத்தப்படுகிறது.

**Diploma In English** (2 Months)

ஒரு தொழில் தேடுவதாயினும் சரி உயர் கல்வியினைத் தொடருவதாயினும் சரி ஆங்கிலத்தின் தற்காலத்தேவையும் அதிலே உங்களின் புலமை என்பதும் இன்றியமையாதது.
இத்தேவைகேற்ப எமது பாடத்திட்டங்களும் வகுப்புக்களும் ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது.
தொழில் புரிவோர் மாணவர்களுக்கென வகுப்புக்கள் உண்டு.

**IELTS** Toping centre for registering more IELTS candidates in Jaffna & Approved centre for IELTS online Registration system for Exam
< We gurantee minimum 6.0 band and above >
Duration: 2 ½ Months

**BI Exam - Student Visa மூலம் UK செல்பவர்களுக்கானது**

City & Guilds இன் B1 பரீட்சை ஏனைய ஆங்கிலப் பரீட்சைகளை விட மிகவும் இலகுவானதுடன் இது G.C.E. (O/L) English இற்கு ஒப்பானது. இது British High Commission னால் முற்றிலும் அங்கீகரிக்கப்பட்டதுடன் எமது கல்லூரியிலேயே பரீட்சைக்கும் தோற்றமுடியும்.

**A1 Exm - Sponsor / Settlement Visa** மூலம் UK செல்பவர்களுக்கான பரீட்சை

- U.K. அரசாங்கத்தினால் சிபார்சு செய்யப்பட்டது
- எமது கல்லூரியிலேயே பரீட்சைக்கு தோற்ற முடியும் சான்றிதழின் வலிது கால எல்லை அற்றது.
- நம்பிக்கைக்குரிய சர்வதேச பரீட்சை
- ஏனைய பரீட்சைகளை விட மிகவும் இலகுவானது

**Young Learners for English (YLE)** (வயதெல்லை : 7 - 12)

இது ஒரு சர்வதேசப் பரீட்சை என்பதுடன் University of Cambridge வழங்கும் சான்றிதழ்

| Batch - 1 | Batch - 2 | Batch - 3 | Batch - 4 |
|---|---|---|---|
| 29-06-2013 | 01-07-2013 | 06-07-2013 | 08-07-2013 |

மேலதிக விபரங்களுக்கும் இலவச ஆலோசனைகளுக்கும் இன்றே எம்மைத் தொடர்பு கொள்ளவும்.

Jaffna Branch:
No. 15, Sirambiyady Lane,
off Stanley Road, Jaffna. Tel: 021 222 4550

Vavuniya Branch:
No. 3, 6th Lane, Vairavarkovil Veethy,
Vairavarpulliyamkulam, Vavuniya.
Tel: 024 324 5287

Hot Lines : 0777222422 0777585913, 0714299935, 0777730074

(சி-3770)



# கிருபா லேணர்ஸ்

L

யாழ்.நகரின் முதல் தர அரச அனுமதி பெற்ற கனரக (AD) சாரதி பயிற்சி பாடசாலை

1. கனரக (AD) வாகனப் பயிற்சி, அசோக்லேலண்ட் பஸ் மூலம் வழங்கப்படும்
2. பெண்களுக்கு நவீன காரில் சாரதி பயிற்சி வழங்கப்படும்
3. எழுத, வாசிக்க தெரியாதவர்களுக்கு விசேட வீடியோ வகுப்பு நடைபெறும்.
4. தவணை முறைக் கட்டணம்
5. குறித்த காலப் பகுதியில் மிக விரைவாக சாரதி அனுமதிப் பத்திரம் பெற்றுத் தரப்படும்

**இரவு நேர பயிற்சி ஆரம்பம்**

தொடர்புகொள்ளவேண்டிய தொ.பே.இல: 0714546959

**யாழ்.நகரில் முதல் முறையாக ‘கிருபா லேணர்ஸ்’ வழங்கும் இரவு நேர சாரதி பயிற்சி நெறி**

**தலைமைக் காரியாலயம் :**
226, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே: 021 222 4353, 021 4923 200, 0777225292

(சி-3789)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ... முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 28.06.2013 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.